விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆடி 18 சனிக்கிழமை (03.08.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 227

# அதிக இராணுவம் வடக்கில் குவிப்பு!



கீர்த்தி தென்னக்கோன்

## கபே அமைப்பு சுட்டிக்காட்டு

**(கொழும்பு), ஆசியாவில் அதிகளவான இராணுவத்தினர் நிலை கொண்டுள்ள பிரதேசமாக வடக்கு பிரதேசத்தைக் கருத முடியும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.**

வடக்குத் தேர்தல் நிலைமைகள் குறித்து ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவிதது்ள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில,

இலங்கையின் வடக்கு மாகாணத்தின் ஒரு சதுர கிலோ மீற்றருக்கு மிகவும் அதிகளவிலான இராணுவத்தினர் உள்ளனர்.

சரியாகக் கணக்கிட்டு பார்த்தால் ஆசியாவில் அதிகளவான இராணுவம் நிலை கொண்டுள்ள பிரதேசமாக இலங்கையின் வடக்கு பிரதேசத்தைக் கருத முடியும்.

வடக்கில் இராணுவம் சிவில் நிர்வாக பணிகளில் ஈடுபடுகிறது.

அது பொருட்களை விற்பனை செயவது முதல் பாதுகாப்பு உட்பட பல விடயங்களில் (19ஆம் பக்கம் பார்க்க)

## பாப்பரசருக்கு மகிந்த அழைப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு பாப்பரசர் பிரான்ஸிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

ஆசிய நாடுகளுக்கு அடுத்த வருடம் மார்ச் மாதமளவில் விஜயங்களை மேற்கொள்ளவிருக்கின்ற பாப்பரசர் பிரான்ஸிஸை இலங்கைக்கும் விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அழைப்பு விடுத்துள்ளார் என ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்வது தொடர்பில் கரிசனை செலுத்தியுள்ளதாக பாப்பரசர் பிரான்ஸிஸ் கடந்த வாரம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-11)

## எங்களுடைய அரசு; எங்கள் இராணுவம்

### எப்போதும் என் நிலைப்பாடு இதுவே-டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

எங்களுடைய அரசாங்கம், எங்களுடைய படையினர் என்பது என்னுடைய வெளிப்படையான உறுதியான நிலைப்பாடு என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அத்தோடு இராணுவத்தினர் எங்களின் பாதுகாப்பிற்காக உள்ளனர். அவர்களுக்கு போதியளவு இடத்தினைப்பெற்றுக்கொடுத்து இடம்பெயர்ந்த (19ஆம் பக்கம் பார்க்க)

## குற்றம் புரிந்தோரென யாழ்ப்பாணத்தில் 218 பேர் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த வாரத்தில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 218 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார்.

இவற்றில் யாழ்.சிரேஷ்ட பொலிஸ அத்தியட்சகர் பிரிவிற்குள் அடிதடியில் ஈடுபட்ட 23 பேரும், சந்தேகத்தின் பேரில் 04 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 24 பேரும், மது போதையில் வாகனம் செலுத்திய 12 பேரும், சட்ட விரோத மது விற்பனையில் ஈடுபட்ட 10 பேரும், திருடடில் ஈடுபட்ட 04 பேரும், மோசடியில் (20ஆம் பக்கம் பார்க்க)

## வெலிவேரிய மோதல்!

### உள்ளக விசாரணைக்கு இராணுவம் நடவடிக்கை



கம்பஹா மாவட்டத்தில் வெலிவேரிய பகுதியில் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு தாக்குதல் நடத்தியதாக வெளியான குற்றச்சாட்டுக்களை அடுத்து, அந்த விவகாரம் தொடர்பில் இராணுவம் உள்ளக விசாரண்ண ஒன்றை நடத்தவுள்ளதாக அறிவிக்கப் (19ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் காணிகளிலுள்ள இராணுவம் வெளியேறும்!

### மகிந்த ஹத்துருசிங்க உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பலாலி பாதுகாப்பு தலைமையகம் தவிர்ந்த யாழ்.மாவட்டத்தில் தனியாரின் காணிகளில் உள்ள இராணுவத்தினர் விரைவில் அங்கிருந்து வெளியேற்றப்படவுள்ளதாக இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்.அரியாலைப் பகுதியில் 512 ஆவது இராணுவப் படைப்பிரிவின் கட்டுப்பாட்டின் கீழிருந்த 35 வீடுகளும் 6 காணித் துண்டுகளும நேற்றையதினம் அவற்றின் உரிமையாளர்களிடம் உத்தியோகபூர்வமாக (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி கண்டனம்

வெலிவேரிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவத்திற்கு ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த (19ஆம் பக்கம் பார்க்க)

## மன்மோகனுக்கு எதிர்ப்பு!

### ஆயிரக்கணக்கானோர் கைது



(சென்னை)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் தமிழக வருகைக்கு எதிர்ப்பு (19ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணை அவசியம்-ஐ.தே.க

கம்பஹா மாவட்டம் வெலிவேரிய ரத்துபஸ்வல பிரதேசத்தில் ஏற்பட்ட மோதல் நிலைமை தொடர்பில் சுதந்திரமான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணைகளை அரசாங்கம் உடனடியாக நடத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பாளர்களுக்கு அச்சுறுத்தல்!

### தேர்தல் ஆணையாளரிடம் கூட்டமைப்பு முறைப்பாடு

வட மாகாண சபைத் தேர்தலல் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களை அரச இயந்திரம் அச்சுறுத்தி வருகினறமை தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரிடம் தமிழ்த் தேசியக கூட்டமைப்பு முறையிட்டுள்ளது.

அத்துடன் வட மாகாண சபைத தேர்தலில் போட்டியிடும் கூட்டமைப்பின் வேட்பாளர்களை அச்சுறுத்தவில்லை என்று படைத் தலைமையகம் பொய்களைக் கூறி அனைவரையும் ஏமாற்ற முயலுகின்றது என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களை படையினரோ, புலனா (19ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கா கரிசனை

மக்கள் அமைதியான முறையில போராட்டம் நடத்தும் உரிமையை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டுமென இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அமைதியான வழியில் மக்கள் போராட்டங்கள் நடத்தப்படுவதனை தடுக்கக் கூடாது என ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது. வெலிவேரிய (19ஆம் பக்கம் பார்க்க)

## பிரதேச மக்கள் கவலை!

குடிநீரில் இரசாயன விஷம் கலநதுள்ளமைக்கு எதிராகவும் சுத்தமான குடிநீரை வழங்குமாறு கோரியும் ஆர்ப்பாட்டம் நடத்திய தென் பகுதி மக்களை கொலை செய்த இராணுவம், வடக்கில் நடந்த போரின போது தமிழர்கள் மீது எந்தளவுக்கு கடுமையாக (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# அதிகாலை வேளை திருடர்கள் கைவரிசை

சாவகச்சேரி டச்சு வீதியிலுள்ள வீடொன்றில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை வேளை பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

வீட்டார் பூப்புனித நீராட்டு விழாவிற்கான ஆயத்த வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. திருடர்கள் யன்னல் வழியாக தடியினை விட்டு புகைப்படக் கருவி மற்றும் நகைகள் இருந்த பொதியினை இழுத்து எடுத்து தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இத்திருட்டுச் சம்பவத்தினை விசாரணை செய்தசாவகச்சேரிபொலிஸார்சந்தேகத்தின்பேரில் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.(செ-9,29)


## வாகனம் வாடகைக்கு

A/C வசதியுள்ள சொகுசு கார் மற்றும் வான் சொந்தத் தேவைக்கும், மற்றும் திருமண வைபவங்களுக்கும் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு வழங்கப்படும்.



சாரதியுடன் அல்லது சாரதி இல்லாமலும் வழங்கப்படும்.

தொடர்பு : 0774747217, 0773246758


## அரியாலைப் பகுதியில் இருந்த
# 35 வீடுகளும் 6 காணிகளும் உரிமையாளர்களிடம் கையளிப்பு

யாழ்.மாவட்டத்தில் 512-வது இராணுவப் படைப் பிரிவின் கட்டுப்பாட்டின் கீழ் அரியாலைப் பகுதியில் இருந்த 35 வீடுகளும் 6 காணித்துண்டுகளும் நேற்றையதினம் அவற்றின் உரிமையாளர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் அங்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திர சிறி, யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க மற்றும் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி றூபினி வரதலிங்கம் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் காணிகள் மற்றும் வீடுகளுக்கான ஆவணங்களை கையளித்தார்.

இதனையடுத்து அமைச்சர் ஆளுநரிடம் ஆவணங்களை கையளித்தார் அதன்பின்பு ஆளுநர் மேலதிக அரசாங்க அதிபரிடம் ஆவணங்களை கையளித்தார்.

சுமார் 33 வருடங்களின் பின்பு இந்தக் காணிகள் அதன் உரிமையாளர்களிடம் நேற்று கையளிக்கப்பட்டன.

இந்தப் பகுதியில் வசித்து வந்த மக்கள் 1990-ம் ஆண்டு இடம்பெயர்ந்து சென்றதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.(செ-6)

# மீள்குடியேற்றம் மக்கள் கைகளில்

யாழ்.பலாலிப் பகுதியில் மீள்குடியேற்றம் மக்களின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

512-வது படைப் பிரிவின் கட்டுப்பாட்டின் கீழிருந்த காணிகள் மற்றும் வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும்தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழிருந்த காணிகள்மற்றும் வீடுகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றன.

உயர்பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட பலாலியில் இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவது மக்களின் கைகளிலேயே தங்கியிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.(செ-6)

# குடும்பஸ்தர் ஒருவருக்கு விளக்கமறியல் விதிப்பு

(கரவெட்டி)

நெல்லியடி பொலிஸ் பிரிவில் குடும்பஸ்தர் ஒருவர் தனது மனைவி மற்றும் பிள்ளைகளை அடித்து துன்புறுத்தி வந்த குற்றச்சாட்டில் அவரை தொடர்ந்தும் எதிர்வரும் 7-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

மேற்படி பொலிஸ் பிரிவில் குறித்த குடும்பஸ்தர் தனது மனைவி மற்றும் பிள்ளைகளை தொடர்ந்தும் துன்புறுத்தி வந்ததாக மனைவியினால் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில் பருத்தித்துறை நீதிமன்றத்தினால் குறித்த குடும்பஸ்தர் ஏற்கெனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இவ்வழக்கு விசாரணை நேற்றைய தினம் மீண்டும் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மன்றில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த சந்தேக நபரான குடும்பஸ்தரை தொடர்ந்தும் எதிர்வரும் 7-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (செ-9,24)


## உக்ர ரத சாந்தி நூல் வெளியீடு

யாழ். வண் வடகிழக்கு கொண்டலடி விநாயகர்
தேவஸ்தான பிரதம குரு
சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள், கௌரீஸ்வரி
தம்பதிகள் உக்ர ரத சாந்தி சமஸ்கிரத

## நூல் வெளியீடு

காலம்
03.08.2013 இன்று (சனிக்கிழமை) பிற்பகல் 2 மணி
இடம்
யாழ். கந்தர்மடம் செட்டியந்தாழ்வு
ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்
தலைவர்
பேராசிரியர் இலக்கிய கலாநிதி
**பிரம்மஸ்ரீ ப. கோபால கிருஷ்ண ஐயர்**
வாழ்நாள் பேராசிரியர்
யாழ். பல்கலைக் கழகம்

***மங்கள விளக்கேற்றல்***
***வேத பாராயணம்***
தர்மசாஸ்தா குருகுல மாணவர்கள்
***திருமுறை பாராயணம்***
து. கேபாலசிங்கம்(மேற்படி ஆலய தர்மகர்த்தா)
***ஆசியுரை***
சிவஸ்ரீ ஜம்பு ஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள்
சர்வதேச இந்து மதகுரு பீடாதிபதி (சுதுமலை)
***வாழ்த்துரை***
சிவஸ்ரீ தானு மகாதேவக்குருக்கள்
(தர்மசாஸ்தா குருகுல அதிபர், இணுவில்)
***வரவேற்புரை***
சிவஸ்ரீ பாலஸ்ரீஸ் கந்தராஜக் குருக்கள்
***தலைமையுரை***
தலைவர் அவர்கள்
***வெளியீட்டு உரை***
பிரம்ம ஸ்ரீ ப. சிவானந்த சர்மா
ஸ்ரீ வித்யா கணனி அச்சகம் சர்வானந்த மய பீடம் இணுவில்
***சிறப்புரை***
சிவஸ்ரீ க. பிரணதார்த்தி ஹரக் குருக்கள்
(சிவன் தேவஸ்தானம், யாழ். பல்கலைக் கழகம்
***முதற் பிரதி***
பிரம்மஸ்ரீ ஸ்ரீ. கிருஸ்ணகாந்த சர்மா
(பல்கலைக் கழக விரிவுரையாளர்
நல்லூர் சிவன் தேவஸ்தானம்
சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள்
(சிவன் தேவஸ்தானம் வல்வெட்டித்துறை)
***கௌரவ பிரதி***
பிரம்மஸ்ரீ ப. இராஜகோபால சர்மா (நீராவியடி)
பிரம்ஸ்ரீ சு. நவநீத சர்மா (நீராவியடி
***சிறப்புப் பிரிவு***
சிவஸ்ரீ சந்திரா ஸ்ரீபதிக் குருக்கள் (யாழ்ப்பாணம்)
சிவஸ்ரீ நா. நல்லூர் தாசக் குருக்கள் (கொக்குவில்)
சிவஸ்ரீ கு. வல்லவேஸ்கரக் குருக்கள் (அராலி)
***ஏற்புரை***
சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்கள்
***நன்றியுரை***
சிவஸ்ரீ மங்களேஸ்வரக்குருக்கள் (அரியாலை)

இவ் விழாவில் அனைத்து குருமார்களையும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
குறிப்பு : அனைவருக்கும் நூல் அன்பளிப்பாக வழங்கப்படும்.
தொலைபேசி : 021 222 1123 (3529) - குடும்பத்தினர் -


# தேவாலயத்தில் பணம் திருட்டு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கரம்பொன் அன்னை வேளாங்கன்ணி தேவாலயத்தில் உண்டியல் பணம் மற்றும் ஆலய பொருட்கள் என்பன களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் கடந்த 28-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று இரவு வேளையில் தேவாலய கூரை வழியாக ஆலயத்தினுள் நுழைந்தவர்களே ஆலயத்திலிருந்த சொரூபம் ஒன்றினை எடுத்துச் சென்றுள்ளதுடன் அங்கிருந்த உண்டியலை உடைத்து உண்டியலில் இருந்தபணத்தினையும் கொள்ளையடித்துள்ளனர்.

இதேவேளை ஆலய வளாகத்தில் அமைந்துள்ள ஆலயத்திற்கு சொந்தமானவிற்பனை நிலையத்தினுள் இருந்த ஆலய விற்பனைப் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களும் களவாடப்பட்டுள்ளன.

குறித்த சம்பவ தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறையிட்டதை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு மோப்ப நாய்கள் சகிதம் விரைந்த பொலிஸார் தேடுதல் மற்றும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இத் தேவாலயத்தில் இதற்கு முன்னரும் பல தடவைகள் இவ்வாறான திருட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-5)

# விளையாட்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம முன்னேற்றச் சங்கம், மத்திய சன சமூக நிலையம், மத்திய கல்வி மேம்பாட்டுப் பேரவை, மத்திய முன்பள்ளி ஆகியவை இணைந்து நடத்தும் விளையாட்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் நடைபெறவுள்ளது.

மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தின் தங்கராஜா இரட்ன குணசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கந்தசாமி விமலநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் சன சமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.ச.சுபாஸ்சந்திரன், கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை அதிபர் திருமதி விமலராஜா கடம்பமலர், கோண்டாவில் மத்தி கிழக்கு ஜே/118 பிரிவு கிராம் சேவையாளர் திருமதி குணரஞ்சிதம் பிரதாபராஜன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக தில்லையம்பதி பரிபாலனசபை தலைவர் தம்பிஜயா ராதா, ஸ்ரீ வாகிஸ்வரி சனசமூக நிலையத்தலைவர் கு.முருகையா, ஞானஒளி சனசமூக நிலைய தலைவர் தே.ரவி, இளைஞர் சனசமூக நிலைய தலைவர் தர்மலிங்கம் பாஸ்கரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-5)

# 50-வது ஆண்டு நிறைவும் விளையாட்டு போட்டியும்

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை உதயசூரியன் கழகத்தின் 50-வது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த விளையாட்டுப் போட்டியும் எதிர்வரும் 9, 10,11-ம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

உதய சூரியன் உல்லாச கடற்கரை மைதானத்தில் மூன்று நாட்கள் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் நீச்சல் போட்டி, படகுப்போட்டி, கட்டுமரம் வலித்தல், ஆண்களுக்கான பாரம் தூக்கி ஓடுதல், தலையணை சண்டை, தம்பதியினருக்கான சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம் போன்ற பல போட்டிகள் நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 8-ம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தில் விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9,10)

# விளக்கமறியல் நீடிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி நெல்லியடி மக்கள் வங்கியில் கடந்த 31-ம் திகதி வியாழக்கிழமை போலி நகைகளை அடகு வைத்த 4 சந்தேக நபர்களை எதிர்வரும் 7-ம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பல வங்கிகளில் பல லட்சம் ரூபா பெறுமதியான போலி நகைகளை அடகு வைத்தவர்கள் என சந்தேகிக்கப்படும் குறித்த 4 சந்தேக நபர்களும் கடந்த வியாழக்கிழமை நெல்லியடி மக்கள் வங்கியில் போலி நகைகளை அடகு வைத்தவேளை நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் பருத்தித்துறை நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வழக்கு விசாரணை மீண்டும் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் சந்தேக நபர்களாக இரு ஆண், இரு பெண் உட்பட 4 சந்தேக நபர்களையும் தொடர்ந்தும் 7-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (செ-9,24)

# பொது இடத்தில் மது; 4 நபர்களுக்கு அபராதம்

(கரவெட்டி)

வடமராட்சி நெல்லியடி பொலிஸ் பிரிவில் பொது இடத்தில் மது அருந்திய 4 நபர்களுக்கு 24 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

மேற்படி பொலிஸ் பிரிவில் பொது இடத்தில் வைத்து மது அருந்திய மூன்று நபர்களையும் மது அருந்தி விட்டு பொது இடத்தில் அசிங்கமான முறையில் நடந்து கொண்ட நபர் ஒருவருக்கும் எதிராக நெல்லியடிப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர் .

இவ்வழக்கு விசாரணை நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையினால் குற்றவாளியாகக் கண்டு 4 நபர்களுக்கும் தலா 6 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (செ-9,24)


## பிள்ளையார் இன்

சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும். 6 - 10 pm

**12 மணிமுதல் 3 மணிவரை** மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன.

**சைவ உணவு: 160/-** **அசைவ உணவு 185/-**

(C-4195)

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு



உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் மற்றும் கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு நியாயமான விலையில் காலை 06:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

இப்போது கோழிப் பாகங்களும் (Chicken Parts) பெற்றுக் கொள்ளலாம்.

(3527)

நல்லூர் பாம் சென்ரர். 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மாயை

எனது நண்பர் ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தேன்.

"இந்த உலகத்தை மகான்களெல்லாம் மாயை" என்று சொல்கிறார்களே.

அதை நான் நம்பமாட்டேன் என்றார் அவர்.

"என்ன திடீரென்று இப்படிச் சொல்கிறீர்கள்?" என்றேன்.

"இந்த உலகத்தில் எவ்வளவு காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. எல்லாவற்றையும் கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்படி இருக்கும் போது இதைப் போய் மாயை என்று சொன்னால் எப்படி?" என்றார்.

மாயை என்றால் ஏதோ அடியோடு இல்லாத ஒன்று என்று அவர் நினைக்கிறார்.

அதனால் அப்படி சொல்கிறார்.

மாயை என்று அடியோடு இல்லாத ஒன்று இல்லை. முயல் கொம்பு, குதிரைக் கொம்பு என்று சொல்கிறோம் அல்லவா. அப்படி ஒரு பொருள் அடியோடு இல்லை. ஆனால், மாயை என்பது இருப்பதாக நினைக்கும் வரைக்கும் இருப்பதாகவே தோன்றும்.

கானல் நீர் மாதிரி. கானல் நீர் கண்ணுக்குத் தெரியும். அதாவது தூரத்தில் தண்ணீர் இருப்பது போல் தோன்றும். அங்கு தண்ணீர் இருக்காது. இருந்தாலும் தண்ணீர் இருப்பது போலவே தோன்றும். அதுதான் மாயை.

ஒரு கயிறு கீழே கிடக்கிறது. இருட்டு நேரத்தில் அதைப்பாம்பு என்று தவறாக நினைத்து விடுகிறோம். அப்போது என்ன ஆகிறது?

நிஜமான பாம்பிற்கு உண்டாக்கும் அத்தனை பயத்தையும் பதற்றத்தையும் அது நம்மிடம் உருவாக்கி விடுகிறது.

அதேமாதிரி... உலகம் உண்மையிலேயே நிரந்தர சத்தியமாக இல்லையென்றாலும் கூட, அதை நாம் சத்தியமாக நினைக்கும் வரை அது மாதிரியான எல்லா காரியங்களும் நடக்கிறன.

நாம் கனவு காண்கிறோம். கனவு காணும் வரைக்கும் அந்தக் கனவு நிஜமாகத்தான் இருக்கும். விழித்துக் கொண்டால் அது ஒன்றுமில்லை என்று ஆகிவிடும்.

நாம் அஞ்ஞானத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் வரைக்கும் உலகம் மெய்யாக இருக்கும். நாம் ஞான நிலையில் முழித்துக் கொண்ட பின்னர் அது மறைந்து விடும்.

அதனால் இந்த உலகத்தில் நாம் எப்படி வாழ வேண்டும் என்று கேட்டால், தாமரை இலையில் தண்ணீர் போல் வாழ வேண்டும் என்கிறார்கள் பெரியவர்கள்.

ஒட்டாமல் வாழும் வாழ்வுதான்அது. தாமரை இலை, தண்ணீர் தான் இருக்கும். இருந்தாலும் தண்ணீர் இதில் ஒட்டாது. ஒரு துளி அதன் மேல் விழுந்தாலும் அது நிற்காது ஓடிப் போய்விடும்.

இந்தக் காலப் பிள்ளைகள் அதற்கு புதுவிளக்கம் கொடுக்கிறார்கள். கொஞ்ச நாளைக்கு முதல் ஒரு சின்னப் பையன் என்னிடம் வந்து இன்று ஒரு தகவலில் என்னென்னமோ சொல்கிறீர்களே... தாமரை இலையில் தண்ணீர் நிற்காது. ஏன் தெரியுமா? சேர்? என்று கேட்டான்.

"நீயே சொல்லப்பா என்றேன்"

"தாமரை இலையில் தண்ணீர் நிற்காது. ஏன்னா.... அதுக்குக் கால் கிடையாது" என்றான்.

உலகமே மாயம். வாழ்வே மாயம்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளின் இரண்டாம் நாள் நிகழ்வுகள்

(மன்னார்)

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மன்னார் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள மூன்று நாள் நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை மன்னார் நகர மண்டபத்தில் நடைபெறும்.

இரண்டாம் நாள் நிகழ்வு ஆய்வரங்கம், இலக்கிய அரங்கம், கலையரங்கம் ஆகிய மூன்று அரங்குகளாக இடம்பெறும்.

இவ்விழாவின் ஆய்வரங்க அமர்வு காலை 9 மணிக்கு நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அரங்கில் பேராசிரியர் எஸ்.மௌனகுரு தலைமையில் இடம்பெறும்.

இதன்போது **தனிநாயகம் அடிகளாரின் தனித்துவ ஆளுமை** என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறை தலைவர் பேராசிரியர் துரை மனோகரன், **தனிநாயகம் அடிகளாரின் தமிழ்த்தூதுப் பயணங்களும் அதன் விளைவுகளும்** என்ற தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ரூபி வலன்ரீனா பிரான்சிஸ், **தனிநாயகம் அடிகளாரின் இதழியல் பணிகள்** என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன், **தனிநாயகம் அடிகளாரும் உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளும்** என்ற தலைப்பில் கிழக்குப் பல்கலைக் கழக கிறிஸ்தவத்துறை விரிவுரையாளர் அருட் திரு ஏ.ஏ.நவரெட்ணம் அடிகளார், **தனிநாயகம் அடிகளாரும் ஒப்பியல் ஆய்வும்** என்ற தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைப் பேராசிரியர் செ.யோகராசா ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இதன் இரண்டாவது அரங்கு இலக்கிய அரங்காக அமைந்துள்ளது. கலாநிதி மனோகரக் குருக்கள் அரங்கு எனப் பெயரிடப்பட்ட இவ் அரங்கானது மன்னார் தமிழ் சங்கத்தின் துணைத்தலைவர் சிவசிறி தர்மகுமாரக் குருக்கள் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம்.எம். சியான், மடு வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்டச் செயலகத்தின் பிரதம கணக்காளர் க.கமலேஸ்வரன், நானாட்டன் கோட்டக் கல்வி அதிகாரி எஸ். டேவிட், மட்டக்களப்பு ஆசா யோசவ்வாஸ் வித்தியாலய அதிபர் சுந்தரம் பாண்டியன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் **பாரதி கண்ட கனவு... நனவாகி நிலைத்துள்ளது, இல்லை கனவாகிக் கலைந்துள்ளது** என்ற தலைப்பில் பட்டிமண்டபமும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து தமிழ்மாமணி அகளங்கன் தலைமையில் **தமிழால் வாழ்வோம்** என்ற தலைப்பில் கவியரங்கமும் இடம்பெறும்.

அத்துடன் மாணவர்களின் பல்துறை நடன நாட்டிய நிகழ்வுகளும் இடம்பெறும்.

இதன் மூன்றாவது அரங்கு மாலை 6.30 மணிக்கு கவியரங்கமாக ஆரம்பமாகும். இந் நிகழ்விற்கு **கவிஞர் மொத்தம் போல் அரங்கம்** என பெயரிடப் பட்டுள்ளது.

மன்னார் தமிழ் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் வைத்திய கலாநிதி எஸ். லோகநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மொணராகலை அரசாங்க அதிபர் ஏ.பத்திநாதன், சிறப்பு விருந்தினராக மன்னார் பிரதேச செயலாளர் எஸ். தயானந்தா, நானாட்டான் பிரதேச செயலாளர் சி.ஏ. சந்திரஜயா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் அமர்வின் முக்கிய நிகழ்வாக மன்/ சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மாணவர்களால் பொம்மலாட்டம் என்ற சமூக நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மாணவர்களின் பல்வேறு வகையான நடன நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 90 | 120-160 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 120 | 100 |
| தக்காளி | 60 | 60 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 | 60 |
| கோவா | 80 | 70 | 120 | 100 |
| கரட் | 120 | 100 | 140 | 140 |
| பூசணி | 40 | 20 | 40 | 40 |
| புடோல் | 30 | 20 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 120 | 140-180 | 160 |
| பெரிய வெங்காயம் | 110 | 110 | 120 | 100 |
| பாகற்காய் | 60 | 80 | 40 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 20 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | — | 120 |
| பயற்றங்காய் | 40 | 50 | 40 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 40 | 40 | 60 | 60 |
| கறிமிளகாய் | 60 | 70 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 60 | 100 | 200 | 120 |
| போஞ்சி | 100 | 140 | 100 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | — | — | — |
| கீரை - 1 பிடி | 10 | 15-20 | 30 | 20 |
| தேசிக்காய் | 140 | 100 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 35 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 | 120 |

# இராசி பலன்

*03.08.2013*
*(ஆடி 18, சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு*
*துவாதசி முன்னிரவு 10.35 மணிவரை*
*மிருகசீரிடம் பிற்பகல் 1.43 மணிவரை*
*இராகுகாலம் 9.04-10.34 மணிவரை*
*சுபநேரம் 3.04-4.34 மணிவரை*

**மேடம்** பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியம் எளிதில் கைகூடும், உடன்பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர், தனவரவுகள் திருப்தி கரமாக அமையும்.

**இடபம்** வருமானம் திருப்தி தரும், போசன நன்மையுண்டு, தொலைப்பேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், வாக்கு மேன்மையுண்டு, சுப காரியப் பேச்சுக்கள் நன்மை தரும்.

**மிதுனம்** மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பொது நல ஈடுபாட்டில் புகழ் பெறுவீர்கள், கற்பனை மிகுதியான நாள், வியாபார நலன் கருதி புதிய தீர்மானங்கள் எடுப்பீர்கள்.

**கடகம்** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும், சயனசுகக் குறைவான நாள்.

**சிங்கம்** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், உறவினர் வருகையுண்டு, போசன சுகமுண்டு, தனவரவு திருப்தி தரும், இனிய தகவல்கள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

**கன்னி** அதிகாரத்துடன் செயற்படுவீர்கள், நண்பர்களும் உறவினர்களும் வலிய வந்து உதவ முன்வருவார்கள், ஆரோக்கியமான நாள், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்** தந்தை வழி உறவில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம். எதிர்பாராத பயணங்களால் பலனுண்டு, தொழில் சம்பந்தமாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**விருச்சிகம்** வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், பித்தசம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், முயற்சிகளில் தாமதங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**தனுசு** தாராளமாக செலவு செய்து மகிழும் நாள், களஸ்திர சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும், விதத்தில் அமையும், கௌரவமான நாள்,

**மகரம்** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், கைமாற்றாக கொடுத்த பணம் கைக்கு கிடைக்கலாம், காரிய அனுகூலமுண்டு, செய்தொழில் சிறப்புக்கள் வந்து சேரலாம்.

**கும்பம்** சுப செய்திகள் வந்து சேரலாம், தொழில் ரீதியில் புதிய திட்டங்கள் திட்டுவீர்கள், நீண்ட நாளைய கோரிக்கைகள் நிறைவேறலாம், சொத்துக்களால் நன்மையுண்டு.

**மீனம்** எதிர்ப்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், தாய் வழி உறவினர்களால் நன்மையுண்டு, தொலை தூரச் செய்திக ளால் நன்மையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவையற்ற கூட்டமாக நின்ற இளைஞர்களுக்கு அபராதம்

(கரவெட்டி)

கரணவாய் மூத்தவிநாயகர் கோவிலடிப் பகுதியில் தேவையற்ற முறையில் கூட்டமாக நின்ற 6 நபர்களையும் வதிரி ஸ்ரீபரந்தாமன் ஆச்சிரம மடத்திற்கு தலா 2ஆயிரம் ரூபாவை செலுத்த உத்தரவிட்டதுடன் ஒவ்வொருவரையும் 5 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று வெள்ளிக் கிழமை அனுமதித்தது.

மேற்படி பகுதியில் குறித்த 6 நபர்களும் வீதியினால் செல்லும் பாடசாலை மற்றும் தனியார் வகுப்பு மாணவிகளுடன் சேஷ்டை புரிவதாகவும் அத்துடன் தேவையற்ற விதத்தில் கூட்டமாக நிற்பதாகவும் நெல்லியடிப் பொலிஸாரால் வழக்குப் பதியப்பட்டது.

இவ் வழக்கு விசாரணை நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான், குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையினால் குற்றவாளிகளாகக் கண்டு குறித்த 6 நபர்களையும் எச்சரித்ததுடன் ஒவ்வொருவரும் வதிரி ஸ்ரீபரந்தாமன் ஆச்சிரமமடத்திற்கு 2 ஆயிரம் ரூபா செலுத்தி அதன் பற்றுச்சீட்டை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதிக்கு மன்றில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அத்தோடு ஒவ்வொரு நபர்களும் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்ல நீதவான் உத்தரவிட்டார். (அ-9-24)




நன்றி: FT

# அரசியலுக்காக போட்டியிடவில்லை அபிவிருத்திகாகவே போட்டியிடுகின்றோம்

## பூட்டு சின்னத்தில் போட்டியிடும் சுயேட்சைக் குழுவினர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

படையினரை தேர்தல் காலத்தில் முகாம்களுக்குள் முடங்குங்கள் என கூற இயலாது. அவர்களது பாதுகாப்பு முக்கியமானது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து வடக்கு மாகாண சபைத் தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடும் அருளம்பலம் பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

யாழ்.ஊடக நிலையத்தில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் பூட்டுச் சின்னத்தில் போட்டிடுகிறோம். கடந்த 4 மாதங்களாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து மக்கள் பணிகளை முன்னெடுத்து வந்தோம்.

நாம் அரசியிலிருந்து பிரிந்து தேர்தலில் போட்டியிட்டாலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கைகளையே பலப்படுத்துவோம்.

அரசியலுக்காக தேர்தலில் போட்டியிடவில்லை. அபிவிருத்திக்காகவே வடக்கில் போட்டியிடுகின்றோம். கடந்த காலங்களில் எமது மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கி உள்ளோம்.எதிர்காலத்திலும் வழங்கவுள்ளோம்.

கணவனை இழந்த விதவைகள், மீனவர்கள், முன்னாள் போராளிகள் என அனைவருக்கும் அமைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு உதவிகள் வழங்கவுள்ளோம்.

எமது கருத்தின்படி அரசியல் அறிவு இருந்தால் மட்டும் அரசியல் செய்ய முடியாது மனிதாபிமானமும் இருக்க வேண்டும்.

அரசியல் கதைப்பதற்கு பாராளுமன்றம் உள்ளது. மாகாண சபையானது அபிவிருத்தியை மட்டுமே இலக்காகக் கொண்டது. இச்சந்திப்பில் கலந்துகொண்ட பாலசுப்பிரமணியம் கோபாலகிருஷ்ணன் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்பும் தூண்களாக இராணுவத்தினர் உள்ளனர். எனினும் தேர்தலில் இராணுவத்தினரைக் களமிறக்கும் எண்ணம் எனக்கு இல்லை.

அபிவிருத்திப் பணிகளை இராணுவத்தினருடன் இணைந்தே மேற்கொள்வோம். மேலும் போராளிகள் அனைவரும் எம் உறவுகள்தான். அவர்கள் எமக்காகவே உயிரிழந்துள்ளனர். இது இரத்தத்தில் தோய்ந்த பூமி என அவர்கள் இருவரும் தெரிவித்தனர். (அ-4)

# மருதங்கேணியில் நடமாடும் சேவை

மருதங்கேணி பிரதேச செயலகத்தினால் நடமாடும் சேவை எதிர்வரும் 7, 8 ஆம் திகதிகளில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை குடத்தனை கிறிஸ்து நற்தூது பணியகத்திலும் மறுநாள் 8 ஆம் திகதி வியாழக்கிழமை மருதங்கேணி பிரதேச செயலகத்திலும் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

இதில் புதிய தேசிய அடையாள அட்டை, தொலைந்த அல்லது திருத்தம் செய்த பிரதி தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் என்பனவற்றை பெற்றுக் கொள்ள முடியும்.

அத்தோடு, பதிவாளர் திணைக்கள சேவை, சமாதான நீதவான் சேவை, பொலிஸ் சேவை. என்பனவும் இங்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-19)

# சமுத்திர தீர்த்தம்

(யாழ்ப்பாணம்)

பொலிகண்டி மருதாம்புலம் பத்திரகாளி அம்மன் தேவஸ்தான ஆடிப்பூர அலங்கார உற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

உற்சவத்தின் எதிர்வரும் 9-ம் திகதி வெள்ளிக் கிழமை முற்பகல் 7 மணிக்கு சமுத்திர தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது. (அ-5)

# நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோ.சைக்கிள் அபேஸ்

(தும்பளை)

பருத்தித்துறை முதலாம் குறுக்குத் தெரு பகுதியிலுள்ள மீன்சந்தைக்கு அருகாமையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை களவாடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, மேற்படி பகுதியில் மீன்சந்தைக்கு அருகில் நிறுத்தி வைக்கப்படிருந்த 49C ரகத்தையுடைய NPWS 2445 என்ற இலக்கத்தையுடைய மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி பருத்தித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-9-19)

# விளையாட்டு கழகங்களுக்கு கட்சிகள் நிதி ஒதுக்கியுள்ளன

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட எட்டு விளையாட்டு கழகங்களுக்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஈ.பி.டி.பி. கட்சி மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர்.

இதில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு 48 ஆயிரத்து 500 ரூபாவும் வதிரி ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்திற்கு 24 ஆயிரத்து 250 ரூபாவும் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு 29 ஆயிரத்து 100 ரூபாவும் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்திற்கு 29 ஆயிரத்து 100 ரூபாவும் அத்தோடு 48 ஆயிரத்து 500 ரூபாவும் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகத்திற்கு 29 ஆயிரத்து 100 ரூபாவும் அதனுடன் 24 ஆயிரத்து 250 ரூபாவும் கரவெட்டி செல்வா விளையாட்டுக்கழகத்திற்கு 24 ஆயிரத்து 250 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த விளையாட்டுக்கழகங்களின் தலைவர், செயலாளர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளரிடம் தமக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான மதிப்பீட்டினை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தெரிவித்துள்ளார். (அ-9-24)




# புலமைப்பரிசில் கருத்தரங்கு நாளை

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் வருடாந்தம் நடத்தி வரும் தரம் 5 மாபெரும் இலவச புலமைப் பரிசில் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக் கிழமை,எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய தினங்களில் தொடர் கருத்தரங்காக மானிப்பாய் பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கில் வழமை போன்று துறைசார் அனுபவமும் புலமையும் மிக்க வளவாளர்களினால் நடத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கின் பிரதம வளவாளராக மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் ஓய்வு நிலை அதிபர் அருட்பிரகாசபிள்ளையும் கொழும்பு புலமைச்சுடர் வளவாளர்கள் மற்றும் கலாமோகன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். கருத்தரங்கு முற்றிலும் இலவசமாக இடம் பெறவுள்ளதோடு மாணவர்களுக்கான கையேடுகள் வழங்கப்படவுள்ளதாக அறிவித்துள்ளார்.

அத்துடன் எமது அடுத்த தலைமுறையினரின் ஆரம்பக் கல்வியின் சான்றாகவும் அடுத்த நிலைக் கல்வியின் அடித்தளமாகவும் அமையும் இக்கருத்தரங்கில் பங்குபற்றி பயனடையுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (அ-2-23)

# கட்டாக்காலி நாய்கள் தொல்லை அதிகரிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சியில் கட்டாக்காலி நாய்கள் மேய்ச்சலுக்கு செல்கின்ற மாடுகளை கடிப்பதனால் அவை நோய்த் தாக்கத்திற்குள்ளாவதாக உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மேய்ச்சலுக்காக செல்லும் மாடுகளை கட்டக்காலி நாய்கள் கடித்து காயப்படுத்துவதனால் அவை நோய்வாய்ப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கைகளால் பசுமாடுகள் அதிகமாக பாதிக்கப்படுகின்றன.

இதனால் உரிமையாளர்கள் நட்டம் அடைந்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை மேற்கொண்டு தீர்வைப் பெற்றுத்தர வேண்டுமென கால்நடைகளின் உரிமையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-9-10)

# வெட்டி வீழ்த்தப்பட்ட மரத்தை விரைவில் அகற்றக் கோரிக்கை

(கரணவாய்)



நெல்லியடி பெற்றோல் நிலையத்துக்கு முன்பாக நின்ற பாரிய மரமொன்று வெட்டப்பட்டுள்ளதனால் அவ் வீதியால் பயணிக்க முடியவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வீதியின் புனரமைப்பு வேலைகளுக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபையினராலேயே மேற்படி மரம் வெட்டப்பட்டுள்ளது. அத்தோடு கான்கள் வெட்டப்பட்ட நிலையில் பாதையைக் கடப்பதற்கு கடவை வைக்கப்படாமையினால் கடைக்காரர்களும் மக்களும் அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

எனவே இதை உரியவர்கள் கவனத்தில் எடுக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-9-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வு பெற்றுக்கொடுப்பதே எமது நோக்கு

## ஜே.வி.பி எம்.பி அனுரகுமார தெரிவிப்பு

(குருமன்காடு)

**வடமாகாண சபைத் தேர்தலில் மட்டுமல்லாது சகல விடயங்களிலுமே படைத்தரப்பினர் தலையீடு செய்வதை நிறுத்த வேண்டும் என ஜே.வி.பி.தெரிவித்துள்ளது.வடமாகாண சபைக்கான தேர்தலில் போட்டியிடுவதற்காக வவுனியா மாவட்டத்திற்குரிய வேட்பு மனுக்களை தாக்கல் செய்தபின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போது அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க இவ்வாறு கூறியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

போர் முடிந்து நான்கு வருடங்களாகின்றன. எனவே வடபகுதியின் குடியியல் நிர்வாக நடவடிக்கைகள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். குடியியல் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் பொதுமக்களின் நாளாந்த வாழ்வில் தலையிடுவது போன்ற நடவடிக்கைகளை படைத்தரப்பினர் நிறுத்த வேண்டும்.

வடபகுதியில் படையினர் தமக்குரிய பணிகளை மட்டுமே செய்ய வேண்டும். பொலிஸார் தமக்குரிய குடியியல் நிர்வாகக் கடமைகளைச் செய்ய வேண்டும். அரசியல்வாதிகள் தமது வேலைகளைச் செய்ய வேண்டும். அதாவது அவர்கள் தமக்குரிய கடமைகளை செய்ய வேண்டும். இதுவே ஜே.வி.யின் நிலைப்பாடு.

போர் முடிவடைந்ததையடுத்து வடபகுதி மக்களின் வாழ்க்கையில் இயல்பு நிலை இன்னும் தோன்றவில்லை. படைத்தரப்பினர் ஆக்கிரமிப்பு செய்வதைப் போன்று வடக்கில் நிலை கொண்டுள்ளனர். போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே எமது நோக் கம் என அனுரகுமார திசாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே வடமாகாண சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் நாமல் ராஜபக்சவின் நாளைய இளைஞர் அமைப்பின் சுயேட்சையாகப் போட்டியிட வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளது.

இத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் போட்டியிடும் நிலையில் ஜனாதிபதியின் மகனான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவும் தனது நாளைய இளைஞர் அமைப்பை போட்டியில் களமிறங்கி விட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. (அ-2-250)


## விற்பனைக்கு

கொடிகாமம் மிருசுவிலில் உள்ள இயங்கிக்கொண்டு இருக்கும் மர அரிவு ஆலை விற்பனைக்கு உள்ளது.

**தொடர்பு: 0772557761**

(சி/4164)


# பாலர் பாடசாலை விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு குறித்த முன்பள்ளி முன்றலில் நெல்லியடி சனசமூக நிலையத் தலைவர் சு.கிருஷ்ணராஜா தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யா/ அல்வாய் அம்பாள் வித்தியாலய அதிபர் எம்.மகேஸ்வரராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக நெல்லியடிகிராமஅலுவலர் ஜி.சசிக்குமார் கலந்து கொள்வர். (அ-2)

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)

வட்டாரம் : 07
ஆதன இலக்கம் : 64/30
வீதி : வட்டுக்கோட்டை வீதி

வட்டாரம் 07. வட்டுக்கோட்டை வீதி. ஆதன இலக்கம் 64/30 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் மேற்குப் பகுதி. மானிப்பாய் கோயிற்பற்று. ஆனைக்கோட்டை இறை 'நளவன்குண்டு' என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 02 குளி.1.95 கொண்ட ஆதனம்) இவ் ஆதனமானது யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை மேற்கைச் சேர்ந்த நடராசா சரஸ்வதி என்பவர்களால் நன்கொடை உறுதி மூலம் வீரசிங்கம் பிரதீபன் என்பவருக்கு குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் செல்வி.ஞானலோஜினி சிவஞானம் முகதாவில் நிறைவேறிய 5151 ஆம் இலக்க 03.01.2011 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதி வேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். இவ் நளவன்குண்டு நிலப்பரப்பு 02 குளி1.95 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் வீரசிங்கம் பிரதீபன் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

**தவிசாளர்,**
**வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.** (3526)

## கதாபிரசங்கம்

(சுதுமலை)

சுதுமலை தெற்கு அருள்மிகு எச்சாட்டி வைரவர்கோவில்அலங்காரத் திருவிழா கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை இரவு 8 மணிக்கு நல்லைக்குருமணியின்பிரதமவாரிசு கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா சிறு தொண்டர் பற்றிய சிறந்த பக்க வாத்திய சகிதம் சங்கீத கதாப் பிரசங்கம் நிகழ்த்துவார். (அ-2)


BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

## மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை

*யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கிக் கிளைகளில் 10.11.2012 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் 10.05.2012 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.*

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி இடம் - நேரம் |
|---|---|
| யாழ்.மேற்தரக் கிளை (யாழ்.கச்சேரி. யாழ்.பஸ் நிலையம். விரிவாக்கற் கிளைகள் உட்பட)<br>யாழ்.பிரதான வீதிக்கிளை<br>காரைநகர்<br>சுன்னாகம் (புன்னாலைக் கட்டுவன் விரிவாக்கற்கிளை உட்பட)<br>மானிப்பாய் (சாவற்கட்டு விரிவாக்கற் கிளை உட்பட)<br>சங்கானை | யாழ்ப்பர்ணம்<br>அதி மேற்தரக் கிளை<br>யாழ்ப்பாணம்<br>2013 ஆகஸ்ட் 10ஆம் 11ஆம் திகதிகளில்<br>(சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை)<br>காலை 9.30 மணிக்கு |

இந்த ஏல விற்பனையை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

**செயற்பாட்டு முகாமையாளர்,**
**இலங்கை வங்கி (வடபிராந்தியம்)**
**வட பிராந்திய காரியாலயம்,**
**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே. இல: 021 222 4683, 021 222 3126**

(சி-4198)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து(V)<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>4கி.பா : 42.25<br>தகைமை/தொழில்: A/L,கனடா Citizen<br>தொ.இ:B2132 | பிறப்பு: 1981 இந்து(V,Sa)<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>உயரம்: 5'2" கி.பா:33 சூ,செ12<br>தகைமை/தொழில்: LLBUK Student VISA<br>தொ.இ:G2163 |
| பிறப்பு: 1979 இந்து(விஸ்வகுலம)<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5'6" கி.பா:41.75<br>செவ் 12<br>தகைமை/தொழில்: O/L முகாமையாளர் Welding தனியார்<br>தொ.இ:B2134 | பிறப்பு: 1987 இந்து(V)<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா :24 செவ் 8<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Software Engineering<br>தொ.இ:G2164 |
| பிறப்பு: 1979 இந்து(V)<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா : 63 சூ,செவ் 12உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: O/L ஆட்டோ சொந்தம்<br>தொ.இ:B2137 | பிறப்பு: 1973 இந்து(Pa)<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா :28.5 செவ் 8<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA Programmer<br>தொ.இ:G2169 |
| பிறப்பு: 1978 இந்து(V)<br>நட்சத்திரம்: சதயம் 3<br>உயரம்: 6' கி.பா : 48<br>செவ் 12<br>தகைமை/தொழில்: A/L, Salesman UK Citizen<br>தொ.இ:B2138 | பிறப்பு: 1978 இந்து(V,K)<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா : 37 செ 8<br>உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ:G2170 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண சபைத்தேர்தலில் இராணுவத்தினர் தலையிடக்கூடாது



## ஐ.ம.சு.முதன்மை வேட்பாளர் தவராசா வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாண சபைத்தேர்தலில் இராணுவத்தினர் எந்த விதத்திலும் தலையிடக்கூடாது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், முகாம்களுக்குள் முடங்கியிருக்குமாறு எம்மால் கோரிக்கைவிட முடியாது. அதற்கு அதிகாரமுமில்லை என ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதன்மை வேட்பாளரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சின்னத்துரை தவராசா தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது இராணுவத்தினர் எந்த விதத்திலும் தலையிடக்கவாது என்பதில் தேர்தல் ஆணையகமும் நாங்களும் உறுதியாக இருக்கின்றோம். அதனையே தொடர்ந்தும் வலியுறுத்தியும் வருகின்றோம்.

ஆனால், அவர்களை முகாம்களுக்குள் முடக்குவது என்பது நாட்டின் பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட விடயம். அதை நாம் கோரமுடியாது.

தேர்தலில் இராணுவத்தினர் தலையிடக்கூடாது என்பதை நாங்கள் வலியுறுத்துவோம். இராணுவம் தேர்தலில் தலையிடுவதோ அதில் சம்பந்தப்படுவதோ தேர்தல் சட்டத்திற்கு முரணானது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# முன்பள்ளி விளையாட்டு

(யாழ்ப்பாணம்)

எவர்சைன் கிட்ஸ் வேல்டின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் குறித்த நிறுவன இயக்குநர் செ.ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிகபீட முகாமைத்துவ கற்கைகள் பேராசிரியர் க.தேவராஜா, சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன், யாழ்ப்பாணம் அலியான்ஸ் லைஃப் காப்புறுதி நிறுவன முகாமையாளர் க.ஶ்ரீராம், கௌரவ விருந்தினர்களாக யாழ்.இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் ச.நிமலன், யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியர் மு.சுவாமிநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

# தாய்ப்பால் வழங்குவதில் இலங். முதன்னிலை வகிக்கிறது

குழந்தைகளுக்கு தாய்ப்பால் வழங்குவதில் இலங்கை ஏனைய நாடுகளை விட முன்னணியிலுள்ளது. இதனைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொண்டு 99 வீதத்திற்கு மேம்படுத்துவதே எமது நோக்கமாகவுள்ளது என்று பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் செயலமர்வு நேற்று முன்தினம் சுகாதார காரியாலயத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையில் குழந்தைகளுக்கு தாய்ப்பால் வழங்கும் வீதம் தற்போது 90 வீதமாகவுள்ளது. அதனை 99 பிளஸ் 100 வீதமாக மாற்றுவதே எமது திட்டமாகும். இதற்கேற்ப பல்வேறு வேலைத்திட்டங்களை நாம் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தி வருகின்றோம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தாய்ப்பாலூட்டுவதற்கான ஆதரவு தாய்மார்களுக்கு அருகில் எனும் கருப்பொருளில் தேசிய தாய்ப்பாலூட்டல் வாரம் நேற்று முன்தினம் தொடக்கம் 7 ஆம் திகதி வரை சுகாதார அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது ஒரு தாய் தன் குழந்தைக்கு குறைந்தது 6 மாதங்கள் தாய்ப்பால் ஊட்டுவது அவசியம். 2 வயது வரை தாய்ப்பாலூட்டுதல் மிகவும் சிறப்பானது. இது ஏனைய விற்றமின்கள் உணவுகளை விட சிறந்தது. தாய்ப்பால் உட்கொள்ளும் குழந்தை ஆரோக்கியமானதாகவும் தெளிவானதாகவும் இருக்கும்.

கல்வி, விளையாட்டு என்ற அனைத்து நடவடிக்கைகளிலும் தாய்ப்பால் அருந்தாத குழந்தையைவிட தாய்ப்பால் அருந்திய குழந்தைகள் முன்னேற்றகரமானதாக இருக்கும்.

தமது சௌகரியங்கள் கருதி சில தாய்மார் தாய்ப்பாலூட்டுவதை தவிர்த்து புட்டிப்பால் ஊட்டுகின்றனர். இது தவறான ஒரு நடவடிக்கையாகும். தாய்ப்பாலில் இருக்கின்ற சத்து வேறு எந்த பால்மாவிலும் இல்லை என்பதனை தாய்மார் உணர வேண்டும். மேலும் பாலூட்டல் தொடர்பான தெளிவை பெறுவதற்கு தாய்மார் முன்வர வேண்டும்.

தாய்ப்பாலூட்டலில் ஏதாவது பிரச்சினைகள் தோன்றினால் அருகிலுள்ள குடும்ப நல வைத்தியரை நாடுவது அவசியமானதாகும். அதுமட்டுமல்லாது குழந்தை இயற்கை முறையிலோ, சத்திரசிகிச்சை முறையிலோ பிறந்தாலும் குடும்பத்தவர்கள் உறவினர்கள் தாய்மாருக்கு ஆதரவாகவும் பாலூட்டுவதற்கு உதவியான நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும் என்றார். (அ-2)

# குளவி கொட்டியதில் ஒருவர் மரணம்

நோர்வூட் பிரதேசத்தில் குளவி கொட்டியதில் ஆண் தொழிலாளி ஒருவர் மரணமானார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் நோர்வூட் அயரபி என்ற பெருந்தோட்டத்தில் இடம்பெற்றது. மரணமானவர் 65 வயதானவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

தேயிலை கொழுந்து பறிக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் மேலும் 7 பெண்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளனர். (அ-2)

# மன்னார், தீவக மாணவர்களுக்கு விரைவில் புலமைப் பரிசில் திட்டம்

(யாழ்ப்பாணம்)

மன்னார், தீவக மாணவர்களுக்கு அடுத்து வரும் மாத காலப்பகுதியில் புலமைப்பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

யாழ்.மத்திய கல்லூரியில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற போசாக்கும்- தேகாரோக்கிய வாழ்வும் நிகழ்ச்சித்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்;

இத்திட்டம் 3 பிரதான நோக்கங்களை கொண்டது.மாணவரின் ஆரோக்கியத்தை மேம்படுத்தல், அனைத்து மாணவர்களுக்கும் மருத்துவ சிகிச்சைப்பிரிவு வழங்கப்பட்டு குணமாக்குதல் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் என்பனவாகும்.

கடந்த ஜுலை மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பால் வழங்கும் திட்டம் வடக்கு மாகாணங்களில் உள்ள 840 பாடசாலைகளில் கல்வி கற்கின்ற ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்களுக்கு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

941 பாடசாலைகளில் கல்வி கற்கின்ற ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது.

இதனைவிட 3 ஆயிரத்து 500 பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டம் வழங்கப்பட்டும் வருகிறது.

இப் புலமைப்பரிசில் திட்டம் மன்னார், தீவக மாணவர்களுக்கு அடுத்து வரும் மாதங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (அ-4)



மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் நடைபெற்றது.

இதில் ஆவரங்கால் மத்தி அணி வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டதைப் படத்தில் காணலாம்.

# கூடைப்பந்தாட்ட இறுதிப்போட்டி

(மானிப்பாய்)

மற்றிக்ஸ் ஹோம்ஸ் நிறுவனம் யாழ். இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட கழகத்துடன் இணைந்து நடத்திய கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் யாழ். இந்து கூடைப்பந்தாட்ட மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மற்றிக்ஸ் ஹோம்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ராஜ்குமார், கௌரவ விருந்தினர்களாக யாழ். கல்வி வலய உடற் கல்விப் பணிப்பாளர் ஷண் தயாளனும் கல்லூரியின் யாழ்ப்பாணப் பழைய மாணவர் சங்க தலைவர் கப்டன் சோமசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் இறுதிப் போட்டியில் அரையிறுதியில் கொக்குவில் இந்து [illegible] கல்லூரியும் யாழ்.மத்திய கல்லூரியை வென்ற யாழ். இந்துக் கல்லூரியும் மோதவுள்ளன. (அ-2-23)

# விசா மோசடியில் ஈடுபட்டவர் கைது

பிரித்தானிய விசா மோசடி நடவடிக்கையில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். போலி ஆவணங்களைத் தயாரித்து பிரித்தானியாவிற்கு செல்ல முயற்சித்தவரே இவ்வாறு கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகரத்தின் விசா மோசடிப் பிரிவினர் குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

[illegible] நான்கு தடவைகள் குறித்த நபர் விசா பெற்றுக் கொள்ள முயற்சித்துள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

போலியான அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ் போன்ற ஆவணங்களைப் பயன்படுத்தி விசா பெற்றுக் கொள் முயற்சித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபருக்கு பத்து ஆண்டுகள் பிரித்தானியாவிற்கு விஜயம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய குடிவரவு சட்டங்களை துஷ்பிரயோகம் செய்வோருக்கு எவ்வித நெகிழ்வுத்தன்மையும் காட்டப்படமாட்டாது என உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழையில் கழுத்தடைப்பு நோய்; யாழ்ப்பாண வாழைச் செய்கையை பாதிக்கும் அபாயம்!




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 29-I

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

விவசாய செய்கையில் நீண்டகாலமாக பிரச்சினையாயுள்ள பீடைகள் மற்றும் நோய்களின் தாக்கம் தற்போது விஸ்வரூப மெடுத்து வருவது போல உணர முடிகின்றது. இதற்கு காலநிலையிலேற்பட்டுள்ள மாற்றமும் ஒரு காரணமாக இருக்கின்ற போதிலும் விவசாய பெருமக்கள் தெரியாமல் செய்கின்ற பயிர்ச்செய்கை நடவடிக்கைகளும் காரணமாக இருக்கின்றன. இதுபற்றி எம்மினிய விவசாய பெருமக்களுக்கு அவசியமாக தெரியப்படுத்த வேண்டிய நிலையில் இக்கட்டுரை ஆக்கம் பெற்றுள்ளது.



மண்ணிற அழுக்கணவன் - வைரசுவின் காவி

உலகளாவிய ரீதியில் வாழையில் பல நோய்களும் பீடைகளும் சேதத்தை ஏற்படுத்தினாலும் குறிப்பிட்ட நோய்களின் தாக்கம் பரவலாக பெரிதாக உணரப்பட்டுள்ளதுடன் அதனால் ஏற்படுத்தப்பட்ட சேதமும் பன்மடங்காகியிருக்கின்றது.

இந்த நிலையில் இதே பிரச்சினைக்குள்ளும் எமது வாழைச்செய்கையும் அவதிப்படவேண்டி வந்துவிட்டது. யாழ்ப்பாண குடாநாட்டில் வாழையில் கழுத்தடைப்பு அல்லது குருத்தடைப்பு நோய் பரவலாக அனைத்து விவசாயிகளினதும் வாழைத தோட்டத்தில் வந்துவிட்டதாக அறிவிக்கப பட்டுள்ளது.

இந்நோயினை கழுத்தடைப்பு அல்லது குருத்தடைப்பு வைரசு ஏற்படுத்துவதனால் அதனைக் கட்டுப்படுத்துவது இலகுவான காரியமல்ல.

நாம் எப்படி முயன்றாலும் எமது சக்திக்கு அப்பாலும் இதுபோன்ற துன்பியல் நிகழ்வுகள் நடந்துவிடுகின்றது. இது ஒரு வகையில் நம் எல்லோருக்குமான சவாலாக கூட இதனைக் கருதலாம். வைரசுவினைக் கட்டுப்படுத்துவதற்கு அதனைக் காவும் *பென்ரலோனியா நைகிறோநேவோசா* எனப்படும் மண்ணிற அழுக்கணவன் வகையான் பூச்சி பீடையைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இப் பீடையினால் கழுத்தடைப்பு வைரசு இலகுவாக காவப்பட்டு புதிய வாழைமரங்களை சென்றடைகின்றது. இவ்வாறு அழுக்கணவன் பரவுவதற்கு காற்று உதவிசெய்கின்றது.

வேகமாக வீசும் காற்றின் உதவியுடன் எடுத்துச் செல்லப்படும் இறகுகளையுடைய அழுக்கணவன் இன்னொரு வாழையின் மீது விழுந்து அதில் சாற்றை உறிஞ்சும் போது கழுத்தடைப்பு வைரசு அப்புதிய வாழையில் தொற்றுதலாகிவிடும்.

பூச்சியினால் பரவப்படுவது முதன்மையாக இருக்கின்ற போதிலும் வேறுவழிகளிலும் இவ்வைரசு தொற்று ஏனைய வாழைகளில் வருவதற்கும் வாய்ப்புக்கள் அதிகமாகும்.

நோயுற்ற வாழைக்குட்டிகளை நடுவதன் மூலமும் இந்நோய் பரவ வாய்ப்புக்களதிகமாகும். நோய்வாய்ப்பட்ட வாழையினடியிலிருந்து வாழைக்குட்டிகளை நடுகைக்காக எடுத்துச் செல்லும் போது மிகவும் கவனமாக தாய்வாழையில் இந்நோய் இருக்கின்றதா என அவதானித்து எடுத்துச் செல்ல வேண்டும்.

அதாவது வாழைக்குட்டிகளை நடுகைக்காக பெறும் விவசாயிகளின் தோட்டத்தில் கழுத்தடைப்பு அல்லது குருத்தடைப்பான் நோய் காணப்பட்டால் அதிலிருந்து வாழைக் குட்டிகளை நடுகைக்காக தெரிவுசெய்வதை முற்றிலுமாக தடுக்கவேண்டும். வாழைக்குட்டியில் வைரசு நோய்த்தொற்று ஏற்பட்டு அதனை தெரியாது நடுகைசெய்துவிட்டால் அந்த வாழையினடி முற்றிலுமாக நோய் வாய்ப்படவே செய்யும்.

அதற்கும் மேலாக அந்த நோய்வாய்ப்பட்ட வாழையிலிருந்து மற்றைய வாழைகளுக்கு வைரசு நோய் இலகுவாக பரவத்தொடங்கிவிடும். இதனால் கழுத்தடைப்பு நோய் பரவாது தடுக்க வாழைக்குட்டிகளை நடுகைக்காக பெறும் போது அவதானமாக நோயேற்படாத வாழைத்தோட்டத்திலிருந்து பெறுதல் அவசியமாகும்.

இதற்காக வாழைக்குட்டி பெறும் வாழைத தோட்டத்தை முற்றிலுமாக கண்காணித்து வைரசு நோய்த்தாக்கம் எதுவும் இல்லையென உறுதிசெய்தபின்பே வாழைக்குட்டிகளை பெறவேண்டும். சிலநேரங்களில் வீரியம் குறைந்த கழுத்தடைப்பு வைரசு காவப்பட்டிருப்பின் அது உடனடியாக நோயை உருவாக்காது. நாளடைவில் வைரசு வீரியம் பெறும் போது நோய் வெளிக்கொணரப்படும். இது இயற்கையாக நுண்ணங்கிகளின் இயல்பாக இருப்பினும் இவற்றை கருத்தில் கொண்டே வாழைக்குட்டிகள் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

கவலையீனமாக வாழைக்குட்டிகள் தெரிவுசெய்யப்பட்டு நடுகைசெய்யப்பட்டால் அதன் பின்னர் வாழைக்குட்டிகள் வளர்ந்து வாழைத்தோட்டத்திலிருந்து வாழைக்குலைகள் அறுவடைக்கு தயாராகும் போது பிரச்சினை பெரிதாகி வாழையிலிருந்து சிறந்த வாழைக்குலைகளை அறுவடை செய்ய முடியாமல் போய்விடும்.

இந்த நிலைமை பல விவசாயிகளுக்கு ஏற்பட்டிருப்பதை தற்போது அவதானிக்கலாம். மேலும் வாழையில் தற்போது மாவுப்பூச்சியினுடைய தாக்கமும் அதிகரித்து வருவதை காணலாம். இன்னும் தற்போதைய வரட்சியான சூழலில் இவ்வகையான சாறு உறிஞ்



சும் பூச்சிகளின் பெருக்கம் கட்டுக்கடங்காமல் போவதனால் அவற்றை கட்டுப்படுத்துவதும் மிகவும் கடினமானதாக இருக்கின்றது. பரவலாக பயன்படுத்தப்படும் பீடைநாசினிகளிலிருந்து தப்பித்துக்கொள்ளும் இவ்வகையான பீடைகளினால் மேலும் எம்க்கு சேதம் அதிகமாக வருவதற்கு சாத்தியக்கூறு அதிகமாகவே இருக்கின்றதென்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அழுக்கணவனைக் கட்டுப்படுத்த ஊடுபுகுந்து தாக்கும் பீடைநாசினிகளைத் தெரிவு செய்யலாம். அதிலும் இப்பீடைநாசினிகளை அனைதது வாழைக்கும் தெளிக்க வேணடும்.

இது முற்றிலும் சாத்தியமான ஒன்றல்ல. அருகிலுள்ள வாழையிலிருந்து அழுக்கணவனும் வைரசுவும் பரவக்கூடிய வாய்ப்பு அதிகமாகவே இருப்பதனால் இப்பிரச்சினையிலிருந்து விடுபட அனைத்து வாழைச் செய்கையாளர்களும் ஒன்றிணைய வேண்டும். வைரசு தொற்று ஏற்பட்ட வாழையினடியை முற்றாக பெயர்த்து எரித்து விடுவது என்றுமே நல்லது. ஆனால் இதனை எம்மூர் விவசாயிகள் செய்வதில்லை.

ஏனோ தானோ என கவலையீனமாக விட்டுவிடுவதனால் இந்நோயை முற்றாக கட்டுப்படுத்த முடியாதிருக்கின்றது. ஒருவருடைய வாழைத்தோட்டத்தில் இந்நோய் காணப்பட்டால் அதனை உடனடியாக கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அந்த விவசாயி ஏனைய வாழைச் செய்கையாளர்களின் நன்மை கருதி செய்தல் வேண்டும். இதற்கான அறிவுறுத்தல்கள் பல்வேறு மட்டங்களிலிருந்தும் விவசாயிகளுக்கு வழங்கப்படல் வேண்டும். அனைத்து விவசாயிகளும் ஒன்றிணைந்தால் இந்தப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும்.

## கலைநிகழ்வு

யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையமும் யாழ்.பொது வைத்தியசாலை அபிவிருத்தி சங்கமும் இணைந்து நடத்தும் ஜம்புமர நடுகையை ஊக்குவிக்கும் மாபெரும் கலை நிகழ்வு எதிர்வரும் 10 ஆம் திகதி நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கலை நிகழ்வுக்குரிய நுழைவுச் சீட்டுக்களை (ரிக்கெட்) போதனா வைத்தியசாலை நீரிழிவு நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். (அ)

## கொம்மிகுளம் காட்டுப்பகுதியில் கலாசார சீர்கேடுகள்

(பருத்தித்துறை)

சாவகச்சேரி சரசாலை கொம்மிகுளம் என்ற காட்டுப்பகுதியில் கலாசார சீர்கேடுகள் இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.


மேற்படி காட்டுப்பகுதிக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் இளைஞர்,யுவதிகள் வந்து செல்கின்றனர். இதனால் அப்பகுதியிலுள்ள மக்கள் அசௌகரியங்களை சந்தித்து வருவதாக தெரிவிக்கின்றனர். எனவே உரியவர்கள் இந்நடவடிக்கையினை கருத்திற்கொண்டு சீர்கேடுகளைத் தவிர்க்க முன்வர வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-10)

## புலமைப்பரிசில் முன்னோடிப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வலயக்கல்வி திணைக்களத்தினால் நடத்தப்படும் தரம் 5 புலமைப்பரிசில் முன்னோடிப்பரீட்சை இன்று சனிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்துள்ளார். (அ)





மலேசிய அரசாங்கத்தினால் SEGI பல்கலைக்கழகத்தினூடாக சிகரம் கல்வி, தொழில் வழிகாட்டல் பிரிவினால் நடத்தப்படும் விடுதி பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளவுள்ள மாணவர்களுக்கான விசா கடிதங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. இதில் உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான கருத்தரங்கு நடைபெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 பணியாளர்கள் கொலை தொடர்பில் உண்மையான விசாரணை இல்லை

## மனித உரிமை கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

திருகோணமலை மூதூரில் கொலை செய்யப்பட்ட 17 தன்னார்வ பணியாளர்கள் தொடர்பான விசாரணைகளில் இலங்கை அரசாங்கம் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என நியூயோர்க்கை தலைமையகமாகக்கொண்ட மனித உரிமை கண்பாணிப்பகத்தின் கொள்கைப் புணிப்பாளர் ஜேம்ஸ் ரோஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 4ஆம் திகதியன்று தமிழர்களாகிய 17பேர் மூதூர் அக்சன் பாம் நிறுவன அலுவலக சூழலில் வைத்து கொல்லப்பட்டனர். இதில் 4 பெண்களும் அடங்கியிருந்தனர். விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற கடும் மோதல்களின் பின்னரே இந்தக் கொலை இடம்பெற்றிருந்தது.

குறித்த மனித உரிமை மீறல் தொடர்பில் உரிய முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே தமது உறவுகளை இழந்தவர்கள் இன்னும் நீதிக்காக ஏங்கி நிற்கின்றனர்.

இந்தக் கொலைகள் தொடர்பில் அரசாங்கப் படையினர் மீது குற்றச்சாட்டுக்களை பல்வேறு தரப்பினரும் முன்வைத்துள்ளனர்.

இந்நிலையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் வருகை மற்றும் பொதுநலவாய நாடுகளின் மாநாடு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு விசாரணை என்ற நிலைப்பாட்டை அரசாங்கம் எடுத்துள்ளது. இது உண்மையான முன்னெடுப்பாக இருக்காது.

எனவே இலங்கை அரசாங்கத்தின் முன்னெடுப்புக்களுக்காக சர்வதேசமே செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## குடும்பஸ்தருக்கு விளக்கமறியல்

வடமராட்சி பிரதேசத்தில் தாபரிப்பு வழக்கொன்றில் மனைவிக்கு தாபரிப்பு பணம் செலுத்தாத குடும்பஸ்தர் ஒருவரை இம்மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் கடந்த புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் குறித்த குடும்பஸ்தாருக்கு எதிராக மனைவியினால் தாபரிப்பு வழக்கு தொடரப்பட்டது.

இவ் வழக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் ஏற்கனவே இடம்பெற்று வரும் நிலையில் நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைய இந்த குடும்பஸ்தர் மனைவிக்கு தாபரிப்பு பணம் செலுத்த வேண்டும் என நீதிமன்று உத்தரவிட்டது.

இதற்கிணங்க இக் .குடும்பஸ்தர் பல தவணைக்கு மனைவிக்கு தாபரிப்பு பணம் செலுத்தவில்லை. இவ்வழக்கு விசாரணை கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் அக்குடும்பஸ்தர் அன்றையதினமும் தவணைக்கு பணம் செலுத்தாமையினால் அவரை எதிர் வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-9-24)

## கூட்டுறவு சங்கத்தின் மாவட்ட மட்டப்போட்டி

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட அனைத்து கூட்டுறவுச் சங்கத்தினால் 91 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்டு வரும் கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகளின் மாவட்ட மட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக மாவட்ட விழாக்குழுத்தவைர் எஸ்.வேதவணம் அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கு கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## பூம்புகார் மக்களுக்கு காணி உரிமம் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்கு பூம்புகார் பகுதியில் காணி உரிமப் பத்திரங்கள் இல்லாதவர்களுக்கு காணிக்கச்சேரியை நடத்தி விரைவாக அவற்றை பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

பூம்புகாரில் சொந்தக் காணிகள் இல்லாது அரச காணிகளில் வாழ்ந்து வருவோருக்கு குறித்த காணிகளுக்கான உரிமங்களை வழங்கும் பொருட்டு காணிக்கச்சேரியை நடத்துமாறு துறைசார்ந்தோருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்பிரகாரம் 192 குடும்பங்கள் இதன் மூலம் காணி உரிமங்களை பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே கடந்த 30 வருடகாலமாக புனரமைக்கப்படாதுள்ள அரியாலை கிழக்கு பிரதான வீதியை வீதி அபிவிருத்தி திணைக்களத் தின் ஊடாக புனரமைக்கவும் அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன்போது சட்டத்தரணி தேவராஜன் ரெங்கன், நல்லூர் பிரதேச செயலர் செந்தில் நந்தனன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் பிரதேச இணைப்பாளர் அம்பலம் ரவீந்திரதாசன் ஆகியோர் உடனிருந்தனர். (அ-2)

## சடலத்தை அடையாளம் காட்டுக

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் பெயர், முகவரி தெரியாத உருக்குலைந்த நிலையில் காணப்படும் ஆணின் சடலம் ஒன்று கடந்த புதன்கிழமை ஊர்காவற்றுறை பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள குறித்த சடலத்தை உறவினர்களை அடையாளங்காட்டி பெற்றுக் கொள்ளுமாறு வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.பவானந்தராஜா அறிவித்துள்ளார். (அ-5)

ஓகஸ்ட் மாத ஜோதிலிங்க இரதபவனியில்
சமூக நல நிகழ்வுகள்-02




திருப்பவனி வர இருக்கும்
பாதைகள், ஆலயங்கள் அடங்கிய
ஒவ்வொரு நாள்
நிகழ்ச்சி நிரலையும்
ஓகஸ்ட் 4 ஆம் திகதியிலிருந்து
பத்திரிகைகள்
வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

இரதத்தோடு
இணைந்து
வலம் வரும்
யாக குண்டம்

சுய மாற்றத்தை ஏற்படுத்தும் ஆர்வம் கொண்ட அனைவரும் இந்நிகழ்வில் பங்கேற்று வாழ்க்கையைத் தம் நல்லெண்ணப்படி மாற்றிக் கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

விபரங்களுக்கு 077-2612088


யாழ் பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம்

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மலையரசனும், மலையரசியும்



மகேந்திர கிரி ராஜ்யமெங்கும் மக்கள் வியப்புக்கடலில் மூழ்கினர். எங்கு நோக்கினும், யாரை நோக்கினும் ஒரே விடயத்தைப் பற்றி ஆச்சரியத்துடன் பேசிக் கொண்டிருந்தனர். நேற்றுவரை, தனித்தனியாக இருந்த இருபிரமாண்டமான மலைகள் இன்று திடீரென ஒன்றாக இணைந்துவிட்டன. இப்படியெல்லாம் கூட நடக்கமுடியுமா என்று மக்கள் வாய் ஓயாமல் பேசிப் பேசியே அலுத்து விட்டனர்.

இந்த விடயத்தைக் கேட்ட மகேந்திரகிரி மன்னர் இந்திரசேனர் அந்த அதிசயத்தைத் தன் கண்களால் காண்பதற்காக அங்கே வந்து சேர்ந்தார். இரண்டு மலைகளும் ஒன்றிணைந்து காட்சியளித்ததைக் கண்டு தன் கண்களையே அவரால் நம்ப முடியவில்லை.



ராஜ்யத்தின் தென் திசையில் பல நூற்றாண்டுகளாக சுகந்தகிரி, சுதர்சனகிரி என்ற இரு பெரிய மலைகள் அதிக இடைவெளியில் அமைந்திருந்தன. இரண்டிலிருந்தும் வேகமாக கீழ்நோக்கிப் பாய்ந்து கொண்டிருந்த அருவிகள் நிலத்தை அடைந்து ஒன்றாகச் சேர்ந்து, நதியாக மாறி, இரண்டு மலைகளுக்கும் இடையில் பாய்ந்து சென்றது. நேற்றுவரை, தனி

**அம்புலிமாமா கதைகள்**

துருவங்களாக நின்று கொண்டிருந்த மலைகளிரண்டும், இன்று எவ்வாறு இணைந்தது என்ற தன் சந்தேகத்திற்கு விடை கிடைக்காத மன்னர், இயற்கை அழகு பொலிந்த அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே இருந்தார். அப்போது திடீரென ஒரு தேவன் அவர் முன் தோன்றினான்.

அவனை வணங்கிய மன்னர், "மகாபுருஷரே! நீங்கள் நிச்சயம் விண்ணுலகத்தைச் சேர்ந்தவராகத் தான் இருக்கவேண்டும்! நான் இந்த நாட்டு மன்னன் இந்திரசேனன். நேற்றுவரைத் தனித்தனியாக இருந்த சுகந்தகிரியும், சுதர்சனகிரியும் இன்று திடீரென ஒன்று சேர்ந்தது எவ்வாறு என்று எண்ணி எண்ணிக் குழம்பிக்கொண்டேயிருக்கிறேன். நான் காண்பது நிஜம் தானா, இல்லை ஏதாவது கண்கட்டி வித்தையா என்றே புரியவில்லை. உண்மையை அறிந்த நீங்கள் இந்த மர்மத்தை விளக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்!" எனாறார். அதற்கு அந்த தேவன் புன்னகைத்துக் கொண்டே "கட்டாயம் சொல்கிறேன்!" என்று தொடங்கினான்.

"இரண்டு மலைகளில் சுகந்தகிரி பல மலர்ச்செடிகளும், பச்சைப் பசேல் என்ற செடி, கொடிகளும், பழ மரங்களும் நிறைந்த இயற்கை எழில் மிக்க மலை. இந்த மலை மீது ஏறுவது எளிது. ஆனால், சுதர்சனகிரி பாறைகள் நிரம்பிய செங்குத்தான மலை. அங்கும் செடி, கொடி, மரங்கள் இருப்பினும், மக்களை மயக்கும் வசீகர அழகு அதற்கில்லை. அதனால் சுற்றுலாப் பயணிகள் பெரும்பாலும் சுகந்தகிரிக்கே சென்று வந்தனர். சுகந்தகிரி மலையரசி வசிக்குமிடம். மலையரசி தாயைப் போன்ற கருணை உள்ளம் படைத்தவள். தன் மீது விருப்பம் கொண்டு தன்னைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தன்னாலியன்ற உதவிகளைச் செய்வாள். ஆனால், மனிதர்களின் கண்களுக்குப் புலப்படமாட்டாள். தன்னை நாடி வரும் பயணிகளின் பொருட்டு அவர்களுக்குப் பயணத்தின் போது கஷ்டம் எதுவும் ஏற்படக் கூடாதென்றும், மகிழ்ச்சியாக வீடு திரும்ப வேண்டுமென்றும் அவள் கடவுளைப் பிரார்த்தனை செய்வாள்.

பயணிகள் கூட்டம் கூட்டமாகச்சுகந்தகிரியையே நாடிச் செல்வதையும், தன்னை நாடி யாரும் வராததையும் கண்டு, அருகிலிருந்த சுதர்சனகிரியின் மன்னனான மலையரசனுக்கு வருத்தம் ஏற்பட்டது. கடந்த சித்திரா பௌர்ணமியன்று, ஏராளமான பயணிகளின் கூட்டம் சுகந்தகிரிக்கு வந்தபோது, மலையரசனுக்குச் சிறிது பொறாமை கூட ஏற்பட்டது.

மலையரசி அவர்களின் கண்களுக்குத் தென்படாமல் இங்குமங்குமாகத் திரிந்து அனைவரும் எந்த வித கஷ்டமுமின்றி உல்லாசமாகப் பொழுது போக்கிய பின் வீடு திரும்பவேண்டுமென்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்ததையும், மலையரசன் பார்த்தார். அப்படியிருந்தும், சுகந்தகிரியில் ஏறிக்கொண்டிருந்த ஒருவன் தற்செயலாகக் கால் இடறி, தலைகுப்புற பாதாளத்தில் விழுந்தான். அதைக்கண்டு பதறிப்போன மலையரசி அவனை ஏந்திப் பிடிக்கத் தன் கைகளையும் நீட்டியும் அவனைப் பிடிக்க முடியவில்லை.

அதைப்பார்த்த மலையரசன் மிக நீளமானத் தன் கைகளை நீட்டி அவனைத் தாங்கிப் பிடித்துக்கொள்ள, அவன் உயிர்தப்பினான். பயந்து, நடுங்கி, கதறியழுத அவனுடைய மனைவியும், குழந்தைகளும் பாதாளத்தில் தலைகுப்புற விழுந்தவன் தெய்வாதீனமாகப் பிழைத்தது கண்டு மகிழ்ச்சி அடைந்தனர். அதைக் கண்ட மலையரசியும் உணர்ச்சிவசப்பட்டு ஆனந்தக்கண்ணீர் வடித்தாள்.

பிறகு, தன்னைப்பார்க்க வந்த பயணயின் உயிரைக் காப்பாற்றிய மலையரசனுக்கு அவள் மனமார நன்றி செலுத்தினாள். அப்போது, மலையரசன் அவளை நோக்கி, "மலையரசி! உன்னை நாடி இத்தனை மக்கள் வரும்போது, என்னை நாடி ஏன் யாரும் வருவதில்லை என்று பல நாள்களாக யோசித்துக் கொண்டு இருந்தேன். அதற்கான காரணத்தை நான் இன்று அறிந்து கொண்டேன். உன்னுடைய இதயம் புனிதமானது. தூய சிந்தனைகளால் நிரம்பியது. உன்னை நாடி வருபவர்களிடம் ஒரு தாயைப் போல் அன்பு செலுத்துகிறாய். உன் பயணிகளை உன் குழந்தைகளாக



பாவிக்கிறாய். அதனால் தான், நீ மிக அழகாகவும்," குளிர்ச்சியாகவும் இருக்கிறாய் என்றார்.



அதற்கு மலையரசி நாணத்துடன், "நீங்களும் என்னைப்போல் நடந்து கொள்ள முயற்சிக்கலாமே! பிறகு, உங்களை நாடிப் பலரும் வருவார்கள்!" என்றாள்.

"ராணி உன்னைப் போல் நானும் மாற வேண்டுமானால், அதற்கு ஒரு வழி இருக்கிறது. நீ மனது வைத்தால் அது நடக்கும்.

நான் விரும்புவதை உன்னால் தரமுடியுமா?" என்றார் மலையரசன்!

"எனக்குப் பேருதவி புரிந்த நீங்கள் என்னிடம் எது கேட்டாலும், நான் தரத்தயாராக இருக்கிறேன்!" என்றாள் மலையரசி "அப்படியானால், என்னைத் திருமணம் செய்து கொள்வாயா?" என்று மலையரசன் கேட்டதும், மலையரசியின் முகம் மகிழ்ச்சியினால் பூரித்து, வெட்கத்தினால் சிவந்தது. "உங்களைத் திருமணம் செய்து கொள்வதை என் பாக்கியமாகக் கருதுகிறேன்!" என்றாள்.

ஒரு சுபமுகூர்த்தத்தில் இருவர்க்கும் திருமணம் இனிதே நடந்து முடிந்தது. இரண்டு மலைகளும் ஒன்றாகச் சேர்ந்து கொண்டன. அந்த சுபநிகழ்ச்சியைக் கொண்டாடும் விதத்தில், மலைப்பிரதேசத்திலிருந்து அத்தனை செடி, கொடி, மரங்களும் பூத்துக் குலுங்கின.

அந்தத் திருமணத்தைக் காண வந்தவர்களில் நானும் ஒருவன்! திருமணத்திற்குத் தேவலோகத்தில் இருந்து பலதேவர்களும் தேவதைகளும் வந்து சிறப்பித்தனர். அவர்களெல்லாம் திருமணம் முடிந்து சென்ற பிறகும், நான் இங்கேயே பலநாள் தங்கி விட்டேன். நானும் தேவலோகம் திரும்ப வேண்டியதுதான்! ஆனால், போவதற்கு முன், உங்களிடம் இவற்றைக் கூறியதை எண்ணி மகிழ்கிறேன். மன்னராகிய நீங்கள் ஒரு விடயத் தைப் புரிந்து கொள்ளுங்கள். நம்மைப் போலவே, இயற்கை உருவாக்கிய மலைகள், நதிகள், தாவரங்கள் ஆகியவற்றுக்கும் உணர்ச்சிகள், அன்பு, இரக்கம் ஆகிய குணங்கள் உள்ளன. இவற்றை தன்னுயிர் போல் நேசித்து வாழும் மனிதர்களிடம் இவையும் அன்பு காட்டுகின்றன. ஆனால், இவற்றை விரோதித்துக் கொண்டு, இயற்கைக்கு எதிரான செயல்களைப் புரிந்தாலோ, மனிதகுலமும் அழிந்து போகும்!" என்று கூறி அவன் மறைந்து போனான்.

தான் கற்றுக் கொண்ட பாடத்தைத் தன் குடிமக்களுக்கும் புகட்ட வேண்டுமென்றும், இயற்கையின் படைப்புகளான மலைகள், நதிகள், மரங்கள் மீதும் பாசமும், பரிவும் காட்ட வேண்டுமென்றும் எண்ணிய மன்னர் ஒவ்வொரு சித்திரா பௌர்ணமியன்றும் மலையரசனுக்கும் மலையரசிக்கும் வசந்தோற்சவ விழாக் கொண்டாட வேண்டும் என்று தீர்மானித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை

# கொழும்பு, றோயல் கல்லூரி முன்னோடிப் பரீட்சை - 2013

# இணைந்த கணிதம்


## இணைந்த கணிதம் - I

**பகுதி A இல் இருந்து எல்லா வினாக்களுக்கும், பகுதி B இல் இருந்து ஐந்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

### பகுதி A

1. $(1+1/n)^n < 2$ ஆகும்போது $n \epsilon Z^+$ இற்கு $n! > (n/e)^n$ என்பதை கணிதத் தொகுத்தறிவு முறையினால் நிறுவுக. இங்கு $e$ என்பது இயற்கை மடக்கையின் அடியாகும்.

2. PERSON என்னும் சொல்லிலுள்ள எழுத்துக்களை, கீழுள்ள உருவில், வரிசையேதும் வெறுமையாக இல்லாதவாறு எத்தனை வழிகளில் நிரப்பலாம்.




3. $(x+a)^n$ இன் விரிவில் இரண்டாம், மூன்றாம், நான்காம் உறுப்புக்கள் முறையே 240, 720, 1080 ஆயின் $n, a, x$ ஐக் காண்க. இங்கு $a, x$ பூச்சியமற்ற மாறிலிகளும் $n \epsilon z^+$ உம் ஆகும்.

4. $\lim_{x\to 1} \frac{1-\sqrt{x}}{(\cos^{-1} x^2)} = ¼$ எனக் காட்டுக

5. தொகையிடுக $\int \frac{1-x}{x\sqrt{1-x^2}}\, dx$

6. $\Delta ABC$ இன் உள்வட்ட மையம் I ஆகும். AB, BI, CI என்பவற்றின் சமன்பாடுகள் முறையே $x+y-3=0,\ 2x+y-2=0,\ x-y+3=0$ ஆகும். பக்கங்கள் BC, AC இன் சமன்பாடுகளைக் காண்க

7. $x^3 - y^2 = 0$ என்னும் வளையியிலுள்ள புள்ளி $P\,(4m^2, 8m^3)$ இல் வரையப்பட்ட தொடலி, வளையியிலுள்ள புள்ளி Q இற்கு செவ்வன் ஆயின், $m$ ஐக் காண்க.

8. $x^2 + y^2 - 2x - 2ay - 8 = 0$ என்னும் மாறும் வட்டமானது இரு நிலையான புள்ளிகளினூடு செல்கின்றது. அவ்விரு புள்ளிகளின் ஆள்கூறுகளைக் காண்க. இப்புள்ளிகளில் வட்டத்திற்கு வரையப்பட்ட தொடலிகள், $x+2y+5=0$ என்னும் கோட்டில் ஒன்றையொன்று வெட்டும் எனின், அவ் வெட்டும் புள்ளியின் ஆள் கூற்றினைக் காண்க

9. முதலாம் கால் வட்டத்திலுள்ள ஓர் வட்டமானது x அச்சு, y அச்சு, நேர்கோடு $3x - 4y - 12 = 0$ என்பவற்றைத் தொடுகின்றது. வட்டத்தின் சமன்பாட்டைக் காண்க

10. தீர்க்க. $\tan^{-1}(x+\frac{2}{x}) - \tan^{-1}(\frac{4}{x}) - \tan^{-1}(x-\frac{2}{x}) = 0$

### பகுதி B

11. (a) $a, b, c\ (\in R^+)$ என்பன கூட்டல் விருத்தி ஒன்றின் அடுத்தடுத்துவரும் மூன்று உறுப்புகளும், இருபடிச்சமன்பாடு $ax^2 + bx + c = 0$ இன் மூலங்கள் மெய்யும் எனின், $\left|\frac{a}{c} - 7\right| \geq 4\sqrt{3}$ எனக் காட்டுக. அத்துடன் மேற்படி சமன்பாட்டின் மூலங்கள் இரண்டும் மறையானவை எனவும் காட்டுக.

மேலுள்ள பண்புகளைத் திருப்திப்படுத்துமாறு $f(x) = ax^2 + bx + c$, $g(x) = x + 2$ என்பவற்றின் வரைபுகளை ஒரே அச்சுக்களில் வரைக

அதிலிருந்து $ax^2 + (b-1)x + c - 2 = 0$ என்னும் சமன்பாடு இரு மெய் மூலங்களைக் கொண்டதுடன் ஒன்று நேரானதும், மற்றையது மறையானது எனவும் காட்டுக.

(b) மூன்றாம் படியிலுள்ள பல்லுறுப்பி $f(x)$ ஆனது பின்வரும் பண்புகளைக் கொண்டுள்ளது.

(i) $f(x)$ இன் ஓர் காரணி $(x+3)$

(ii) $f(x) - 12$ ஆனது $x$ ஆல் மீதியின்றி வகுபடும்

(iii) $g(x) = 2x^2 - 11x + 13$ ஆகும் போது $f(x) - g(x)$ ஆனது $(x-1)$ என்னும் மீளும் காரணியை மாத்திரம் கொண்டுள்ளது.

அட்சர கணித முறையைப் பயன்படுத்தி $f(x)$ ஐக் காண்க. அதிலிருந்து $f$ இன் எல்லாக் காரணிகளையும் காண்க.

அதிலிருந்து $\frac{(x^2+x-6)(x-2)}{|x+3|} = 1$ ஐத் தீர்க்க.

12. (a) $y = |x^2 - 2|,\ y = |2x+1|$ இன் வரைபுகளை ஒரே அச்சுக்களில் வரைந்து, அவை ஒன்றையொன்று வெட்டும் புள்ளிகளின் ஆள்கூறுகளையும் குறித்துக் காட்டுக

அதிலிருந்து பின்வருவனவற்றைத் தீர்க்க

(i) $|x^2 - 2| = |2x+1|$

(ii) $|x^2 - 2| > |2x+1|$

(b) $f(r) - f(r+1)$, இங்கு $f(r) = \frac{1}{r^2}$ என்பவற்றைக் கருதி

$S_n = \sum \frac{2r+1}{r^2(r+1)^2} = \frac{n(n+2)}{(n+1)^2}$ எனக் காட்டுக

$S_n = \sum \frac{2r+1}{r^2(r+1)^2}$ ஆயின் $S_n > \frac{9999}{10000}$ ஆகுமாறு $n$ இன் மிகச்சிறிய பெறுமானத்தைக் காண்க.

(c) முதல் $n\ (n = 1,2,3,\dots)$ உறுப்புக்களின் கூட்டுத்தொகை $\frac{3n}{2n+1}$ ஆகுமாறு முடிவிலித் தொடர் $\sum T_r$ ஐக் காண்க.

அத்துடன் தொடர் $\sum r^2 T_r$ இன் முதல் $n$ உறுப்புக்களின் கூட்டுத்தொகை $\frac{3n(n+1)}{2(2n+1)}$ எனக் காட்டுக.

தொடர் $\sum r^2 T_r$ விரிதொடரா? உமது விடையை மெய்ப்பிக்க.

13. (a) (i) $P = \begin{pmatrix} \cos\pi/6 & \sin\pi/6 \\ -\sin\pi/6 & \cos\pi/6 \end{pmatrix}$, $A = \begin{pmatrix} 1,1 \\ 0,1 \end{pmatrix}$ $Q = PAP'$

$P'Q^{2013}P$ ஐக் காண்க

(ii) தீர்க்க

$$\begin{vmatrix} a+x & a-x & a-x \\ a-x & a+x & a-x \\ a-x & a-x & a-x \end{vmatrix} = 0$$

(b) (i) $Z = \frac{(1+i)^4}{(-1+i)^2}$ இன் மட்டையும், வீச்சையும் காண்க.

(ii) $Z_1, Z_2$ என்னும் சிக்கல் எண்களுக்கு

$|Z_1| - |Z_2| \leq |Z_1 + Z_2| \leq |Z_1| + |Z_2|$ எனக் காட்டுக

$|Z_1| - |Z_2| \leq |Z_1 - Z_2| \leq |Z_1| + |Z_2|$ என்பதை உய்த்தறிக

(iii) $|z| = 1$ ஆகுமாறு z என்பது ஓர் சிக்கல் எண் எனின், ஆகன் வரிபடத்தைப் பயன்படுத்தி $1 \leq |z+2| \geq 3$ எனவும், $-\pi/6 \leq \arg(z+2) \leq \pi/6$ எனவும் காட்டுக.

14. (a) $e^x = \frac{\sqrt{1+t} - \sqrt{1-t}}{\sqrt{1+t} + \sqrt{1-t}}$ உம் $\frac{y}{2} = \sqrt{\frac{1-t}{1+t}}$ உம் எனின், பொருத்தமான பிரதியீட்டைப் பயன்படுத்தி $x, y$ ஐ எளிய வடிவில் எடுத்துரைக்க. $\frac{dy}{dx}$ ஐக் காண்க

$t = ½$ ஆகும் போது $\frac{ay}{dx}$ ஐக் காண்க.

(b) எல்லா $x \in R$ இற்கு $f(x) = x^4 + ax^3 + bx^2 + k$ ஆகும். இங்கு $a, b$ என்பன மெய் மாறிலிகளும் $k$ ஓர் பரமானமும் ஆகும்.

(i) $f'(x) > 0$ இற்கு $0 < x < 1$ உம்

(ii) $f'(x) < 0$ இற்கு $1 < x < 2$ உம்

(iii) $f'(0) = 0$ உம்

(iv) $f'(2) = 0$ உம் எனின்

மாறிலிகள் a, b ஐக் காண்க.

$y = f(x)$ இன் வரைபை வரைக

சமன்பாடு $f(x) = 0$ ஆனது

(i) $-1 \leq k \leq 0$ ஆயின் நான்கு மெய் மூலங்களை கொண்டிருக்கும் எனவும்,

(ii) $k < -1$ ஆயின் இரு மெய் மூலகங்களைக் கொண்டிருக்கும் எனவும்,

(iii) $k > 1$ ஆயின் மெய் மூலங்களைக் கொண்டிராது எனவும் காட்டுக.

(c) $a$ ஆரையுடைய வட்டத்தைச் சுற்றி வரையத்தக்க இழிபரப்பைக் கொண்ட சாய்சதுரம் ஓர் சதுரம் எனக் காட்டுக. அவ் இழிவுப்பரப்பு $4a^2$ எனவும் காட்டுக

15. (a) $x^2 - y^2 = a^2$ எனின் சார்புகள் $xy,\ \log_e(x+y)$ என்வற்றின் வகையீட்டுக் குணகங்களை $y$ இன் சார்பில் காண்க.

அதில் இருந்து $\int y\,dx$ ஐக் காண்க

(b) பகுதிகளாகத் தொயிடுவதன் மூலம்

$\int_0^{\frac{1}{\sqrt{8}}} \frac{x\sin^{-1}(2x)}{\sqrt{1-4x^2}}\, dx$ ஐக் காண்க

(c) (i). $\frac{1}{(x+a)x^2} = \frac{A}{x+a} + \frac{B}{x} + \frac{c}{x^2}$ ஆகுமாறு மாறிலிகள் $A, B, C$ ஐக் காண்க.

இங்கு a ஓர் மெய் எண்ணும் $x \in R - \{-a, 0\}$ உம் ஆகும்.

அதிலிருந்து $\int \frac{(x+1)}{x(1+xe^x)^2}\, dx$ ஐக் காண்க.

(ii). பொருத்தமான பிரதியீட்டைப் பயன்படுத்தி

$\int \frac{5x^7 - 7x^6}{(x^2+1+2x^7)^2}\, dx$ ஐக் காண்க.

16. (a) நேர்கோடுகள் $y = m_1 x + c_1,\ y = m_2 x + c_2$ என்பவற்றிற்கு இடைப்பட்ட கோணத்தைக் காண்க.

$ABCD$ ஓர் வட்ட நாற்பக்கல் ஆகும். $AB, BC, DA$ என்னும் பக்கங்கள் முறையே $x+y=8,\ y-2x+10=0,\ x=1$ என்னும் கோடுகள் வழியே கிடக்கின்றன. பக்கம் $BC$ ஆனது $2\sqrt{5}$ அலகு நீளத்தைக் கொண்டதுடன் $x$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சின் நேர்த்திசையுடன் மணிக்கூட்டுத்திசைக்கு எதிர்த்திசையில் கூர்ங்கோணத்தை அமைப்பதுடன் புள்ளி $C$ ஆனது முதலாம் கால் வட்டத்தில் இல்லை எனின் $CD$ இன் சமன்பாட்டைக் காண்க

$BD$ இன் சமன்பாடு $y = x - 4$ எனக் காட்டுக.

புள்ளிகள் A,B,C,D இன் ஊடு செல்லும் வட்டத்தின் மையமானது AD இல் கிடக்கின்றது என்பதை உய்த்தறிந்து, மையத்தின் ஆள்கூறு (1,2) எனக் காட்டுக.

(b) $S \equiv x^2 + y^2 - a^2 = 0$ என்னும் வட்டத்திலுள்ள யாதாயினும் ஓர் புள்ளி $(a\cos\theta \; , \; a\sin\theta)$ என்னும் வடிவில் உரைக்கப்படலாம் எனக் காட்டுக. இங்கு $0 \leq \theta \leq 2\pi$

இவ்வட்டம் $S = 0$ ஆனது x அச்சை $A(-a,0)$ இலும் $B(a,0)$ இலும் வெட்டுகின்றது. $\propto - \beta = 2\lambda$ ஆகுமாறு $P(\propto)$, $Q(\beta)$ என்பன இவ்வட்டதிலுள்ள இரு மாறும் புள்ளிகளாகும். இங்கு $\lambda$ ஓர் மாறிலியாகும். $AP, BQ$ என்பன இடைவெட்டும் புள்ளியின் ஒழுக்கு $x^2 + y^2 - 2ay\tan\lambda = a^2$ எனும் வட்டம் எனக் காட்டுக

17. (a) முக்கோணி $ABC$ இற்கு வழமையான குறியீடுகளுடன் கோசைன் நெறியைக் கூறி, நிறுவுக.

$BPC$ ஓர் சமபக்க முக்கோணி ஆகுமாறு புள்ளி $P$ ஆனது முக்கோணி $ABC$ இற்கு வெளியே உச்சி $A$, பக்கம் $BC$ என்பவற்றிற்கு எதிரே அமைந்துள்ளது. AP இன் நீளத்தை $a, c,$ $\hat{ABC}$ என்பவற்றின் சார்பில் காண்க.

$\Delta ABC$ இன் பரப்பு $S$ எனின் $AP^2 = \lambda(a^2 + b^2 + c^2) + \mu S$ அகுமாறு $\lambda$, $\mu$ ஐக் காண்க

(b) பின்வரும் சமன்பாடுகளைத் தீர்க்க

(i) $\tan(\pi cosx) = \cot(\pi sinx)$

(ii) $\cos 3x + \sin(2x - {}^{7\pi}/_{6}) = -2$

(c) $\frac{\propto^2}{1-\tan^2\theta} = \frac{\sin^2\theta + \propto^2 - 2}{\cos 2\theta}$ ஆயின் $\propto$ ஆனது -1 இற்கும் 1 இற்கும் இடையே எப்பெறுமானத்தையும் எடுக்காது எனக் காட்டுக. இங்கு $n \in R$ உம் $\theta \neq (4n+1)^{\pi}/_{4}$, $n \in z$ உம் ஆகும்.

## இணைந்த கணிதம் - II

### பகுதி A

**(எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க)**

01. A யிற்குக் கிழக்கே B இருக்குமாறு A யும் B யும் d km இடைத்தூரத்திலுள்ள இரண்டு புள்ளிகளாகும். கிழக்குடன் $\propto$ கோணம் வடக்கு திசையில் $Vkmh^{-1}$ கதியுடன் காற்று வீசும் போது ஒரு சைக்கிளோட்டி A யிலிருந்து B க்குச் சென்று மீண்டும் A யை அடைகிறான். முழுப்பிரயாணத்திலும் சைக்கிளோட்டியின் மாறாக் கதி $u\,(>v)kmh^{-1}$ ஆகும். இப் பிரயாணங்களுக்கான வேக முக்கோணிகளை ஒரே வரிப்படத்தில் வரைக. இதிலிருந்து இந்த இரண்டு பிரயாணங்களுக்கும் சைக்கிளோட்டி எடுக்கும் நேர வித்தியாசத்தைக் காண்க்.

02. கிடையுடன் 30° யில் சாய்ந்துள்ள ஒப்பமான சாய்தளத்தின் மீது வைக்கப்பட்ட 4kg திணிவுடைய A என்னும் துணிக்கையொன்று இலேசான நீளா இழையொன்றினால் இணைக்கப்பட்டு அவ்விழையானது சாய்தளத்தின் உச்சியில் உள்ள ஒப்பமான நிலைத்த கப்பியின் மேலாகச் சென்று இழையின் மறுமுனையில் 3kg திணிவுடைய B என்னும் துணிக்கையுடன் இணைக்கப்பட்டு சுயாதீனமாகத் தொங்குகிறது.
    - (i) தொகுதியின் ஆர்முடுகல், இழையிலுள்ள இழுவை, இழையினால் கப்பியில் தொழிற்படும் விசை என்பவற்றைக் காண்க.
    - (ii) தொகுதி ஓய்விலிருந்து விடுவிக்கப்பட்டு இரண்டு செக்கன்களின் பின்னர் A யின் வேகத்தையும் அது பயணம் செய்த தூரத்தையும் காண்க.

03. $2m, 3m$ திணிவுள்ள இரு ஒப்பமான கோளங்கள் முறையே $u, 2u$ வேகங்களுடன் எதிர்த்திசைகளில் இயங்கி நேரடியாக மோதுகின்றன. கோளங்களுக்கிடையேயான மீளமைவுக்குணகம் 1/3 எனின் மோதுகையின் பின் கோளங்களின் வேகங்களைக் காண்க. மோதுகையால் ஏற்பட்ட கணத்தாக்கினையும், தொகுதியின் சக்தி நட்டத்தையும் காண்க.

04. $l$ நீளமுள்ள நீளா இழையொன்றின் ஒரு முனையானது $O$ என்ற நிலைத்த ஒரு புள்ளிக்கு இணைக்கப்பட்டு அதன் மறுமுனையில் துணிக்கையொன்று இணைக்கப்பட்டு அத்துணிக்கை $O$ விற்கூடான கிடையான நேர்கோடு வழியே $O$ விலிருந்து $l\,cos\theta$ தூரத்திலுள்ள புள்ளியிலிருந்து விடுவிக்கப்படுகிறது. அத்துணிக்கை $O$ விற்கு நிலைக்குத்தாகக் கீழே வரும் போது அதன் வேகம் $V$ எனின் $V = \sqrt{2gl\,(1 - sin^3\theta)}$ எனக் காட்டுக.

05. $\underline{a}$ யும் $\underline{c}$ யும் இரண்டு அலகுக்காவிகளும் $|\,\underline{b}\,| = 4$ உம் ஆகும். காவிகள் $\underline{a}$ க்கும் $\underline{c}$ க்கும் இடைப்பட்ட கோணம் $tan^{-1}\sqrt{15}$ ஆகும். $\underline{b} - 2\underline{c} = \lambda\,\underline{a}$ எனின் $\lambda$ வின் பெறுமானங்களைக் காண்க

06. a ஆரையுடைய பொள் அரைக்கோளமொன்று அதன் வளைபரப்பின் ஒரு புள்ளி கிடையுடன் கோணம் $\propto$ வில் சாய்ந்துள்ள ஒரு கரடான தளத்துடன் தொடுகையில் இருக்க சமநிலையில் வைக்கப்பட்டுள்ளது. உராய்வுக் கோணமானது $\propto$ வை விட சிறிதாக ,இருக்காது எனவும், 30° யை விட பெரிதாக இருக்காது எனவும் காட்டுக.

07. தம்முள் புறநீக்குவனவும், யாவுமள்ாவினவுமான (exhaustive) மூன்று நிகழ்ச்சிகளின் நிகழ்தகவுகள் $\frac{1-3p}{2}$ , $\frac{1+4p}{2}$ , $\frac{1+p}{6}$ எனின் $p$ இன் பெறுமானத்தைக் காண்க

08. $A, B$ என்பன $P(A) = P(B) = \frac{1}{3}$ ஆகவும், $P\left(\frac{A}{B}\right) = \frac{3}{8}$ ஆகவும் இருக்குமாறு மாதிரிவெளி $\Omega$ இலுள்ள இரு எழுமாற்று நிகழ்ச்சிகளாகும். $P(A' \cap B')$ ஐக் காண்க்.

09. 100 அவதானிப்புக்களைக் கொண்ட ஒரு தொடை தரவுகளின் இடை, நியமவிலகல் ஆகியவை முறையே 40, 5 ஆகும். இத்தொடையில் உள்ள ஒரு அவதானம் மட்டும் 40 இற்குப் பதிலாக 50 என பிழையாக பதியப்பட்டது. சரியான இடையையும், சரியான நியம விலகலையும் காண்க

10. $x_1, x_2, x_3, \ldots, x_n$ என்ற தரவுத் தொடைக்கான இடை $\mu$ எனின் $\Sigma x\,(x - \mu)^2 - \mu\,\Sigma\,x\,(\mu - 2x) = \Sigma\,x$ எனக் காட்டுக.

### பகுதி – B

**(விரும்பிய ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க)**

11. a) நேரான வீதியில் இயங்கும் X எனும் மோட்டார் வண்டி $u$ வேகத்துடனும் f எனும் சீரான ஆர்முடுகலுடனும் புள்ளி A ஐ கடக்கின்றது. $X$ ஆனது வேகம் $\lambda u\;(\lambda > 2)$ வரை ஆர்முடுகி $B$ இல் f எனும் சீரான அமர்முடுகலுடன் இயங்க ஆரம்பிக்கின்றது. $X$ ஆனது புள்ளி $A$ ஐ கடப்பதற்கு $\frac{u}{f}$ நேரத்திற்கு முன்னர் $2u$ எனும் சீரான வேகத்துடன் பயணம் செய்யும் $Y$ எனும் மோட்டார் வண்டி $A$ ஐக் கடக்கின்றது. ஒரே வரிப்படத்தில் $X, Y$ என்ற இரு மோட்டார் வண்டிகளுக்குமான வேக – நேர வரைபுகளை வரைக.

இதிலிருந்து (i) $AB = \frac{1}{2f}\,u^2\,(\lambda^2\text{-}1)$ எனவும்

(ii) $\lambda < 2 + \frac{\sqrt{10}}{2}$ ஆயின் X இற்கு Y ஐக் கடக்க இயலாது எனவும் காட்டுக

b) ஒப்பமான கிடை மேசையின் மீது ஓய்விலிருக்கும் திணிவு $1kg$ உம் நீளம் $1m$ உம் உடைய $AB$ எனும் கோலின் முனை $A$ இல் $20g$ திணிவுடைய எலியொன்று ஓய்வில் இருக்கிறது. கோலிற்கு $\overrightarrow{AB}$ திசையில் $P\,N$ எனும் பெரிய மாறா விசை பிரயோகிக்கப்படுகின்றது. இக்கணத்தில் கோலுக்கு விசையை பிரயோகிப்பதன் மூலம் எலி சீரான ஆர்முடுகலுடன் இயங்குகிறது. கோல் கரடானது எனின் எலியானது முனை $B$ க்கு வரும் போது கோலின் வேகம் $2ms^{-1}$ உம், $\overrightarrow{AB}$ நோக்கி கோல் இயங்கிய தூரம் $\frac{1}{3}m$ உம் ஆயின் $P = 6.48\,N$ எனக் காட்டுக. அது $B$ இற்கு வரும் போது எலி வேலை செய்யும் வீதத்தைக் காண்க.

12. a) O என்னும் புள்ளியிலிருந்து துணிக்கை ஒன்று u வேகத்துடன் கிடையுடன் $\propto$ எறியற் கோணத்தில் எறியப்படுகிறது. O இனூடான கிடைத்தளத்திலிருந்து $h$ நிலைக்குத்து உயரத்திலுள்ள புள்ளிகள் $A, B$ என்பவற்றுக்கூடாக துணிக்கை செல்ல எடுக்கும் நேரங்கள் முறையே $t_1, t_2$ எனின் (இங்கு $t_1 < t_2$) , $t_1 + t_2$ , $t_1\,t_2$ ,AB என்பவற்றைக் காண்க.

இதிலிருந்து பின்வரும் முடிவுகளை உய்த்தறிக.

i. எறிபொருளின் அதியுயர் உயரமும், அதற்கு எடுக்கும் நேரமும்

ii. எறிபொருளின் $O$ இனூடான கிடை வீச்சும், பறப்பு நேரமும்

b) படத்தில் காட்டப்பட்டுள்ள தொகுதி $B\hat{A}C = 30°$ ஆகவும் திணிவு $m$ உம் உடைய $ABC$ எனும் செங்கோண முக்கோணியின் மையக் குறுக்கு வெட்டைக் கொண்ட ஒரு ஆப்பாகும். $C$ என்பது ஒப்பமான இலேசான கப்பி ஆப்பில் பொருத்தப்பட்டுள்ளது. $D$ என்பது நிலைத்த ஒப்பமான கப்பியும், $E$ என்பது திணிவு $2m$ உம் உடைய அசையும் கப்பியுமாகும். $m$ திணிவுள்ள ஒரு துணிக்கை $P, BC$ யில் வைக்கப்பட்டு இலேசான நீளா இழையின் ஒரு முனைக்கு இணைக்கப்பட்டு அவ்விழை $C, D, F$ களில் உள்ள கப்பிகளுக்கு மேலாகவும், அசையும் கப்பியின் கீழாகவும் சென்று மறுமுனை $A$ யுடன் கட்டப்பட்டுள்ளது. இழையின் பாகங்கள் இறுக்கமாக இருக்க வைக்கப்பட்டு தொகுதி மெதுவாக விடப்பட்டது. நேரம் $t$ யில், $C$ யிலிருந்து $P$ இற்குரிய இடப்பெயர்ச்சி $x$ உம், $C$ யிலிருந்து $D$ இற்கான இடப்பெயர்ச்சி $y$ உம், $F$ இலிருந்து $E$ இற்கான இடப்பெயர்ச்சி $z$ உம் ஆயின் $x, y, z$ தொடர்பைப் பெற்று $\ddot{x}, \ddot{y}, \ddot{z}$ தொடர்புக்கான சமன்பாட்டைப் பெறுக.

ஆப்பின் $\overrightarrow{BA}$ நோக்கிய ஆர்முடுகல் $2\,\frac{(1+\sqrt{3})}{11}\,g$ எனக் காட்டுக

$E$ இன் ஆர்முடுகலைக் கண்டு தளத்திற்கும் ஆப்புக்கும் இடையில் மறுதாக்கத்தைக் காண்க. $E$ இற்குப் பதிலாக திணிவு $m$ உள்ள தராசுத் தட்டு வைக்கப்பட்டு அதன் மீது திணிவு $m$ ஐ வைத்தால் தராசுத் தட்டின் ஆர்முடுகலைக் காண்க.

*(மிகுதி நாளை...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அருள்மிகு கொல்லியம்பாவை



ஆன்மீகம் 77

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

கஷ்டம் வரும்போதுதான் இஷ்ட தெய்வம் நினைவுக்கு வருகிறது. ஆனாலும், ஏதோ ஒரு வகையில் கடவுளை நினைக்கின்றானே. அது பெரிதல்லவா. முற்காலத்தில் எந்த விதக் கருவியின் உதவியும் வழிகாட்டுதலும் இல்லாமல் ரிஷிகளும், சித்தர்களும், கிரஹங்களை ஆராய்ந்து உலகம் உய்ய வழிகாட்டினர். பஞ்சாங்கம் பிறந்தது. வானசாத்திரம் தோன்றியது. உலகம் பரந்து கிடப்பதையும் வானில் ஆயிரக்கணக்கான அண்டங்கள் மிதப்பதும், அதில் பூமியும் ஒன்று என்பதாயும் உலகுக்கு அறிவித்தனர். இராமாயண காலத்துக்கு முன்னேயே நவக்கிரகங்கள் பற்றி சொல்லி வைத்தனர். ஆனால், இவர்களை பழங்காலத்து ஆசாமிகள் விஞ்ஞான அறிவற்றவர்கள் என்பது போல புறக்கணித்து பதினோராம் நூற்றாண்டில் உலகம் உருண்டை வடிவில் இருக்கிறது என்று ஆராய்ந்து சொன்ன கலிலியோவை கல்லால் அடித்து விரட்டிய ஐரோப்பியர்களை நாம் உலக நாகரீகத்தின் பிரம்மாக்கள் என்று கொண்டாடுவதும் விஞ்ஞானிகளை நடமாடும் கண் கண்ட கடவுள்கள் என்றும், நம்மவர் அன்று அன்னியர்களிடம் அடிமைப் பட்டுக் கிடந்ததைவிட இன்று அன்னிய மோகத்தில் அவலநிலையில் அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள். சமீப காலத்தில் ஆகாயத்தில் மிதந்து கொண்டிருந்த மனிதன் அனுப்பிய ஆராய்ச்சிக் கூடமொன்று கட்டுப்பாடு இழந்து பூமியை நோக்கி பாய்ந்து வந்தபோது உலகமே அஞ்சி நடுங்கவில்லையா? எந்த நாட்டின் மீதும் விழக்கூடாது. கடலில் தள்ளினால் தான் மனிதகுலத்தை நோக்கி விரைந்து வரும் ஆபத்தை நீக்கிக்கொள்ளலாம் என்ற விஞ்ஞானிகள் முடிவை கேட்கும் மக்கள் உலகமெங்கும் உயிர் பயத்தால் நடுங்கவில்லையா? தம் இஷ்ட தெய்வங்களை வேண்டிக் கொள்ளவில்லையா? அதைப்போல் தற்போது ஏராளமான எண்ணிக்கையில் வானில் பறக்கவிட்ட உபகோள்கள் வானிலிருந்து தள்ளிவிடப் பட்டு பூமியை அவ்வப்போது தாக்கும். அப்போதெல்லாம் மனித குலத்திற்கு தெய்வநினைவு அதிகரிக்கும். விஞ்ஞான காலத்தின் விபரீதங்களைப் புரிந்து கொண்டு பழமை என்று அலட்சியம் செய்தவைகளைத் தேடி வருவார்கள். விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகள் இன்று பெரிதாகத் தோன்றலாம். ஆனால், இவைகள் தெய்வத்தால் படைக்கப்பட்டது



கொல்லி மலையில் ஆகாச அருவியின்
ஓரம் பாறையில் அன்னதானம்.

போன்று நிரந்தரம் அல்லவே! மாறாக இவை அழிவில் தான் முடியும். தானும் அழிந்து உலகையும் அழிக்கும். சித்தர்கள் எந்தவித சுயலாபத்திற்கோ- விளம்பரத்திற்கோ எதையும் செய்துவைக்கவில்லை. மனிதகுல நன்மையொன்றையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டார்கள். ஆனால், மனித குலம் அவர்களை மறந்தேவிட்டது. பதினெட்டு சித்தர்க்ள எழுதிவைத்த பாடல்களைத் தொகுத்து வைத்தும் இன்றைய மக்கள் அப்படி ஒன்றிருக்கிறதா என்ற ஞானமே அற்று- இயந்திரங்களின் அடிமைகளாக மாறி உடல் உழைப்பின்றி- சுகவாசிகளாய் உடல் நலம் வலுவிழந்து கொண்டிருக்கிறார்கள். இவை இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டிற்குப்பின் மாயமாய் மறையும். இரண்டாயிரத்து இரண்டிலிருந்து வானிலே அநேக அதிசய காட்சியைக் காண்பர்! மழை பெய்தும், பெய்யாமலும் கெடுக்கும். உதயவனின் உஷ்ணக்கரங்கள் பூமியை நோக்கி மேலும், மேலும் நீளும்! மனிதனின் சுயநலத்தால் இயற்கை அன்னையைச் சீண்டு கிறான். தன்னை அகழ்வாரையும் தாங்கும் பொருமையே உருவான பூமித் தாயை, உறங்கும் வேங்கையை இடரிப்பார்ப்பதுபோல் மனித குலம் உலவெங்கும் நடந்துகொள்கின்றது. இதனால் இரண்டாயிரத்தி இரண்டு முதல் அவள் கோபம் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கும்.

தொடரும்

## தேர்தலைக் காரணம் காட்டி தமிழர் பகுதிகளில் இராணுவக் குவிப்பு

# கருணாநிதி தெரிவிப்பு



செப்டம்பர் தேர்தலை ஒட்டி பாதுகாப்பு என்ற பெயரில் இலங்கை வடக்கு மாகாணத்தில் மட்டும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். மிக அதிக அளவிலான இந்த இராணுவக் குவிப்பு மக்களிடம் பெரும் பயத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கூறியுள்ளார். டெசோ ஆர்ப்பாட்டம் தொடர்பாக தி.மு.க தலைவர் கருணாநிதி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இலங்கையில் வடக்கு மாகாண கவுன்சிலுக்கு வரும் செப்ரம்பர் மாதம் தேர்தல் நடைபெறவுள்ளது. வடக்கு மாகாணத்தில்இராணுவம் அதிக அளவில் குவிக்கப்பட்டுள்ளதை, குறைக்க வேண்டுமென்று சர்வதேச நாடுகள் கூறிவருகின்றன. ஆனாலும் பாதுகாப்புக்காக என்று சாக்கு சொல்லி, அந்த இராணுவத்தை விலக்கிக்கொள்ள இலங்கை அரசு மறுத்து வருகிறது. வடக்கு மாகாணத்தில் தற்போதுள்ள காவல் துறை மற்றும் இராணுவத்தினர் அனைவருமே சிங்களர். மொத்தம் 15 படைப்பிரிவு வீரர்கள் அங்கே முகாமிட்டிருக்கிறார்க்ள. அதாவது 2 லட்சம் வீரர்களைக் கொண்ட இலங்கை இராணுவத்தில் வடக்கு மாகாணத்தில் மட்டும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர்.

மிக அதிக அளவிலான இந்த இராணுவக் குவிப்பு மக்களிடம் பெரும் பயத்தை ஏற்படுத்தியுள்ளது. பாரம்பரியமாக தமிழர்களுக்குச் சொந்தமான பகுதிகளையும் தமிழர்கள் வாழும் வீடுகளையும் சிங்களவர்கள ஆக்கிரமித்துக்கொண்டிருப்பதைப் பற்றியும் வடக்கு மாகாணத்தில் பெருமளவுக்கு இராணுவ நடமாட்டம் இருப்பதையும் பற்றியும் டெசோ மாநாட்டில் கடந்தாண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் முக்கியமானவையாகும். அந்தத் தீர்மானங்களில் ஈழப்பகுதிகளில் தமிழ் மக்களின் நிலங்களும் வீடுகளும் வன்பறிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக சம்பூர், மன்னார், வவுனியா போன்ற பகுதிகளில் தமிழர்களுக்கு உரிமையான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு வழிவழியாக வாழ்ந்து வந்த பகுதிகளில் தமிழ் ஈழ மக்கள் நிலங்களைப் பறிகொடுத்த நிலையில் சொந்த மண்ணிலேயே அகதிகளாக வாழும் கொடுமைக்கு முடிவு கட்டும் முயற்சிகளை ஐ.நா. மன்றம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று இந்த மாநாடு வலியுறுத்துகிறது. ராஜீவ்-ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தில் நமக்கு உடன்பாடு இல்லையெனினும் இந்திய அரசும், இலங்கை அரசும் 1985 ஆகஸ்ட் முதல் 1986 டிசம்பர் வரை ஓராண்டு காலத்திற்கும் மேலாகவே விவாதித்து ஆழந்த பரிசீலித்து பல கலந்தாலோசனைகளுக்குப் பின்னர் தான் அந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது என்பதே உண்மையாகும். இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பிரிட்டிஷார் ஆளுகையின் கீழ் இலங்கை இருந்த போதே 1940 ஆம் ஆண்டில் டொனோமோர் கமிஷன் பரிந்துரை ஏற்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணக்கவுன்சில்கள் அமைப்பதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. எனினும் அது செயலாக்கத்திற்கு வரவில்லை.

இலங்கை விடுதலை அடைந்ததற்குப் பிறகு, 1955 ஆம் ஆண்டு சோக்சி கமிஷன் வட்டார கவுன்சில்கள் குறித்துப் பரிந்துரை செய்திருந்தது. 1957 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட பண்டாநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரக் கவுன்சில்கள் பற்றிய அம்சமும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாணக்கவுன்சில்கள் என்ற அம்சம், ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தத்தில் 1987 ஆம் ஆண்டு பிறந்த புதிய யோசனை அல்ல. 1940 ஆம் ஆண்டிலிருந்தே விவாதிக்கப்பட்டு இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு செயல் திட்டமாகும். இலங்கை வடக்கு மாகாணத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான நிலங்களையும் வீடுகளையும் சிங்களவர்கள் ஆக்கிரமித்துக்கொண்டும் பெருமளவுக்கு இராணுவத்தை நிறுத்தி வைத்தும் 13 ஆம் திருத்தச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்தும் தேர்தல் நடத்துவதற்கு ராஜபக்ச அரசு முயற்சி செய்து கொண்டிருக்கும் இந்த நிலைமையில்தான் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் ஆணையர் நவநீதம்பிள்ளை இலங்கைக்குச் செல்லவிருக்கிறார். வடக்கு மாகாணத்தில் உள்ள வவுனியா மாவட்டத்திற்கும் கீழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலை மாவட்டத்திற்கும் இடையே உள்ள வரலாற்று ரீதியான இணைப்பைத் துண்டித்திடும் வகையிலும் சிங்களப் பகுதியான அனுராபுர மாவட்டத்தோடு இணைந்திருக்கும் வகையிலும் வெலிஓயா என்ற சிங்களப் பெயரிலேயே ஒரு புதிய மாவட்த்தை ராஜபக்ச அரசு உருவாக்கி அங்கே சிங்களவர்களை மட்டுமே குடியேற்றி வருகின்ற நிகழ்வுகளும் தற்போது நடைபெற்று வருவதை டெசோ அமைப்பின் சார்பில் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தின்படி, பொதுத் தேர்தல் நடைபெறும் காலத்தில் இதுபோன்ற மாவட்டங்களைப் புதிதாக உருவாக்குவதோ எல்லைகளை மாற்றுவதோ, புதிய குடியேற்றத்தை ஊக்குவிப்பதோ கூடாது என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டிருந்த போதிலும் அதை மீறுகின்ற வகையில் சிங்கள அரசு செயற்பட்டு வருவதையும் டெசோ அமைப்பின் சார்பில் ஏற்கனவே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இவற்றை கருத்தில் கொண்டு ஒட்டுமொத்தமாக இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13ஆம் திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற வலியுறுத்தியும் இலங்கையில் நடைபெறவுள்ள கொமன் வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது என்பதை வலியுறுத்தியும் தமிழக மீனவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டியும் இலங்கையில் தமிழர் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டியும் டெசோ கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களை தமிழக மக்களின் ஈர்க்கவும் சிங்கள ஆதிக்க வெறிக்கு எதிராகத் தமிழர் எழுச்சிஸ்ய ஒன்று திரட்டவும் தான் வருகின்ற ஆகஸ்ட் 8 ஆம் திகதி தமிழகம் முழுவதும் உள்ள மாவட்டத் தலைநகரங்களில் தமிழர் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. இவ்வாறு தி.மு.க தலைவர் கருணாநிதி அறிக்கையில் கூறியுள்ளார்.

இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த நூற்பரிசுத் தேர்வில் துறை ரீதியாக தெரிவான நூல்கள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட சிறந்த நூற்பரிசுத் தேர்வில் துறை ரீதியாக தெரிவு செய்யப்பட்ட நூல்களினதும் அவற்றின் ஆசிரியர்களினதும் பெயர்விபரங்களை வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் வெளியிட்டுள்ளார்.

இதன்படி கவிதைத்துறையில் அல்வாயைச் சேர்ந்த க.சின்னராஜன் எழுதிய **வல்லைவெளி** தொகுப்பும் நாடகத்துறையில் கொழும்புத்துறையைச் சேர்ந்த க.இ.கமலநாதன் எழுதிய **முதுசொம்** நூலும் ஆய்வும் விமர்சனமும் துறையில் திருநெல்வேலியைச்சேர்ந்த எஸ்.சிவலிங்கராஜா எழுதிய **சுன்னாகம் அ.குமார சுவாமிப்புலவர் வாழ்வும் பணியும்** என்ற நூலும் சிறுகதைத் துறையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தேவராஜா முகுந்தன் எழுதியுள்ள **கண்ணீரினூடே தெரியும் வீதி** எனும் நூலும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் நாவல்களில் யாழ். நகரைச் சேர்ந்த குருசுமுத்து இராய்ப்பு எழுதிய **உப்புக்காற்று** நூலும் உயர் கல்வித்துறையில் பருத்தித்துறையை சேர்ந்த பேராசிரியர் மா. நடராஜசுந்தரம் எழுதிய **பத்தாயிரம் ஆண்டு வங்கியியல் முகாமைத்துவம்** எனும் நூலும் சிறுவர் இலக்கியத்துறையில் வவுனியாவைச் சேர் ந்த கலாநிதி நா.தர்மராஜா (அகளங்கன்) எழுதிய **சின்னஞ்சிறிய சிறகுகள்** தொகுப்பும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பல்துறைசார்ந்த நூல்களில் சமயம் சார்ந்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கு.ரஜீவன் எழுதிய **பெரியபுரான சூசனத்தில் சைவ சித்தாந்தம்** என்ற நூலும் வரலாறு சார்ந்து மீசாலையைச் சேர்ந்த சி.கா.கமலநாதன் எழுதிய **வரணியின் மரபுரிமைகள் பாகம்-1** எனும் நூலும் பொது தகவல்கள் சார்ந்து கொழும்பு-5 ஐ சேர்ந்த திருமதி பி.சோமகாந்தன் எழுதிய **ஈழத்துத்தமிழ்ப் பெண் ஆளுமைகள்** நூலும் மேற்படி சிறந்த நூல்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட நூல்களின் ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நடைபெறவுள்ள தமிழ் இலக்கிய விழாவின் நிறைவு நாளான செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# சீரான போக்குவரத்து குறித்து அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தென்மராட்சி பிரதேச செயலர்பிரிவுக்குட்பட்ட கோவிலாக்கண்டி, தனங்கிளப்பு மக்கள் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது நாவற்குழி சந்தியிலிருந்து தனங்கிளப்பு வரையில் சேவையில் ஈடுபடும் வடபிராந்திய இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகள் அடிக்கடி பழுதடைவதாகவும் இதனால் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அமைச்சரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இது விடயம் தொடர்பில் கவனம் செலுத்திய அமைச்சர் குறித்த விடயம் தொடர்பாக துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடபிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதான பிரதிப் பொது முகாமையாளர் அஸ்ஹரிடம் பணிப்புரை விடுத்தார். (அ)




- 435 - கொன்ஸ்டண்டீனபோலின் ஆயர் நெஸ்டோரியஸ் (நெஸ்டோரியனிசத்தை ஆரம்பித்தவர்) பைசண்டைன் பேரரசன் இரண்டாம் தியோடோசியசினால் எகிப்துக்கு நாடுகடத்தப்பட்டார்.
- 1492 -கொலம்பஸ் ஸ்பெயினைவிட்டுப் புறப்பட்டார்.
- 1492 - ஸ்பெயினில் இருந்து யூதர்கள் கத்தோலிக்கர்களினால் வெளியேற்றப்பட்டனர்.
- 1645 - முப்பதாண்டுப் போர்: ஜேர்மனியில் ஆலர்ஹைம் என்ற இடத்தில் பிரெஞ்சுப் படைகள் புனித உரோமப் பேரரசுப் படை களைத் தாக்கி வெற்றி பெற்றனர்.
- 1678 - அமெரிக்காவின் முதலாவது கப்பல், லெ கிரிஃபோன் றொபேர்ட் லசால் என்பவரால் அமைக்கப்பட்டது.
- 1858 - இலங்கை தொடரூந்து சேவையை ஆளுநர் சேர் ஹென்றி வோர்ட் ஆரம்பித்து வைத்தார்.
- 1914 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனி பிரான்சுடன் போர் தொடுத்தது.
- 1916 - ஐரிய தேசியவாதி சேர் றொஜர் கேஸ்மெண்ட் ஈஸ்டர் எழுச்சியில் அவரின் பங்களிப்புகளுக்காக லண்டனில் தூக்கிலிடப்பட்டார்.
- 1934 - அடொல்ஃப் ஹிட்லர் ஜேர்மனியின் பெரும் தலைவரானார்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: இத்தாலி பிரித்தானிய சோமாலிலாந்து மீது போர் தொடுத்தது.
- 1949 - தேசிய கூடைப்பந்து சங்கம் ஐக்கிய அமெரிக்காவில் அமைக்கப்பட்டது.
- 1960 - நைஜர் பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1976 - காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 1990 -கிழக்கிலங்கையில் காத்தான்குடியில் முஸ்லிம் பள்ளிவாசலில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பெண்கள், குழந்தைகள் உட்பட 103 பேர் கொல்லப்பட்டனர்.


**பிறப்புக்கள்**

- 1924-லியொன் யூரிஸ், அமெரிக்க நாவலாசிரியர் (இ. 2003)
- 1957 - மணி சங்கர், இந்திய திரைப்பட இயக்குநர்

**இறப்புகள்**

- 1977 - மக்காரியோஸ், சைப்பிரசின் முதலாவது ஜனாதிபதி (பி. 1913)
- **1993 - சுவாமி சின்மயானந்தா, வேதாந்த தத்துவத்தைப் பரப்பிய இந்திய ஆன்மக்வாதி (பி. 1916)**
- 2008 - அலெக்சாண்டர் சோல்செனிட்சின் நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர் (பி. 1918)

**சுவாமி சின்மயானந்தா**



சுவாமி சின்மயானந்தா 1916 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி இந்தியாவின் கேரளா மாநிலத்தில் எர்ணாகுளம் என்ற இடத்தில் "பூதம்பள்ளி" எனும் பெயரைக் கொண்ட ஓர் இந்துக் குடும்பத்தில் பிறந்தார். இவர் ஒரு இந்திய ஆன்மீகவாதி. சின்மயா மிஷன் என்ற அமைப்பைத் தொடங்கி அதன் மூலம் உலகெங்கும் ஆன்மீக வேதாந்த கருத்துக்களை பரப்பியவர்.

இவரது இயற்பெயர் பாலகிருஷ்ணமேனன் என்பதாகும். லக்னோ பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்து வெளியேறியவர் ஊடகவியல் துறையில் நுழைந்து இந்திய அரசியல், பொருளாதார மற்றும் சமூகவியலில் பணிகளை ஆற்ற முனைந்தார். இந்திய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு சிறை சென்றார். ரிஷிகேஷம் சென்று சுவாமி சிவானந்தரைச் சந்தித்தார். அன்றிலிருந்து இவர் இந்து சமய ஆன்மீகத்துறையில் அதிக அக்கறை கொண்டார்.

சுவாமி சிவானந்தரினால் 1949 ஆம் ஆண்டு பெப்ரவரி 25 சிவராத்திரி நாளன்று பாலகிருஷ்ணமேனன் சந்நியாச தீட்சை பெற்றுக் கொண்டு "சுவாமி சின்மயானந்தா" என்ற பெயரையும் பெற்றார். இமயமலையில் சுவாமி தபோவன மகாராஜ் என்புவரிடம் 8 ஆண்டுகள் இந்து தத்துவத்தைப் பயின்றார். சுவாமிகளின் ஆசியுடன் வேதாந்தத்தை உலகெங்கும் பரப்ப இமாலயத்தை விட்டு சின்மயானந்தர் புறப்பட்டார். உலகெங்கும் பல ஆசிரமங்களையும் மையங்களையும் ஆரம்பித்தார். பல பாடசாலைகளையும் மருத்துவ மனைகளையும் ஆரம்பித்தார்.

சுவாமி சின்மயானந்தா 1993 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி சான்டியாகோ கலிபோர்னியாவல் மறைந்தார். இவரது சீடர்கள் இவர் அவ்விடத்தில் மகா சமாதி அடைந்ததாகக் கருதுகின்றனர். இவர் ஆரம்பித்த சின்மயா மிஷன் நிறுவனம் உலகம் முழுவதும் உள்ள அமைப்பாகும். 350 மையங்களில் இது இயங்குகிறது.

# விபத்தில் படுகாயமடைந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகி டிப்பருக்குள் சிக்குண்டதில் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி 156 ஆம் கட்டையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. முன்னாள் சென்று கொண்டிருந்த பேருந்தை முந்திச் செல்ல முற்பட்ட போது திடீரென வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் இரண்டு குடும்பஸ்தர்கள் அவ் வீதியூடாக பயணித்த கொண்டிருந்த டிப்பர் ரக வாகனத்தினுள் சிக்குண்டனர்.

இதில் கிளிநொச்சியைச் சேர்ந்த ஆர். பஞ்சாட்சரம் (வயது-40) என்ற குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்நிலையில் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட கிளிநொச்சி தொண்டமான் நகர் பகுதியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான கந்தையா மதியாபரணம் (வயது -48) என்ற குடும்பஸ்தர் கடந்த 31 ஆம் திகதி இரவு 11.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டது. இவரது மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தார். (அ-6)

# கரவெட்டியில் கவிதை செயலமர்வு

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கரவெட்டி பிரதேச செயலகத்தில் கவிதைச் செயலமர்வொன்று இடம்பெறவுள்ளது. இச் செயலமர்வு யாழ். மாவட்டத்திலுள்ள தகுதி வாய்ந்த வளவாளர்களைக் கொண்டு பத்து அமர்வுகளாக நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே கரவெட்டி பிரதேசத்தைச் சேர்ந்த ஆர்வமுடையவர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்பு பிரதேச செயலகத்திற்கு நேரடியாக வருகை தந்தோ அல்லது 0212263258 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டோ தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# மஞ்சவனப்பதி முருகனுக்கு இன்று கொடியேற்றம்

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறவுள்ளன. இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும் அதனைத் தொடர்ந்து 11 மணியளவில் கொடியேற்றமும் இடம்பெறும்.

12 ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும் 16 ஆம் திகதி கைலாசவாகனமும் 17 ஆம் திகதி தண்டாயுதபாணி உற்சவமும் 18 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும் 19 ஆம் திகதி இரதோற்சவமும் 20 தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குறுதியளித்து வாக்கு பெறுவோர் அதை சரியாக நிறைவேற்றுவதில்லை

## ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசியல் தந்திரமாகவே நாட்டிற்குள் 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பில் அரசாங்கம் நாட்டில் விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.**



மக்களை வாட்டும் ஆட்சியாளர்களுக்கு எதிராக அணித்திரள்வோம் என்ற தலைப்பில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலில் இரண்டு கொள்கைகளை கொண்டு அங்கம் வகிப்பவர்கள் மத்தியில் கொள்கை மோதல்களை ஏற்படுத்தி சமூகத்தில் நிலவும் உண்மையான பிரச்சினைகளை மறைக்க சில அரசியல்வாதிகள் முயன்று வருகின்றனர்.

13 ஆவது திருத்தச் சட்டத்துடன் நாட்டில் புதிய அரசியல் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். 1948 ஆம் ஆண்டு தொடக்கம் ஆட்சிக்கு வந்த சகல அரசாங்கங்களும் மக்களுக்கு வழங்கும் வாக்குறுதிகளை மறந்தன அல்லது மறக்க செய்தன.

இதன் காரணமாக நாடு தற்போது இருள் சூழ்ந்த பாதாளத்திற்கு விழுந்துள்ளது. மக்கள் தமது வாக்குகளினால் தெரிவு செய்த அரசியல்வாதிகளிடம் கேள்வி கேட்கும் உரிமை இருக்கின்றது.

மனிதர்களாக வாழ்வதற்கு அதற்கு தேவையான அடிப்படை தேவைகளை பெற்று கொள்வதற்காகவுமே அரசாங்கம் ஒன்றை மக்கள் ஆட்சியில் அமர்த்துவதன் மூலம் எதிர்பார்க்கின்றனர்.

மக்கள் வாழ்வதற்கு உணவு, உடை, இருப்பிடம், மருந்து, வேலைவாய்ப்பு உட்பட பல தேவைகள் உள்ளன.

இவற்றையெல்லாம் தருவதாக அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை வழங்கி, வாக்குகளை பெறுகின்றனர். ஆட்சிக்கு வந்த பின்னர் வாக்குறுதிகளை மீறி செயற்படுகின்றனர்.

ஜனாதிபதி பொய்களை கூறி அரசியல் நடத்துகிறார். எதனையும் அறியாதவர் போல் ஜனாதிபதி இந்த விளையாட்டை விளையாடுகிறார். வடக்கு, கிழக்கில் 13 ஐப் பற்றி கூறுகின்றார். 13 பிளஸ் என்கிறார்கள். இவ்வாறு ஜனாதிபதி கூற நாடு அவரின் சொத்தல்ல. இதற்கு நாட்டு மக்களின் பெரும்பாலானவர்கள் விருப்பம் தேவை.

தற்போது வடக்கு பற்றி பேசும் விடயங்கள் தேர்தலுக்கு பின்னர் என்னவாகும் என்று பார்ப்போம்.

தற்போது ஐக்கிய தேசியக் கட்சி பெயரளவிலான எதிர்க்கட்சியாக இருக்கின்றது. எதிர்க்கட்சி அரசாங்கத்தின் தேவைக்கு அமையவே செயற்படுகின்றது.

ஜே.வி.பி. சிறிய கட்சி என்றாலும் நாட்டில் முக்கியமான பிரச்சினைகளை பற்றி கலந்துரையாடி சரியானதை சரியாக செய்து வருகின்றது என்றார். (அ-2)

# ஞானக்குழந்தைகள் இல்ல விளையாட்டு விழா

ஈ.எஸ்.பேரம்பலம் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் யாழ். பாலர் கல்விக் கழக நிர்வாகப் பாலர் பாடசாலைகளுக்கிடையான விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கி ழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாலர் கல்விக்கழக தலைவர் எஸ்.பி. காசிநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்ட ஓய்வுநிலை நீதிபதி ஆர்.வசந்தசேனன் மற்றும் அவரது பாரியார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினராக ஈ.எஸ்.பி நிறுவன உரிமையாளர் லயன் ஈ.எஸ்.பி நாகரத்தினம், கௌரவ விருந்தினராக கிளிநொச்சி வலய ஓய்வுபெற்ற முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் செ.செல்வராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)

# ஆடி அமாவாசை விழா

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான ஆடி அமாவாசை விழா எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.45 மணி முதல் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிவரை நடைபெறவுள்ளது.

குறித்த தினத்தில் அதிகாலை 5.45 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகும் ஆடி அமாவாசை விழாவில் விசேட பூசை, வசந்த மண்டபப் பூசை, தீர்த்தவாரி, தீர்த்த மண்டப அனுக்கிரகம் என்பன இடம் பெறும். (அ-5)

# புலம்பெயர் மக்களால் நாட்டுக்கு அச்சுறுத்தல்

## புதிய இராணுவத்தளபதி

இலங்கை அரசாங்கம் நல்லிணக்க மிக்க அரசியலை நோக்கிச் செல்ல முயற்சிக்கும் போது அதற்கு வெளிநாடுகளில் வாழும் பிரிவினைவாதிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக இலங்கையின் புதிய இராணுவத் தளபதியான லெப்டினல் ஜெனரல் ஆர்.எம்.பி தயா ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் 20 ஆவது புதிய தளபதியாக நேற்று முன்தினம் இராணுவத் தலைமையகத்தில் சுப வேளையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மோதல் முடிவுக்கு வந்து நாட்டில் அரசியல் நல்லிணக்கச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் சர்வதேச நாடுகளிலுள்ள பிரிவினைவாதிகள் செயற்பாடுகள் நாட்டிற்கு அச்சுறுத்தலாகவுள்ளன.

இத்தகைய சவால்களுக்கு முகம்கொடுக்க கூடிய வகையில் இராணுவத்தின் தந்திரோபாய நுட்பங்களுடனான செயற்பாடுகள் அமைய வேண்டியதன் அவசியத்தை அவர் விளக்கினார். அத்துடன் நாட்டின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் சிறந்த முறையில் முன்னெடுக்க அறிவு, திறமை, தொழில்நுட்பம் கொண்ட பலம்மிக்க அமைப்பாக இராணுவம் தொடர்ந்தும் செயற்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணைகள் வெற்றிபெறா

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகள் வெற்றியளிக்கவில்லை என ஜே.வி.பி.கட்சி அறிவித்துள்ளது. கடந்த காலங்களில் நிறுவப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் தோல்வியை தழுவியுள்ளதாகவும் இதனால் மக்கள் ஆணைக் குழுக்கள் மீது நம்பிக்கையிழந்துள்ளதாகவும் ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் பிமல் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் குற்றவாளிகளை தண்டிப்பதற்கு பதிலாக குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்து வருவதாக குறிப்பிட்டுள்ளார். யுத்த காலத்தில் காணாமல் போனவர்கள் பற்றிய ஜனாதிபதி ஆணைக் குழுக்களின் பணிகள் குறித்து அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

யுத்த காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்தி அவர்களது குடும்பஸ்தாருக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். யுத்த நிறைவின் பின்னர் அரசாங்கம் முதலாவதாக இதனையே செய்திருக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

மாறாக அரசாங்கம் அவசர அவசரமாக படையினரைப் பயன்படுத்தி வடக்கு கிழக்கு காணிகளை அபகரித்து முகாம்களை அமைப்பதில் தீவிரம் காட்டி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். எந்தவொரு ஜனாதிபதி ஆணைக்குழுவும் இது வரையில் குற்றவாளிகளுக்கு தண்டனை விதித்ததில்லை என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# முன்னாள் போராளியை ஒப்படைத்தது இந்தியா

(சென்னை)

சர்வதேச பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளி ஒருவர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டதாக அரச தகவல் திணைக்கள இணையம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

முன்னாள் புலிஉறுப்பினராக இருந்த இளைஞனே இவ்வாறு மும்பை குற்றத்தடுப்பு பிரிவினரால் இலங்கை பாதுகாப்பு தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் மும்பையில் இருந்து நைரோபிக்கு செல்ல முயற்சித்த போதே கைது செய்யப்பட்டுள்ளதாக அந்த இணையத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தான் விமானம் மூலம் இலங்கையில் இருந்து இந்தியா வந்ததாக அவர் தெரிவித்த போதும் அவர் படகு மூலமே இந்தியா சென்றிருந்தமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இதனைத் தொடர்ந்தே அவர் நாடு கடத்தப்பட தீர்மானிக்கப்பட்டதாக மும்பை குற்றத்தடுப்பு பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டதாக மேலும் இந்த இணையம் தெரிவித்துள்ளது. (அ-2)

# பாதுகாப்பு உறவுகளை பலப்படுத்திக் கொள்ளத்தயார்

இலங்கையுடன் பூரண அளவில் பாதுகாப்பு உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளத் தயார் என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

பாதுகாப்பு உற்பத்தி விவகாரங்களில் இலங்கையுடன் முழு அளவில் கூட்டுறவு ஏற்படுத்திக் கொள்ளப்படும் என தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் புதிய ஜனாதிபதி நியமிக்கப்பட்டதன் பின்னர் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஜயலத் வீரக்கொடி, அந்நாட்டு பாதுகாப்பு உற்பத்தி அமைச்சர் ராணா தன்வீர் ஹூசைனைச் சந்தித்த போது இந்தக் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளன.

பாதுகாப்பு உற்பத்தித் துறையை மேலும் விஸ்தரிப்பதற்கு இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன. (அ-2)



வட்டுக்கோட்டை கண்ணலிங்கேஸ்வரர் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் நடைபெற்ற போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அடிப்படை வசதிகள் எதுவுமின்றி அல்லற்படும்

# கணுக்கேணி கிழக்கு கிராம மக்கள்

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள கணுக்கேணி கிழக்கு கிராம மக்கள் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி அல்லற்பட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில் தமக்கு நிரந்தர வீடுகள் அமைத்துத் தருமாறு பிரதேச செயலர், அரசாங்க அதிபர், ஜனாதிபதி ஆகியோரிடம் மகஜர் கையளித்தும் இதுவரை வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை என கவலை தெரிவித்துள்ளனர்.**

போரினால் இடம்பெயர்ந்து கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட 176 குடும்பங்கள் மேற்குறித்த கிராமத்தில் வாழ்ந்து வருகின்ற நிலையில் ஒரு குடும்பத்திற்கு கூட நிரந்தர வீடு வழங்கப்படவில்லை.

விவசாயத்தை நம்பி தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வருகின்ற நிலையில் 6 மாத காலம் வசிக்கக்கூடிய நிலையில் 50 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டன.

இத்தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டு மூன்று வருடங்கள் ஆகிவிட்டதால் சரிந்து விழுகின்ற நிலையில் உள்ளன.

இதில் 38 நிரந்தர வீடுகள் போரால் சேதமடைந்தபோது 8 நிரந்தர வீடுகள் புனரமைப்பதற்கே நிதி வழங்கப்பட்டது.

இக்கிராமத்தில் 8 வீதிகள் உள்ள நிலையில் 2 வீதிகளே புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

போரால் மிகவும் பாதிக்கப்பட்ட பெண்களை தலைமைத்துவமாக கொண்ட 17 குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகளும் 98 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளும் தேவையாகவுள்ளன.

இக்கிராமத்திற்கு மின்சாரம் இன்றுவரை வழங்கப்படவில்லை. இக்கிராமத்தில் உள்ள 37 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் எவையும் வழங்கப்படவில்லை.

ஊனமுற்றவர்களை அங்கத்தவர்களாக கொண்ட 12 குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

9 முன்னாள் போராளிகள் வாழ்ந்து வருகின்ற நிலையில் ஒரு சிலருக்கு வாழ்வாதார உதவிகள் எவையும் வழங்கப்படவில்லை.

பொதுக்கிணறுகள் இரண்டு தேவையாக உள்ளன. கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம் உள்ள போதும் முழுமையாக புனரமைக்கப்படவில்லை. மின்சாரம், மலசலகூடம், குடிநீர் ஆகிய வசதிகளும் இல்லை.

மாதர் சங்கம், முன்பள்ளி, கமக்கார அமைப்பு ஆகியவற்றிற்கு காணி கட்டடம் என்பன இல்லை. சமுர்த்தி திட்டம் 70 குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

36 விதவைகள் இங்கு வாழ்ந்து வருகின்றனர். ஒரு அங்கத்தவர்களைக் கொண்ட 18 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் அவர்களுக்கு எதுவுமே வழங்கப்படவில்லை. 52 குடும்பங்களுக்கு மலசலகூட வசதி இல்லை.

எனவே, தமது அவல நிலையை கருத்திற் கொண்டு துறை சார்ந்த அதிகாரிகள் உதவ முன்வரவேண்டும் என அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

## கழிவுநீர் வாய்க்கால்கள் புனரமைப்பு

(பூநகரி)

கடந்த 30 ஆண்டு காலமாக பூநகரி பகுதியில் புனரமைக்கப்படாத நிலையிலிருந்த மூன்று கமக்கார அமைப்பு பிரிவுகளின் கழிவு நீரோடும் வாய்க்கால்கள் 9.5 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கும் வேலை நடைபெற்று வருகின்றது.

ஐ.ஓ.என் நிறுவனத்தின் நிதியுதவியுடன் இவ்வாய்க்கால்கள் கொல்லகுறிச்சி, மட்டுவில்நாடு கிழக்கு, செட்டிய குறிச்சி ஆகிய மூன்று கமக்கார அமைப்பு பிரிவுகளில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

புனரமைக்கப்படாத நிலையிலிருந்த வாய்க்கால்களினால் கழிவு நீர் வழிந்தோட முடியாத நிலையில் மழைக்காலங்களில் நெல் வயல்கள் பெரும் அழிவுகளைச் சந்தித்துள்ளன.

இந்நிலையில் தற்போது இவ்வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்டு வருவதன் மூலம் இனிவரும் காலத்தில் விவசாயம் செய்வதற்கு சாதகமான சூழ்நிலை உருவாகும் என மட்டுவில் நாடு கிழக்கு கமக்கார அமைப்பின் செயலாளர் எஸ்.யசுதரன் தெரிவித்துள்ளார். (ம-9-84)






பிரபல இந்திய பாடகர்களாலும் இசை அமைப்பாளர்களாலும் பூநகரியில் இருந்து புலம்பெயர்ந்து கனடாவில் வசிக்கும் சரவண பொய்கை நடராஜா திருஞானபவனின் பாடல் ஒலி, ஒளி இறுவெட்டாக பூநகரி புகழ்மாலை என்ற பெயரில் நேற்று முன்தினம் பூநகரி ம.வியில் வெளியிடப்பட்டது. மக்களுடன் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் இறுவெட்டின் முதற் பிரதியை பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் வெளியிட்டு வைக்க கிளி.மாவட்ட முன்னாள் அரச அதிபர் தி.இராசநாயகம் பெற்றுக் கொள்வதையும் தென்னிந்திய திரைப்பட இசையமைப்பாளர் அக்னி கணேஸ் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-பூநகரி, மானிப்பாய் செய்தியாளர்கள்)

## அடிக்கல் நாட்டு விழா

(ஆனையிறவு)

கண்டாவளை சமுர்த்தி வங்கி சங்க அலுவலக அடிக்கல் நாட்டு விழா நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு புளியம் பொக்கணை சந்தியில் அமைந்துள்ள பிரதேச செயலக வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலர், கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி முகாமையாளர், கண்டாவளை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கண்டாவளை பிரதேசத்திற்குட்பட்ட கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-264)

## வவுனியாவில் புலமைப்பரிசில் மாணவர்களுக்கான அருணலு விருது வழங்கும் நிகழ்வு

(பூந்தோட்டம்)

கடந்த வருடம் நடைபெற்ற தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வவுனியா மாவட்ட மாணவர்களுக்கான அருணலு விருது வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு வவுனியா புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள கொமர்ஷல் வங்கிக் கிளையில் நடைபெறவுள்ளது.

அருணலு சிறுவர் சேமிப்புக் கணக்கை கொமர்ஷல் வங்கியில் பேணி கடந்த வருடம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டங்களில் முதல் மூன்று இடங்களையும் மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற 34 மாணவர்களுக்கு அருணலு விருதும் பணப்பரிசும் கொமர்ஷல் வங்கியின் வவுனியாக் கிளையினரால் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

கொமர்ஷல் வங்கியின் வவுனியா கிளை முகாமையாளர் டி.பரதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம-266)

# ஆங்கிலதின போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

**செய்தி வாசித்தல்**

**தரம் 12**

எஸ்.கீர்த்தனா, ரி.தர்மினி (கிளி/ஜெயபுரம் ம.வி), எஸ்.தட்சாயினி (கிளி/பூநகரி ம.வி)

**தரம் 13**

என்.மேரி ஜெஸ்ரீனா, வி.சரண்யா (கிளி/பூநகரி ம.வி)

**குழுப்பாடல்**

**ஆரம்பப்பிரிவு 1 (1-2)**

கிளி/இரணைதீவு றோ.க.த.க. பாடசாலை, கிளி/முழங்காவில் ஆரம்ப வித்தி., கிளி/[illegible]

**குழுப்பாடல்**

**ஆரம்பப்பிரிவு 2 (3-5)**

கிளி/இரணைதீவு றோ.க.த.க. பாடசாலை, கிளி/முழங்காவில் ஆரம்ப வித்தி., கிளி/கரியாலை நாகபடுவான் இலக்கம் 2.

**குழுப்பாடல் - சிரேஷ்ட பிரிவு**

கிளி/பூநகரி ம.வி

**குழுப்பாடல் - ஆரம்ப பிரிவு**

கிளி/இரணைதீவு றோ.க.த.க. பாடசாலை, கிளி/பூநகரி ம.வி.

**எழுத்தாக்கம்**

**தரம் 6**

ஏ.ஜோபிகா (கிளி/முழங்காவில் ம.வி), ஜே.இசைநிலா (கிளி/ஞானிமடம் அ.த.க. பாடசாலை), ஜி.சனோசன் (கிளி/முழங்காவில் ம.வி)

**தரம் 7**

பி.மனோஜன் (கிளி/பூநகரி ம.வி), பி.கபோறி, வி.நிலக்ஷன் (கிளி/முழங்காவில் ம.வி)

**தரம் 8**

எஸ்.சஜின்தா (கிளி/ஞானிமடம் அ.த.க பாடசாலை), எஸ்.சுஜார்த்தா (கிளி/முழங்காவில் ம.வி), ரி.சங்கவி (கிளி/பூநகரி ம.வி)

**தரம் 9**

வி.பார்த்தீபன் (கிளி/ஞானிமடம் அ.த.க. பாடசாலை), ஆர்.வித்தியா, எம்.லக்ஷிகா (கிளி/முழங்காவில் ம.வி)

(தொடரும்...) (ம-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் இருக்கிறாரா என்ற கேள்வி முக்கியமல்ல, அவரது இலட்சியம் நிறைவேற்றப்படுவதே அவசியம்!


## ஃபாதர் இமானுவேல் கூறுகிறார்

கிறிஸ்தவ மத போதகரான ஃபாதர் இமானுவேல், ஈழத்தமிழர் இன ஒழிப்புக்கு எதிராக, உலக அரங்கில் நீதி கேட்டுப் போராடும் அறிவாயுதப் போராளி. தன் வலி மிகுந்த எழுத்தினால், ராஜதந்திரப் பேச்சினால், உலக நாடுகளிடையே இவர், மேற்கொள்ளும் டிப்ளமேட்டிக் வேலைகளால், ராஜபகஷ அராங்கத்துக்ககு இவர்மீது அதிக காழ்ப்புணர்ச்சி உள்ளது. 80 வயதைத் தொட்டிருக்கும் இமானுவேல், இப்போது ஜேர்மனியில் குருமடம் ஒன்றில் வசித்து வருகிறார்.

"எப்படி, இருக்கிறீர்கள்... உங்களைக் கண்டுபிடிப்பதே பெரிய விடயமாக இருக்கிறதே!"

"ஏதோ இருக்கிறேன்! எம்முடைய புலம்பெயர் வாழ்வும், பாதுகாப்பின்மையும், நீதிக்கான போராட்டமும், தொடர் செயற்பாடுகளும் பெரும்பாலும் எமது இருப்பை மறைத்தே வைக்க வேண்டிய அவசியத்தை உண்டாக்கிவிட்டது. நான் கிறிஸ்துவ மதத்தில் ரோமிலும் கிழக்காசிய நாடுகளிலும் முக்கிய பதவிகளை வகித்தவன். கிழக்காசிய நாடுகளின் கிறிஸ்துவ மதப் பொறுப்பாளராக இந்தியா, பாகிஸ்தான், சீனா, இலங்கை ஆகிய நாடுகளில் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளேன்.

இலங்கை எமது தாய்நாடு என்றால், "இந்தியா எமது தந்தை நாடு. ஆனால், மஹிந்த ராஜபகஷவின் அரசாங்கமும் சிங்கள ஊடகங்களும் என்னைப் புலி ஃபாதர் எனத் தொடர்ந்து தவறான பரப்புரை செய்து வருகிறார்கள். இதனால், இலங்கை, இந்தியாவுக்குள் என்னை அனுமதிக்க மறுக்கிறார்கள். இதனாலேயே, எனது நடமாட்டங்கள் சுருங்கிவிட்டன. உடல் மூப்பு காரணமாகவும், சுகவீனமும் அவ்வப்போது என்னை முடக்கிப் போட்டு வருகிறது!"



"புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும் அமைப்புகளும் தங்கள் நலனில் அக்கறை காட்டுவதில்லை என்ற குரல்கள் ஈழத்திலிருந்து ஒலிக்கின்றனவே?"

"புலம் பெயர் தமிழ் அமைப்புக்களும் தமிழ் மக்களும் அரசியல் பேசுவது மட்டுமல்ல, தாயகத்தில் வாடும் மக்களுக்கு உதவி செய்யவும் வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து எதுவும் இல்லை. செல்வாக்கு உள்ளவர்கள், அங்கு உள்ள நமது உறவுகளைக் குடும்பம் குடும்பமாகத் தத்து எடுக்க வேண்டும். சர்வசாதாரணமாக செலவழிக்கும் ஐந்து அல்லது பத்து பவுண்ட்களைக் கூட ஈழத்துக்கு அனுப்பலாம். ஈழம் எனும் வேருக்கு நம்முடைய சிறு உதவிகள் தான் நீர் வார்க்கும் என்பதை புலம்பெயர்ந்த தமிழர்கள் உணர வேண்டும்!"

"இந்த இக்கட்டான சுழலில், ஈழத்தில் சாதிப் பிரச்சினைகள் முட்டி முளைப்பதாக கிளம்பும் தகவல்கள் உண்மையா?"

"உண்மைதான். வருத்தமாக இருக்கிறது. சாதி, மதம், இனம், மொழி என எதன் பேரிலும் மனிதனை மனிதன் அடக்குதலை என்னால் ஏற்க்க முடியாது. பிரபாகரன், சாதி ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிராகவும், பெண்ணொடுக்குமுறைக்கெதிராகவும் போராடினார். 1960-களில், தமிழகத்தில் தந்தை பெரியார் என்ற தீர்க்கதரிசி இத்தகைய கொடுமைகளுக்கெதிராகப் போராடினார். நான் அவரை மதிக்கிறேன். இந்தயாவில் அம்பேத்கார் போன்ற புரட்சியாளர்களும் சாதிக்கு எதிராக திவிரமாகப் போராட்டத்தை முன்னெடுத்தார்கள். இலங்கையில் அப்படியான தலைவர்கள் தோன்றவில்லை. இன்றைய நிலையில், ஈழத் தமிழர்கள் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். நம்மிடையே இருக்கும் சின்னச் சின்னப் பிளவுகள் கூட ஈழத்தைச் சின்னாபின்னமாக்கிவிடும் என்பதை எந்த நொடியும் மறந்துவிடக் கூடாது.

"தந்தை செல்வா, போன்ற தலைவர்கள் ஆரம்பித்த அஹிம்சைப் போராட்டம், அதன் பிறகு 30 ஆண்டுகால ஆயுதப்போராட்டம் ஆகிய அனைத்தும் முள்ளிவாய்க்காலில் ஒரு தேக்கத்தை அடைந்தது. இந்த நிலையில் கடந்த நான்கு ஆண்டுகளாக உங்களைப் போன்ற புலம்பெயர்ந்த தமிழர்கள் மேற்கொள்ளும் இராஜதந்திர பொலிட்டிக்கல் நெற்வேக்கிங் ஆகியவை ஈழப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்திச் செல்லுமா?"

"சிங்களப் பேரினவாதத்தின் முன் தந்தை செல்வாவாவின் அகிம்சைப் போராட்டமும், விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டமும் கைகொடுக்கவில்லை. இது" அநீதிகள் நிறைந்த உலகம். அதுவும் அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர், புரட்சிப்போராட்டங்களின் மீது சர்வதேசத்தின் கண்ணோட்டம் மாறியிருக்கிறது. எனவே, இனி அரசயல் போராட்டமே எமக்கான விடுதலையைப் பெற்றுத் தரும் என நம்புகிறோம்.

எங்களுடைய டிப்ளமேட் செயல்பாடுகளின் சோதனை முயற்சிகள், ஐக்கிய நாடுகள் மன்றத்தில் நல்ல பலனை அளித்தது. அதன் வெளிப்பாடே அமெரிக்காவின் இரண்டு முறையான தீர்மானங்களும். கடந்த காலங்களில் நாங்கள் செய்த தவறுகளிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டு, முன்னேற விரும்புகிறோம். ஆக்கபூர்வமான விமர்சனங்களில் இருந்து எம்மைத் திருத்திக்கொள்கிறோம். மன்னிப்பும் கேட்கவிரும்பகிறோம்."

"முள்ளிவாய்க்காலுக்குப் பிறகு இந்தியாவுடன் பேச்சவார்த்தை நடத்த விரும்புகிறோம். அமெரிக்கா, பிரிட்டன், கனடா நோர்வே எனப் பல நாடுகள் எங்களுக்குப் பக்கபலமாக இருக்கின்றன. எங்களின் இந்தச் செயற்பாடுகளுக்கான விளைவுகளைப் பொறுத்திருந்து பார்ப்போம்!"

"இலங்கையின் வடபகுதியில் நடைபெறவிருக்கும் மாகாணத் தேர்தலில், ஈழ அரசாங்கத்தின் அதிகா அழுத்தத்தை மீறி தமிழர்கள் வெற்றி பெறுவார்களா?"

"தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சிங்கள குடியேற்றங்கள் இந்தத் தேர்தலில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தும். இருப்பினும் அனைவருக்கும் வாக்குரிமை, முறையான வாக்குப்பதிவு எனத் தேர்தல் நேர்மையாக நடத்தப்பட்டால், தமிழர்கள் வெற்றி பெறுவார்கள். ராஜபக்ஷ அரசின் மீதான கோபத்தையும், தமிழர்களின் தாகத்தையும் மக்கள் தேர்தலில் வெளிப்படுத்துவார்கள்!"

இந்தியா முன்மொழிந்த 13-வது சட்டத் திருத்த மசோதாவை இலங்கை ஏற்க மறுக்கிறது. அதேவேளையில் ஈழத் தமிழர்களும் அதிருப்தி வெளிப்படுத்துகிறார்கள். 13-வது சட்டத் திருத்தத்தை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?"

"கடந்த சில தசாப்பதங்களாக தமிழர்களுக்கு நீதி கிடைக்கவில்லை. முள்ளிவாய்க்கால் போரில் விடுதலைப் புலிகளையும் அப்பாவித் தமிழர்களையும் கொன்று குவித்த பிறகு, பான்கீமூனுக்கும் மன்மோகன் சிங்குக்கும் ராஜபக்ஷ பல வாக்குறுதிகள் கொடுத்தார். ஆனால், அவை எவையுமே செயல்வடிவம் எடுக்கவில்லை. லாண்ட் பவர், பொலிஸ் பவர் என எதனையும் இன்று வரை வழங்கவும் இல்லை.

இந்த நிலையில் எங்களைப் பொறுத்தவரை 13-வது சட்ட திருத்தம் முடிவும் அல்ல. தொடக்கமும் அல்ல. அது எங்களுக்கு எந்த வகையிலும் உதவாது. இலங்கை அரசின் நரித் தந்திர வேலைகளால் இந்தியாவுக்குப் பெரும் சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களுக்குக் குறைந்தபட்ச நீதியைக் கூட வழங்க மாட்டார்கள்."

"நவம்பர் மாதம் இலங்கையில் கொமன்வெல்த் நாடுகளின் மாநாடு நடைபெற இருக்கிறது. மாநாட்டின் முடிவில் இலங்கை அதிபர் ராஜபக்ஷ கொமன் வெல்த் நாடுகளின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட இருப்பதாக வதந்திகள் உலவுகின்றன். அது உண்மையா?"



"அந்த நிலைமை மட்டும் ஒரு போதும் நேர்ந்துவிடக் கூடாது. அது இப்போதைய ஈழத் தமிழர்களின் நிலையை முற்றிலும் மோசமாக்கிவிடும். இலங்கையில் நடைபெற இருக்கும் கொமன்வெல்த் நாடுகளின் மாநாட்டை அதன் உறுப்பு நாடுகள் புறக்கணிக்கவேண்டும். இந்தியா அதில் பங்கேற்கக் கூடாது. ஒருவேளை நீங்கள் அந்த மாநாட்டில் பங்கேற்றால் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையில் நீங்களும் பங்கேற்றதற்கு ஒப்பாகும் என கனடாவிடம் விளக்கினோம்.

"எங்கள் வார்த்தைகளைச் செவிமடுத்து கனடா அந்த மாநாட்டில் பங்கேற்காது எனச் சொல்லி இருக்கிறார்கள். அதேபோல பிரிட்டன், நியூசிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிடமும் பேசிக்கொண்டிருக்கிறோம். அவர்களும் எமக்குச் சாதகமான முடிவை எடுப்பார்கள் என நம்புகிறோம்!"

நீங்கள் பிரபாகரனுடன் நெருக்கமாக இருந்ததாக தகவல்கள் உண்டு. பிரபாகரன் இறந்ததாக இலங்கை அரசாங்கம் அறிவித்தது எந்த அளவுக்கு உண்மை?

1986 இல் நான் யாழப்பாணக் குருமடத்தில் பேராசிரியராக இருந்த போது ஒருமுறை பிரபாகரனைச் சந்தித்தேன். அதன் பின்னர், 1991 ஆம் ஆண்டு என்னை அவர் சந்திக்க விரும்புவதாகத் தெரிவித்தார். அப்போதும் சந்தித்தேன். அந்த இரண்டு சந்திப்புகளுமே எமது தாயகம் குறித்தும் மக்களின் எதிர்காலம் குறித்தும் விவாதிப்பதிலேயே மையம் கொண்டது. அதன்பிறகு, நான் இலங்கையில் இருந்து வெளியேறிவிட்டேன்.

பிரபாகரன் இருக்கிறாரா? என்ற கேள்வி எமக்கு இப்போது முக்கியமானதாகத் தெரியவில்லை. அவர் பெயரைச் சொல்லி சிலர் பணம் சம்பாதிக்கிறார்கள். பிரபாகரனைக் காட்டிலும், அவரின் இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதே இப்போது முக்கியம்."

ஆனந்த விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணில்லாதிருக்க முயல்க. உண்மையாயிருக்க மட்டுமே உழைத்திடுக.

~ ஹோம்ஸ் ~

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்குத் தேர்தலில் கடும் போட்டி
## வேட்பாளர்கள் தயார்? வாக்காளர் தயாரா?

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் எதிர் பார்த்திராத வகையில் அரசியல் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் களம் இறங்கியுள்ளன.

896 வேட்பாளர்கள் போட்டியிடும் அளவில் வடக்கு மாகாணசபைத் தேர்தல் சூடுபிடித்துள் ளமை சாதாரண விடயமல்ல.

வேட்பு மனுத்தாக்கலுக்கான திகதி இன்னும் நீடிக்கப்பட்டால் சுயேட்சைக் குழுக்கள் களம் இறங்கும் வாய்ப்பு அதிகரித்திருக்கும். அந்த அளவிற்கு வடக்கு மாகாண சபைத் தேர்தல் பலருக்கு ஆசையை ஊட்டியுள்ளது.

இத்தகைய ஆசை தமிழர்களுக்கு விடிவைப் பெற்றுக் கொடுப்பதற்கானது என்று கூறுவதை விட, தத்தம் பதவியாசையை நிறைவேற்றுவதற் கானதென்று கூறுவதே பொருத்துடையது.

ஆக, நினைத்துப் பார்க்க முடியாத அளவில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கடும் போட்டி நடக்கும் என்பது உறுதி.

இதற்காக வேட்பாளர்கள் தீவிர பிரசாரங் களிலும் ஈடுபடுவர். சில சந்தர்ப்பங்களில் மோதல்களும், தாவல்களும் நடக்கும் என்பதும் மறுதலிப்புக்குரியவை அல்ல.

எதுவாயினும் வடக்கு மாகாண சபைத் தேர்தல் பற்றி வாக்காளர் பெருமக்கள் என்ன நினைக்கி றார்கள் என்று ஆராய்ந்தால் அவர்கள் தம்பாடு.

நேரம், காலம், பணமுள்ளவர்கள் தேர்தலில் போட்டியிடட்டும். நாங்கள் எங்கள் பாட்டில் இருப்பம்.

தனிநாடு கேட்டு பதாகைகள் தூக்கி, வேட்டுச் சத்தங்களுக்காய் பதுங்குகுழி வெட்டி, வரிசையில் நின்று அரைக்கிலோ அரிசி பெற்று கஞ்சி காய்ச்சிக் குடிப்பதற்குள்,

புக்காரா குண்டு போட; ஐயகோ! என்றவாறு இடம்பெயர்ந்து சொத்தும் சொந்த முகவரியும் இழந்து அகதிகள் என்று பட்டம் பெற்று,

வாடகை வீட்டில் குடியிருந்து உடையவனின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி, மனம் வெந்து வன்னி யுத்தத்தில் உதிரம் கொட்டி முள்ளிவாய்க் காலில் முழுமையும் பறிகொடுத்து,

பற்றற்ற பட்டினத்தார் போல் உடற்கூற்று வண்ணம் பாடி, இழந்தாரை நினைத்து அந்திமம் செய்து, காணாமல் போனவருக்காய் மகஜரும் கொடுத்து,

இருந்த தாலியை இந்திய வீட்டுத் திட்டத்திற் காய் அடகு வைத்து அலைகின்ற இவ் வேளை யில்,

வடக்கில் 896 வேட்பாளர்கள் போட்டியிடு கின்றனர்.

அட, சீமான்கள் எங்குதான் இருந்தார்களோ! என்று கூறுமளவில் வாக்காளர்கள் இருக்கின் றனர். அப்படியானால் புள்ளடி போடுவது யார்?

ஓ! நாங்கள் வாக்காளர். தேர்தல் முடிய வாக்களிப்பம். இப்ப என்ன அவசரம். இதுதான் எங்கள் வாக்காளரின் முடிவு.

# முரணான வகையில் சாட்சியம் சந்தேகநபர் விடுதலையானார்

(கரவெட்டி)

வடமராட்சி கரணவாய் பகுதியில் 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற சண்டை மற்றும் நகை பறிப்பு வழக் கின் முக்கிய சந்தேக நபரை சுற்ற வாளியென தெரிவித்து பருத்தித் துறை நீதிமன்றம் நேற்று வெள்ளிக் கிழமை தீர்ப்பளித்தது.

கரணவாய் பகுதியில் 2009 ஆம் ஆண்டு தை மாதம் 26 ஆம் திகதி இச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக முறைப் பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் முக்கிய சந்தேக நபர் சம்பவ தினம் எதிராளிகளின் காணிக்குள் அத்துமீறி நுழைந்து எதிராளிகளை தடியால் தாக்கியதுடன் ஒரு எதிராளியின் 36 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலி பென்ரனை அறுத்து எடுத்துச் சென்று, அதில் 11 ஆயிரம் ரூபா நட்டத்தை ஏற்படுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணை நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்த சேகரம் முன்னிலையில் இறுதித் தீர்ப்புக் காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, நீதவான் தனது தீர்ப்பில் மூன்று சிவில் சாட்சிகள் வேறு பட்ட கருத்துக்களை தெரிவித்துள்ள தாகவும் குறித்த சந்தேக நபர் எதிராளி களை தாக்கியதாக கூறப்படும் ஆயுதம் மாறுபட்டு தெரிவிக்கப்படுவதாகவும் சாட்சியத்தில் சம்பவ தினம் திங்கட்கிழ மையாக காணப்படும் போது, செவ் வாய்க்கிழமை என சாட்சியமளிக்கப்ப ட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனால் குறித்த மூன்று சிவில் சாட்சிகளும் மாறிமாறி வேறுபட்ட சாட் சியங்கள் அளித்தமையால் வழக்கின் முக்கிய சந்தேக நபரை வழக்கிலிருந்து விடுவித்தார்.

அத்துடன் உண்மைக்கு புறம்பான வகையில் குறித்த சந்தேக நபருக்கு எதிராக வழக்கை தொடுத்த சாட்சிய மளித்த மூன்று நபர்களுக்கும் எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டு மென தீர்ப்பளித்தார். (அ-9-24)

## இளைஞனைத் தாக்கியோருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

இளைஞனை தாக்கிய நால்வருக் கும் யாழ். நீதிமன்று விளக்கமறியல் விதித்துள்ளது.

கடந்த வாரம் திருநெல்வேலி பண்ணைப்பகுதியில் சுயாதீன ஊடக வியலாளர் எஸ். மயூரதன் நால்வரி னால் தாக்கப்பட்டதோடு அவருடைய தங்கச்சங்கிலியும் அறுக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் மானிப்பாய், கொக்குவில் பிறவுண் வீதி, ஏழாலை, மன்னார் ஆகிய இடங்களினைச்சேர்ந்த நால்வர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருந்தனர்.

வழக்கினை விசாரணை செய்த யாழ். நீதிபதி பெ. சிவகுமார் அந் நால் வரினையும் எதிர்வரும் 8-ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (செ-4)

## வாகன விபத்தில் இருவர் காயம்

(கனகபுரம்)

தரித்து நின்ற கன்ரர் வாகனத்து டன் இ.போ.ச. பேருந்து மோதிய விபத்தில் இராணுவம் உட்பட இருவர் காயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக் கிழமை பி.ப 3 மணியளவில் கரடிப் போக்குச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

கரடிப்போக்குச் சந்தியில் தரித்து நின்ற கன்ரர் வாகனத்துடன் மட்டக்க ளப்பில் இருந்து யாழ் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இ.போ.ச. பேருந்து மோதியதில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மாத்தளையை சேர்ந்த குமார (வயது 23) என்ற இராணுவ சிப்பாயும் நிந்தவூரைச் சேர்ந்த ஏ. மூர்த்தி (வயது 22) என்ற நபருமே காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். (ம-259)

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

02.08.2013க்கான வினாவும் விடையும்:-
இந்துசமயத்தின் அடிப்படை நூல்கள் எவை?
விடை:- வேதங்கள், ஆகமங்கள்

03.08.2013: வினா:- இந்துமக்கள் வாழ்வில் பயன்படுத்தும் மங்கலப்பொருட்கள் ஐந்து குறிப்பிடுக?
விடை நாளை...

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு (01.09.2013) மாலை 4 மணிக்கும் 8 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கவும்.

சின்மயாமிஷன்
யாழ்ப்பாணம்

இல.9., செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### கல்வியின் அடிப்படை இலட்சியம்



❋ மனதிற்குள் புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வி. வெறும் புள்ளி விபரங்களை சேகரிப்பது கல்வியல்ல. மனதை ஒருமுகப்படுத்துவதே அதன் அடிப்படை இலட்சியம்.

❋ ஒவ்வொரு மனிதனும் கட்டளையிடவே விரும்பு கிறான். கீழ்ப்படிவதற்கு யாரும் தயாராக இல்லை. முதலில் கீழ்ப்படியக் கற்றுக்கொள். கட்டளையிடும் பதவி தானாக வந்து சேரும்.

❋ சிரத்தையோடு செயற்படுவதுதான் இப்போது நமக்கு அவசியமான ஒன்று. மனிதனுக்கு மனிதன் வேறுபடுத்திக் காட்டுவது இந்த சிரத்தை மட்டுமே.

❋ மனவலிமையுடன் சிரத்தை கொண்டவர்களாக மாறுங்கள். கேலிபேசுவது, புறம் பேசுவது, வீண் பொழுதுபோக்கு அம்சங்களில் கவனம் செலுத்துவதை அறவே கைவிடுங்கள்.

❋ சீர்திருத்தம் என்ற வார்த்தையைச் சொல்லத் தேவையில்லை. மாறாக முன்னேறிச் செல் என்று சொல்லுங்கள். சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக்கொண்டு முன்னேறுங்கள்.

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



அன்பு என்றால் என்னவென்று கூறமுடியாது. எது அன்பு அல்ல என்று கூற முடியும்! அன்பென்றால் ஏக்கம் அல்ல, அன்பென்பது உணர்ச்சியல்ல, அன்பு என்பது பற்றல்ல, அன்பென்பது உரிமை கொண்டாடுவதும் அல்ல. நீங்கள் இதுவா? இதுவா...? என்று கேட்டுக்கொண்டு போனால், நான் '' இல்லை, இல்லை, இல்லை'' என்று கூறிக் கொண்டேயிருப்பேன்.

நாங்கள் கூறும் அன்பை விபரிக்க இயலாது. அது அனுபவிக்கவேண்டிய ஒன்று. அதைப்பற்றிப்பேசி எந்தப் பயனும் இல்லை. ஏனெனில் உங்களுக்குத் தெரிந்த தெல்லாம் நிபந்தனைகளுடன் கூடியது. நான் கூறும் அன்புமுற்றிலும் நிபந்தனை யற்றது. அதற்குக் காரணமே கிடையாது. அது இருக்கும் அவ்வளவுதான். நாங்கள் உங்களை அந்த அன்பு நிலைக்கு அழைத்துச் செல்லவே விரும்புகிறோம். அப்போது நீங்கள் ஒரு நிறைவான மனிதனாகி விடுவீர்கள். நீங்கள் ஒரு மனிதனாக உங் களுடைய முழுத்திறனையும் உணர்ந்து கொண்டு விடுவீர்கள். இல்லையேல் நீங்கள் ஒரு மனிதனே அல்ல. இந்த அன்பைக் கண்டுபிடித்த அடுத்த கணமே எல்லாவற் றிலும் உள்ள தொடர்பினையும் கண்டுபிடிப்பீர்கள்.

இந்தத் தொடர்பு இல்லா விட்டால் வாழ்க்கை வாழ்வதில் அர்த்தமேயில்லை. அன்பைக் கண்டுபிடிக்கவேண்டும். அது நிகழவேண்டும். இதற்கு உங்களால் எதுவும் செய்ய முடியாது. என்னால் அதை உங்களுக்க கொடுக்கமுடியும். [illegible] என்று கூறவில்லை. நீங்கள் தீட்சை கொடுக்கும் போது உங்களாலும் அதை [illegible] கொடுக்கமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின்

## சிரேஷ்ட ஆசிரியர் திருமதி இராஜேஸ்வரி சோமசுந்தரம் அவர்களின்

# சேவை நயப்பு மலர் - 03.08.2013

### கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்டவர்



வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் 20 ஆண்டுகளுக்கு மேலாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி சேவையில் இருந்து ஓய்வு பெறும் திருமதி. சோமசுந்தரம் இராஜேஸ்வரி அவர்களின் பணிநயப்பு விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மாணவர்களுக்கு மிகுந்த ஈடுபாட்டுடனும் கடமையுணர்வுடனும் கல்வியினை வழங்கி உயர்ந்த பெறுபேறுகளை பெற்றுக் கொடுத்ததுடன் கல்லூரியின் வளர்ச்சியிலும் அக்கறையுடன் செயற்பட்டமை பாராட்டத்தக்கதாகும். இவர் தனது சேவைக்காலத்தில் இக்கல்லூரியின் அபிவிருத்திக்காக பூரணமான பங்களிப்பினை வழங்கியதுடன் இவரது கணவர் திரு.சோமசுந்தரம் அவர்களும் இப்பிரதேசத்தில் கிராம சேவை அலுவலராக சிறப்பாக பணியாற்றியதுடன் இக்கல்லூரியின் தேவைகளை நிறைவு செய்வதற்கும் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இறைபக்தியையும் அறவழியையும் அடிப்படையாகக் கொண்டு சமூகத்திற்கு ஆற்றிய பணியின் அறுவடையாக இவர்களது பிள்ளைகள் நல்ல நிலையில் இருப்பதும் ஆற்றிய சேவை நினைவு கூரத்தக்க விதத்தில் இருப்பதும் முக்கியமானதாகும். இவர் தனது ஓய்வுக் காலத்தில் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக நீண்டகாலம் வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திப்பதுடன் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*சி.சத்தியசீலன் செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்.*

### ஆசிரியத்துவம்



எமது பாடசாலையின் கல்விப் பணியில் அறிவு, ஆற்றல், ஆளுமை, அர்ப்பணிப்பு மிக்க சிறப்பார்ந்த உயரிய கல்விச் சேவையாளர்களில் முதல் இடத்திற்கு உரியவர் எம் மதிப்புக்குரிய திருமதி இ.சோமசுந்தரம் அவர்களே.


நல்ல ஆசிரியருக்கு முன்னுதாரணமாகிய அவர் தனது (30) வருடக் கல்விப் பணியில் 25வருட சேவையை எம் பாடசாலைக்கு அர்ப்பணித்திருப்பது அவரின் தன்னலமற்ற சேவைக்கு எடுத்துக் காட்டாகும்.

அவரின் அறிவு ஆற்றல் ஆளுமைக்குரிய பதவிகளையும் வகித்து தியாக மனப்பாங்குடன் எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்காக அரும் பணியாற்றியதை நன்றியுடன் போற்றுகின்றோம்.

இவ் ஆசிரியை சிறந்த பேச்சாளர் நிர்வாக நடைமுறைகளில் புலமை மிக்கவர். பிறருக்கு உதவுவதில் பின்நிற்காதவர். பாடசாலையின் பல்வேறு தேவைகளுக்கு தன் நிதியீந்தவர். அமைதியான சுபாவமும் எளிமையான வாழ்க்கை முறையும் கொண்டவர். ஆயினும் அநீதிகளைத் தட்டிக் கேட்கத் தயங்காதவர்.

இவரது பணி ஓய்வு எமது பாடசாலைக்கும் சமூகத்திற்கும் பெரும் இழப்பாகும். இருப்பினும் அவரின் ஆலோசனைகளும் வழிநடத்தலும் எதிர்காலத்திலும் எமக்கு கிடைக்கும் என உறுதியாக நம்புகின்றேன். பணி ஓய்வு பெறும் ஆசிரியர் அவர்களையும் அவர் குடும்பத்தினரையும் இறையருளுடன் வளமுடன் நலமுடன் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றேன்.

*திருமதி. பாலராணி ஸ்ரீதரன், அதிபர், யாழ். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.*



### இராஜேஸ்வரி சோமசுந்தரம்

| | |
|---|---|
| பிறப்பு | : 29.06.1955 |
| கல்வித் தகைமை | : B.A |
| தொழில் தகைமை | : பட்டப்பின் கல்வி டிப்ளோமா |
| சேவை | : 30 1/2 வருடங்கள் |
| முதல் நியமனம் | : 13.02.1982 |

**சேவை விபரம்**

வவுனியா/ ஓமந்தை மகா வித்தியாலயம்- ஆசிரியர்
யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

**3 வருடங்கள் பகுதித் தலைவர்**
**6 வருடங்கள் உப அதிபர்**

**குடும்ப விபரம் :**

கணவன் : இ.சோமசுந்தரம்
(முன்னாள் கிராம சேவை அலுவலர்)
பிள்ளைகள் : யாதவன், நீரஜா, லஷ்சியா

### வாழ்த்துகின்றோம்



திருமதி சோமசுந்தரம் ஆசிரியை அவர்கள் கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக எமது பாடசாலையில் மிகவும் திறமையான ஆசிரியராகவும் அத்துடன் பல காலங்கள் பிரதி அதிபராகவும் பதவி வகித்து வந்துள்ளார்.

இவர் பதவி வகித்த காலத்தில் கற்ற மாணவிகள் பலர் இன்று பற்பல பதவிகளில் மிளிர்கின்றனர். அத்துடன் தனது பதவிக்காலத்தில் சக ஆசிரியர்களினதும் மற்றும் மாணவர்களினதும் குடும்பங்களில் இடம்பெறும் சுக துக்க விடயங்களில் கலந்துகொண்டு பங்குகொள்வது இவரின் நல்ல குணங்களில் ஒன்றாகும். அத்துடன் பொதுவாக பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு தனது சரீர, பௌதீக உதவிகளையும் அவரும் அவரது குடும்பத்தவரும் வழங்கியிருந்தனர். ஐந்து ஆசிரியர்களின் கௌரவிப்பு வரிசையில் ஒருவராக விளங்கியிருந்தார். இப்படிப்பட்ட சேவையாளரை பாடசாலையும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பாராட்டுவதையிட்டு மிகவும் பெருமையடைகின்றோம்.

*இ.உதயகுமார், செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.*

### கல்லூரியின் உயர்வுக்கு மகத்தான சேவை ஆற்றியவர்



யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் பகுதித் தலைவராக, உப அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்றுச் சென்றுள்ள திருமதி. இராஜேஸ்வரி சோமசுந்தரம் அவர்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தனது 30 வருட ஆசிரியர் சேவையில் வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியிலும் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியிலும் ஆசிரியத்துவத்துக்குரிய அர்ப்பணிப்பான சேவையை வழங்கி நூற்றுக்கணக்கான நல்மாணாக்கர்களை உருவாக்கிய பெருந்தகை தனது ஓய்வுக் காலத்தில் நலமுடன் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி உயர்வான நிலையை நோக்கி வளர்ந்து வருகின்ற பெண்கள் கல்லூரி குறுகிய காலத்தில் பல சாதனைகளை நிலைநாட்டி வருகின்ற கல்லூரி. இக்கல்லூரியின் உயர்வுக்கும் சாதனைக்கும் திருமதி. இராஜேஸ்வரி சோமசுந்தரம் அவர்களது சேவை என்றும் மறக்க முடியாதவை.

அவரது ஆசிரிய சேவைக்கும் அவரது ஓய்வு காலத்திற்கும் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

*சி.நந்தகுமார், வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி.*

### நயப்பில் வியக்கின்றேன்...



மத்திய மகளிரின் மலர்விலே இணைந்து
நித்தமும் துணை நின்று வித்தைகள் பல தந்து
வானம்பாடியென வலம் வரும் குழந்தைகளை
அன்னை நிகர் அன்புடனே அரவணைத்து
ஞானமும் நல்வழியும் நாளும் தெளிவித்து
வானமும் வையகமும் புகழ்மலர்கள் சொரிந்திட
வெற்றி பல சுமக்கும் தோள்களின் பலமெனவே
முற்றில்லா வளமும் வலுவும் வழங்கியே
சிறப்பான சேவை ஈந்து ஓய்வுபெறும்
திருமதி இராஜேஸ்வரி சோமசுந்தரம் அவர்கட்கு
திருவொடு வாழ்வு மேலும் சிறக்க
திருவடி பணிந்து மனதார வாழ்த்துகின்றேன்.

*கவிதா தவேஸ்வரன் தலைவர், பழைய மாணவிகள் சங்கம், யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.*

### நல்ல வழிகாட்டி



எமது கல்லூரியின் ஆசிரியராக அரும்பணியாற்றிய எமது மதிப்புக்குரிய திருமதி.இ.சோமசுந்தரம் அவர்கள் தனது சேவையின் 30 வருடங்களில் எமது பாடசாலையில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக அர்ப்பணிப்பான சேவையை நல்கியதோடு ஆசிரியர்களின் நலன்களுக்காகத் தன்னையே அர்ப்பணிப்பு செய்தவர். எமது ஆசிரியர் நலன்புரிக்கழகத்தின் சிரேஷ்ட அங்கத்தவரான அவர் நலன்புரிக் கழகத்தின் காப்பாளராகவும் எமது சகல முன்னெடுப்புக்களிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி எமக்கு வழிகாட்டியவர்.

எமது ஆசிரியர் சிறந்த பேச்சாளராகவும் மற்றவர்களைத் தம்பக்கம் ஈர்க்கும் ஆற்றல் உடையவராகவும் சிறந்த தீர்ப்பை வழங்கும் நீதியாளராகவும் அன்புடனும் பண்புடனும் எம்முடன் சேவையாற்றி எமது கல்லூரியின் வரலாற்றின் பக்கங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார். அவர் ஓய்வு பெற்றாலும் அவருடைய வழிகாட்டல்கள் என்றும் எம்முடன் இருக்கும் என்று உறுதியாக நம்புகின்றேன்.

அவர் தனது ஓய்வுக்காலத்தில் குடும்பத்துடன் நிறைவான செல்வங்களைப் பெற்று வாழ இறையருள் வேண்டுவதோடு வாழ்வும் நலனும் சிறக்க எமது ஆசிரியர் குழாத்துடன் இணைந்து வாழ்த்துகின்றேன்.

*திரு.க.சத்தியசீலன் செயலாளர், ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.*

### நல்லாசிரியை



வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் ஆசிரியையாகவும் உப அதிபராகவும் பல ஆண்டுகள் சிறப்பான சேவையாற்றி மாணவர்களின் தமிழ்ப் பாட சித்தியினை மிக உயர் மட்டத்தில் பேண உறுதுணையாக இருந்தமை பாராட்டத்தக்கதாகும். இவரது அர்ப்பணிப்பான சேவை என்றும் கல்லூரியில் நிலைபெற்று இருக்கும். இவரது ஒய்வுகாலம் சிறப்பாக இருக்க இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

[illegible] நலன்விரும்பி.

(சி-4209)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜே.வி.பி. கண்டனம்....

சம்பவத்தில் 16 வயதான கஹறந்தவ ஆராச்சி லாகே தேன் அகில தினேஷ் என்ற இளைஞர் உயிரிழந்துள்ளார்.

தாக்குதல் தொடர்பில் பொலிஸாரும், வைத்தியசாலை தரப்பினரும் சரியான தகவல்களை வழங்குவதில்லை.

தமது உறவினர்கள், பிள்ளைகள் வீடுகளுக்கு வரும்வரை பிரதேச மக்கள் பார்த்து கொண்டிருக்கின்றனர்.

அந்த பிரதேசத்தில் இராணுவம் நிறுத்தப் பட்டுள்ளது. இராணுவ தடைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

தாக்குதலுக்கு பின்னர், வீட்டில் இருந்தவர்களை வீதிக்கு அழைத்துச் சென்று தாக்கியுள்ளனர்.

ரத்துபஸ்வல மக்கள் குடிக்க குடிநீர் கேட்டு பல நாட்கள் போராட்டம் நடத்தி வந்தனர். அன்றாட பாவனைக்காகவும் குடிக்கவும் அவர்கள் சுத்தமான தண்ணீரை கேட்டனர்.

தண்ணீர்கேட்ட மக்களுக்கு அரசாங்கம் இராணுவத்தின் ஊடாக துப்பாக்கி, பெட்டன் பொல்லுகள் மூலம் தாக்குதல் நடத்தி பதிலளித்தது.

போராட்டம் நடத்திய மக்களின் கை, கால்களை உடைத்து இறுதியில் கொலை செய்துள்ளது.

இராணுவம் நடத்திய இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை யும் கொலையையும் ஜே.வி.பி வன்மையாகக் கண்டிக்கின்றது.

அத்துடன் உயிரிழந்த இளைஞனின் குடும்பத்திற்கு அனுதாபங்களையும் தெரிவித்து கொள்கிறது என்றார்.(செ-11)

## பிரதேச மக்கள்....

செயற்பட்டிருக்கும் என்பதை தம்மால் உணர முடிந்ததாக வெலிவேரிய, ரத்துபஸ்வல பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இராணுவம் நடத்திய இத் தாக்குதலை, மிலேச்சத்தனமான, கொடூரமான தாக்குதல் என்று இந்த மக்கள் வர்ணித்தனர்.

முழு உலகமும் மதிக்கும் சர்வதேச போர சட்டத்தின் பிரகாரம் பாடசாலை, வைத்திய சாலை, மத வழிப்பாட்டு தலங்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடாது.

எனினும் இராணுவம் பிரதேசத்தில உள்ள கத்தோலிக்க தேவாலயத்திற்குள் புகுந்து துப்பாக்கி சூடு நடத்தியது என வெலி வேரிய ரத்து பஸ்வல மக்கள் குற்றம் சுமத்தினர்.(செ-11)

## விசாரணை அவ....

வெலிவேரியவில் நேற்று ஊடகவியலா ளர்களிடம் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த சம்பவம் தொடர்பிலான சகல விட யங்களை முன்வைத்து பாராளுமன்றத்தில் விசேட உரையொன்றை நிகழ்த்துவேன்.

சம்பவம் குறித்து விசேட நியாயமான, பக்கச்சார்பற்ற விசேட விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். சம்பவத்தில் ஒருவர் இறந்துள்ளார். அவரது மரண சடங்கை அமைதியாக நடத்த பொறுப்பு கூறவேண்டிய தரப்புகள் இடமளிக்க வேண்டும்.

ரத்துபஸ்வல மக்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைக்கு தீர்வு கண்டு, பிரதேசத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கையை வழமை நிலைமைக்கு கொண்டு வந்து அமைதி யான சூழலை ஏற்படுத்த வேண்டும்என்றார் (செ-11)

## எதிர்ப்பு....

தெரிவித்து திருச்சி விமான நிலைய வீதியில் கறுப்புக் கொடி காட்ட முயன்ற ம.தி.மு.க பொதுச செயலாளர் வைகோ உள்ளிட்ட ஆயிரக் கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே உள்ள ஓலைக் குடிப்பட்டியில் பெல் பவர் பிளாண்ட் பைப்பிங் யூனிட் என்ற பொய்லர் தொழிற்சாலையை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் விழா நேற்று வெள்ளிக் கிழமை இடம்பெற்றது.

இவ்விழாவில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நேற்று காலையில் திருச்சி சென்றார். இவரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருச்சி விமான நிலையத்திலிருந்து புதுக்கோட்டை செல்லும் வீதியில் அரசியல் கட்சியினர் கறுப்புக் கொடி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆயிரக்கணக் கானவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு இந்திய மத்திய அரசு துணை போவதாக தெரிவித்து கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் அங்குள்ள திருமண மண்டபம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக இந்தியச் செய்திகள் தெரிவித்தன. (செ-11)

## தனியார் காணிகளிலுள்ள....

கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாட்டத்தில் கடந்த 2009-ம் ஆண்டு 43 ஆயிரம் இராணுவத்தினர் நிலை கொண்டிருந் தனர். ஆனால் கடந்த 3 வருடங்களில் 30 ஆயிரம் இராணுவத்தினா இங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தற்போது 13 ஆயிரம் இராணுத்தினரே இங்கு நிலை கொண்டுள்ளனர். இந்த எண்ணிக்கையும் மிக விரைவில் குறைக்கப்படும்.

அத்தோடு யாழ்.மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயமாகவுள்ள வலிகாமம் வடக்கு-பலாலியில் அமைந்துள்ள இராணுவ் படைத் தலைமையகம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தனியாரின் காணிகள் மற்றும் வீடுகளிலுள்ள இராணுவத்தினர் விரைவில் அங்கிருந்து வெளியேறவுள்ளனர்.

பலாலி படைத் தலைமையகத்திலும் அரசாங்க காணிகளிலும் அந்த இராணுவத்தினர் முகாம் அமைத்து தங்கவுள்ளனர்.

மக்களின் பாதுகாப்புக்காகத்தான இராணுவத்தினர் இங்கு நிலை கொண்டுள்ளனர் எனவும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனக்கு தொலைபேசி எடுக்கும் போதெல்லாம் மக்களின் காணிகளை விட்டு எப்போது வெளியேறுவீர்கள் எனத் தொடர்ந்து அழுத்தம் கொடுப்பார் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்காக மக்களின் காணிகளை இராணுவத்தினர் விடுவிக்கவில்லை எனவும் ஏற்கெனவே திட்டமிடப்பட்டதன் அடிப்படையில் மக்களின் காணிகள் மற்றும் வீடுகள் விடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் 2009-ம் ஆண்டுக்கு பின்பு சுமார் 90 வீதமான தனியாரின் காணிகள் மற்றும் வீடுகளை இராணுவத்தினர் விடுவித்துள்ள தாகவும அவர் மேலும் தெரிவித்தார்.(செ-6)

## உள்ளக விசாரணை....

பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் தலைமையிலான இந்த விசாரணைக் குழுவை இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க நியமித்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

வெலிவேரிய நகரில் பொது மக்களின் போராட்டத்தைக் கட்டுப்படுத்த இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்துள்ளனர்.

சுத்தமான குடிநீர் கேட்டு போராட்டம் நடத்திய பிரதேச மக்கள் மீது இராணுவத்தினர் நடத்திய தாக்குதல்களை பல தரப்பினரும் கண்டித்துள்ளனர். (செ-11)

## அமெரிக்கா....

சம்பவம் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக தூதரகம் அறிவித்துள்ளது.

வெலிவேரிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப் போரணியொன்று வன்முறையாக் வெடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த சம்பவத்தில் ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் இராணுவத் திளரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். இந்நிலையில், அனை த்து தரப்பினரும் வன்முறைகளைக் கைவிட வேண்டுமென அமெரிக்கா கோரியுள்ளது.(செ-11)

## எங்களுடைய அரசு....

தமிழ் மக்களை சொந்த இடங்களில் மீள் குடியேற்றுவோம் எனவும் தெரிவித்தார்.

யாழ்.அரியாலைப் பகுதியில் 512 ஆவது படைப்பிரிவின் கட்டுப்பாட்டின் கீழிருந்த 35 வீடுகளும் 6 காணித் துண்டுகளும் நேற்று பிற்பகல் அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டது இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கும் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதிக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

என்னுடைய வெளிப்படையான உறுதியான நிலைப்பாடு எங்களுடைய அரசாங்கம், எங்களுடைய படையினர். இது நான் இன்று மாத்திரமல்ல ஆரம்பம் தொட்டு நீண்ட காலமாக சொல்லி வருகின்ற கருத்து.

தவிர்க்க முடியாத ஒரு யுத்தம் காரணமாக மக்களுடைய காணிகளையும் வீடுகளையும் இராணுவததினர் பயன்படுத்த வேண்டிய நிலைமை வந்தது. அப்போதும் நான் சொல்லியிருக்கின்றேன் நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்கத் தேவையில்லை. நிச்சயம் உங்களது காணிகளும் வீடுகளும் கிடைக்கும் ஆகையால் நம்பிக்கையுடன் இருங்கள் என்று கூறிவந்தேன்.

அதை நிரூபிக்கக்கூடிய வகையில் இன்றைய நிகழ்ச்சி அமைந்திருக்கின்றது. அது மாதிரமல்ல என்னிடம் ஒரு பட்டியலையும் தந்துள்ளனர்.

2009-ம் ஆண்டுக்கு பின்னர் இன்று வரை எவ்வளவு இடங்களை இராணுவத்தினர் விட்டு இருக்கின்றார்கள் என்பதும் எதிர்வரும் காலங்களில் விட இருக்கும் காணிகள் மற்றும் வீடுகள் பற்றியதே அந்த பட்டியல் எனக் கூறியபடி அந்தப் பட்டியலை மேடையில் அனைவரும் பார்க்கும்படி காட்டினார்.

அத்தோடு யாழ்மாவட்ட கட்டளைத் தளபதி தனதுரையின்போதும் குறிப்பிட்டிருந்தார், நான் அடிக்கடி தன்னைத் தொடர்பு கொண்டு அழுத்தம் கொடுப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அது உண்மைதான். அவரை ஒவ் வொரு முறையும் நான் சந்திக்கின்றபொழுதும் அதனையே வலியுறுத்தி வந்தேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

## அச்சுறுத்தல்....

ய்வுப் பிரிவினரோ அச்சுறுத்தவில்லை எனவும், அவ்வாறு அச்சுறுத்தும் தேவை படைத் தரப்பினருக்கு இல்லையெனவும் படைத் தரப்பின் பலாலி படைத் தலைமையகம் அண்மையில் வெளியிட்டிருந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா மற்றும் அக்கட்சியின் பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில்,

"வட மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களை படைத்தரப்பினர், புலனாய்வுப் பிரிவினர் மற்றும் ஒட்டுக்குழுவினர் அச்சுறுத்தி வருகின்றனர். தமக்கு விடுக்கப் பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பில் வேட்பாளர்கள் எம்மிடம் முறையிட்டுள்ளனர். ஆனால், படைத் தலைமையகம் தமது வழமையான பாணியில் இதனை மறுக்கின் றது.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் வேட்பாளர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளரிடம் நாம் முறையிட்டுள்ளோம்" என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

அதேபோன்று இது தொடர்பில் சுரேஸ் பிரேமச்சந்திரன் கருத்துத் தெரிவிக்கையில், "கடந்த சில தினங்களாகக் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்குப் படைத் தரப்பினர் தொடர்ந்து அச்சுறுத்தலை விடுத்து வருகின்றனர். இந்நிலையில், கூட்டமைப் பின் வேட்பாளர்களை அச்சுறுத்தவில்லை என்று பொய்களைக் கூறி அறிக்கை வெளியிட்டு அனைவரையும் ஏமாற்ற பலாலி படைத் தலைமையகம் முயலுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட வேட்பாளரான சட்டத்தரணி சயந்தனின் வீட்டுக்கு மூன்று தடவைகள் சென்ற படைத்தரப்பினர் அவரின் விவரங்களை அச்சுறுத்தும் வகையில் திரட்டியுள்ளனர். ஆனால், அவரின் வீட்டுக்கு படைத்தரப் பினர் சென்ற விடயத்தைப் பலாலி பாதுகாப் புப் படைத் தலைமையகம் நிராகரித்துள் ளதா? இல்லை. எனவே, பொய்யான அறிக் கைகளை வெளியிட்டு அனைவரையும் முட்டாளாக்கப் பார்க்கின்றது படைத்தரப்பின் பலாலி படைத் தலைமையகம்.

இந்நிலையில், எமது வேட்பாளர்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல், மிரட்டல் தொடர் பில் தேர்தல்கள் ஆணையாளரிடம் நாம் முறையிட்டுள்ளோம்" என்று சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.(செ-11)

## அதிக இராணுவம்....

நீண்டு செல்கிறது.

வடக்கில் முகாம்களில் உள்ள இராணுவத்தினரை இந்த பணிகளில் இருந்து விலக்கி வைக்காமல் தேர்தலை நடத்துவது எந்த வகையிலும் நேர்மையானதல்ல.

எனினும் செயற்பாடுகளை வரையறுக்க வேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கு இருக்கிறது. நாட்டின் தெற்கு பகுதிகளில் உள்ளது போல், பொலிஸாருக்கு சிவில் பணிகள் வழங்கப்பட வேண்டும்.

இதன்மூலம் தற்போதுள்ள பிரச்சினைக்கு தற்காலிகமாகவோ, குறுகிய காலத்திற்கோ தீர்வு காணமுடியும்.

வடக்கில் தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலை தெளிவாக உள்ளது. காரணம் யுத்தத் திற்குப் பின்னர் வடக்கில் பல தேர்தல்கள் நடத்தப்பட்டத்தை நாம் பார்த்தோம்.

ஆனால் தெற்கில் ஏனைய பிரதேசங்களில் இருக்கும் அரசியல் சுதந்திரம் வடக்கில் உள்ளது என்று கூறமுடியாது.

எனினும் கடந்த காலங்களில் பிரதேசத்தில் போக்குவரத்து வசதிகள் அதிகரிக் கப்பட்டுள்ளன. மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். அகதி முகாம்கள் மூடப்பட்டுள்ளன. இவ்வாறான முன்னேற்றமான பல விடயங்கள் நடந்துள்ளன.

இதனால் தேர்தல் நடத்தக் கூடிய தெளிவான சூழல் அங்கு காணப்படுகிறது. முன்னர் காணப்பட்ட கண்ணிவெடி அச்சுறுத்தல்கள், பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள் என அனைத்தும் நீங்கியுள்ளன.

மாகாண சபை தேர்தலை நடத்த தேவையான அடிப்படை கட்டமைப்புகள் சிறந்த முறையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

எனினும் அதில் மற்றுமொரு இருள் சூழ்ந்த பகுதிதான் அரசியல் சுதந்திரம். அது வடக்கில் இருக்கின்றதா என்பதை பல கோணங்களில் பல துறைகளில் விவாதிக்க முடியும்.

குறிப்பாக ஊடக சுதந்திரம் இருக்கின்றதா? பேச்சு சுதந்திரம் இருக்கின்றதா?. அரசியல் என்பது தாம் விரும்பி ஏற்றுக் கொள்ளும் நிலைப்பாடு. தாம் ஏற்றுக் கொண்டதை நாம் நம்புவதை பிறருக்கு கூறும் சுதந்திரம் மனிதர்களுக்கு இருக்க வேண்டும் என்றார். (செ-11)


# மரண அறிவித்தல்கள்



## செல்லத்துரை திருநாவுக்கரசு

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி, வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், இல. 83, பத்திரகாளி கோவிலடி வண். வடமேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை திருநாவுக்கரசு நேற்று (02.08.2013) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் : குடும்பத்தினர்
077-0043123. 077-6855103
077-1710782

(3530)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வதிவிடமாகவும் கொண்ட

## ஸ்ரீமதி விஜயலட்சுமி அம்மா நடராஜக் குருக்கள்

நேற்று (02.08.2013) வெள்ளிக்கிழமை இரவு சிவபதமடைந்துவிட்டார். அன்னார் சுவாமி நாதக் குருக்கள் - வாழம்பிகை தம்பதிகளின் அன்பு மகளும் நடராஜக் குருக்களின் அன்பு மனைவியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 04.08.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

(3531)

தகவல் : குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மிக உயர்தரம் கொண்ட மணல் விற்பனைக்கு

கட்டட வேலைகளுக்கு தேவையான யாழ் நாகர் கோவில் மணல் உள்ளடங்கலாக மணல் தேவைப்படுபவர்கள் குறிப்பிட்ட இடங்களிலேயே விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
வட பிராந்தியக் காரியாலயம்.

**ஈஸ்வரபகவான் & கம்பனி**
வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்
91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.

0770035091 (விண்ணன்) 0770035088 (முருகதாஸ்)
0770035092 (பகீரதன்) 0770035110 (கிரி)

(C-4196)


## குற்றம் புரிந்தோரென....

ஈடுபட்ட 02 பேரும், மதுபோதையில் கலகம் விளைவித்த 07 பேரும், திருட்டு மின்சாரம் பெற்ற 16 பேரும், கொள்ளையடித்த 05 பேரும், பாலியல் துஷ்பிரயோகம் புரிந்த ஒருவரும், பாதுகாப்புக் காரணமாக சரணடைந்த ஒருவருமாக 114 பேர் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிற்குள் அனுமதியின்றி சாராயம் விற்பனை செய்த 02 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 24 பெரும், சந்தேகத்தின் பேரில் 14 பேரும், மது போதையில் வாகனம் செலுத்தி ஒருவரும், ஏனைய குற்றச் சாட்டுக்களில் 63 பேருமாக மொத்தம் 104 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார். (செ-4)


**கடை கட்டிடங்கள் விற்பனைக்கு**

பரந்தன், யாழ்ப்பாணம் – கண்டி வீதி, பரந்தன் சந்தியிலிருந்து முல்லைத்தீவு வீதியில் 150 யார் தூரத்திற்குள் ஒவ்வொன்றும் பதினைந்து அடி அகலமும் 105 அடி நீளமும் கொண்ட நான்கு கடைகள் தனித் தனியாகவோ மொத்தமாகவோ விற்பனைக்கு உண்டு.
K. முருகன் : 0775272093
P. சிங்கம் : 0776027324, 021 228 0020
(C-4199)

**உலகின் எந்த மூலைக்கும் படிக்க உழைக்க எம்மிடம் மட்டுமே...**
**டென்மார்க்கில் படிக்க இரண்டு லட்சம் வரை உழைக்க**
சட்ட ஆலோசனைக்கு :
*தீசைகாட்டி (பிறைவேற்) லிமிற்*
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(C-4208)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 ½ Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.
(C-4202)

**Diploma In English** (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 ½ Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** [வயதெல்லை : 7 - 12]
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
|---|---|---|---|
| 05-08-2013 | 10-08-2013 | 12-08-2013 | 17-08-2013 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

**Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**
விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுகள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம் தொடர்புகளுக்கு - 0212224040 / 0772981062

**ஆவணி விடுமுறையில் ஆங்கில வகுப்புக்கள்**
**ஆசிரியர்களிற்கும் மாணவர்களிற்கும்**
யாழ்ப்பாணம், மானிப்பாய், சாவகச்சேரி, கிளிநொச்சிப் பகுதிகளில்
யாழ் குடாநாட்டில் முன்னணி வகிக்கும் சர்வதேசப் பாடசாலையால் வழங்கப்படுகின்றது.

E101 : BEGINNING ENGLISH Fee: Rs.1000/=
Ideal for Pre-School Kids (4+,5+)
இந்த வகுப்புக்கள் கிளிநொச்சிப் பிள்ளைகளிற்கு இலவசமாக வழங்கப்படும்.



ANGEL INTERNATIONAL SCHOOL: A School of Excellence.

**August Holiday Courses in English**
**For Both Teachers and Students**

E201 : SPOKEN ENGLISH Fee: Rs.1500/=
Ideal for Grades 1–5 Students
E301 : TEACHING IN ENGLISH Fee: Rs.2000/=
Ideal for School Teachers
இவ்விரு வகுப்புக்களும் யாழ்ப்பாணத்திலும் மானிப்பாயிலும் மாத்திரமே வழங்கப்படும்.

- An entrance exam will be required for E201 & E301.
- Classes are taught by lecturers from Sri Lanka, USA, UK and Australia.
- Every course includes theory and application.
- For those completing the courses a certificate will be offered by

PROFESSOR ALEX THEVARANJAN, SYRACUSE UNIVERSITY, U.S.A.
Principal, ANGEL INTERNATIONAL SCHOOL.
(C-4201)

Classes meet Mondays - Fridays, 8am-1pm during August 5th - 30th, 2013.
பதிவுகளிற்கும், மேலதிக விபரங்களிற்கும் : 077 322 6960 / 077 50 40 450.

தற்போது யாழ் நகரில்...
ரூபா 75000.00 (குறைந்த பட்சம்) மாத வருமானம் தரும் தொழில் வாய்ப்புக்களை உத்தரவாதப்படுத்தும் 6 மாத தீவிர பாடநெறி.



இலங்கையில் BCAS CAMPUS மாத்திரமே வழங்கும்

**CAD & BS** Computer Aided Design & Building Studies
With **MEP** Mechanical Electrical & plumbing

மிக வேகமாக வளர்ந்து வரும் உலகளாவிய கட்டட நிர்மாணத்துறையில் கணணி பட வரைஞர்களுக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குமான வேலை வாய்ப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன. கணணி முறைப் படம் வரைதலில் சிறப்புத் தேர்ச்சியும் (Expert knowledge in CAD) கட்டட நிர்மாணத் தொழில் நுட்பங்கள் தொடர்பான அடிப்படை அறிவும் கொண்டோர்களுக்கான ஏராளமான தொழில் வாய்ப்புக்கள் மத்திய கிழக்கிலும் ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்றன. அதேவேளை கூடுதல் வருமானமும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் கடந்த 14 வருடங்களுக்கும் மேலாக உயர்கல்வி வாய்ப்புக்களையும் தொழிற் பயிற்சிப் பாடநெறிகளையும் வழங்கிவரும் முன்னணி நிறுவனமான BCAS CAMPUS மாத்திரமே வழங்கும் CAD & BS பாடநெறி உடனடித் தொழில் வாய்ப்பை உத்தரவாதப்படுத்தும் மேற்குறிக்கப்பட் திறன்களைப் பெற்றுத் தருவதோடு சர்வதேச அங்கீகாரம் கொண்ட இரட்டைத் தகைமைகளையும் பெற்றுத் தருகிறது. CAD & BS பாடநெறியினைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் அனைவரும் உடனடித் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அதே வேளை பெரும்பான்மையானவர்கள் BCAS CAMPUS இன் உதவியுடன் மத்திய கிழக்கில் CAD Draughtsman, Construction Supervisor, Junior Quantity Surveyors, Land Surveying Assistant ஆகிய தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்...

**Duration : 6 Month**
பாடநெறி முடிவில் இரட்டைத் தகைமைகள்
- Professional Diploma in CAD
- Certificate in Building Studies.

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131
Building Careers - Transforming Lives
www.bcas.lk | ISO 9001:2008 CERTIFIED | 14 Years of Trust & Excellence in Higher Education
(C-4210)
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org